

புதுடில்லி அரசு
பக். 6



பக். 7



அபிவிருத்திப் பணிகள்
பக். 9



பக். 23



கூடிய வெப்பநிலை 27 °c
குறைந்த வெப்பநிலை 22 °c
பனி கூடிய காலநிலை எதிர்பார்க்கப்படுகின்றது.

# உதயன்

பக்கம் : 24
வன்னி : ரூபா.20
யாழ். : ரூபா.20
கொழும்பு : ரூபா.30

UTHAYAN - A Lively National Tamil Daily

சுடர்: 29 கதிர்: 077 வள்ளுவர் ஆண்டு: 2045 தை 29, செவ்வாய் 11.02.2014




வவுனியா அட்டமஸ்கட சிறுவர் இல்லத்தில் துஷ்பிரயோகத்துக்கு உள்ளான சிறுவர்களுக்கு நீதி வழங்குமாறு கோரி நேற்று வவுனியாவில் ஆர்ப்பாட்டம் ஒன்று இடம்பெற்றது. பாதிக்கப்பட்ட சிறுவர்கள், அவர்களின் பெற்றோர்கள் ஒன்றிணைந்து வவுனியா தபால் நிலையத்திலிருந்து வவுனியா மாவட்ட செயலகம் வரை பேரணியாகச் சென்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். பாதிக்கப்பட்ட குடும்பங்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு அவர்கள் இதன் போது கோரிக்கை விடுத்தனர். (த-402)

## வடக்கு முதல்வர் உரை; ஜனாதிபதி விசாரணை

*யாழ்ப்பாணம்,பெப்.11*

வடக்கு முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் வரணி மகா வித்தியாலயத்தில் நிகழ்த்திய உரை தொடர்பில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளதாக நம்பகரமாகத் தெரியவருகின்றது.

'கர்மவினை எவரையும் விட்டு வைக்காது.நாம் முன்னர் செய்த கருமங்களுக்கே இப்பொழுது பலனை அனுபவிக்கின்றோம்.சர்வாதிகாரிகளாக இருந்த எகிப்தின் முபாரக், ஈராக்கின் சதாம் ஹூசைன்,பாகிஸ்தானின் முஷாரப் ஆகியோர் இருந்த நிலை என்ன என்பதையும் இறுதியில் அவர்களுக்கு என்ன நடந்தது என்பதையும் உணர்ந்து கொள்ள வேண்டும்' என்று முதலமைச்சர் தனது உரையில் தெரிவித்திருந்தார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை மறைமுகமாகச் சாடியே, வடக்கு முதல்வர் இவ்வாறு தெரிவித்திருப்பதாக ஜனாதிபதிக்குச் சம்பந்தப்பட்ட தரப்பினர் போட்டுக் கொடுத்துள்ளதாகவும் ,இதனடிப்படையில் இது தொடர்பில் முழுமையான விசாரணை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்குமாறு அவர் உத்தரவிட்டுள்ளதாகவும் நம்பகரமாக அறியமுடிகின்றது. (த-5)

## பெண்ணை எரித்து கொல்ல முயன்ற ஒருவருக்கு ஒத்திவைத்த சிறை

யாழ்ப்பாணம், பெப் 11

பெண் ஒருவருக்கு மண்ணெண்ணெய் ஊற்றி எரித்துக் கொலைசெய்ய முற்பட்டவருக்கு அபராதமும் 5 வருடத்துக்கு ஒத்திவைக்கப்பட்ட சிறைத் தண்டனையும் விதித்த நீதிமன்றம், பாதிக்கப்பட்டவருக்கு 20 ஆயிரம் ரூபா நஷ்டஈடு வழங்கவும் உத்தரவிட்டது. ஊர்காவற்றுறை நீதிமன்றில்

21 ஆம் பக்கம் பார்க்க

## இந்தியப் பாதுகாப்பு அமைச்சருடன் இலங்கை கடற்படை பேச்சு

புதுடில்லி, பெப். 11

இலங்கைக் கடற்படைத் தளபதி ஜயநாத் கொலம்பகே மற்றும் இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் ஏ.கே.அந்தோனி, கடற்படைகளின் பிரதானி அட்மிரல் டி.கே ஜோசி ஆகியோருக்கு இடையில் இந்தியாவில் நேற்று முக்கிய சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

இலங்கை - இந்திய மீனவர் பிரச்சினை மற்றும் கடற்பாதுகாப்பு குறித்து இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் ஏ.கே.அந்தோனியும் இலங்கைக் கடற்படைத் தளபதி ஜயநாத் கொலம்ப கேயும் கருத்துக்களைப் பரிமாறியுள்ளனர் எனத் தெரியவருகிறது.

இலங்கை - இந்திய மீனவர் பிரச்சினை தொடர்பில் கடற்றொழிற்துறை அமைச்சர் ராஜித சேனாரத்ன டில்லியுடன் அண்மையில் முக்கிய பேச்சுகளில் ஈடுபட்டார். இதையடுத்துக் கைதுசெய்யப்பட்டு தடுப்பிலிருந்த இருநாட்டு மீன

21 ஆம் பக்கம் பார்க்க

## வாக்கு வேட்டைக்கு ஜெனிவா விவகாரம்

*கையிலெடுத்தது அரசு*

கொழும்பு, பெப். 11

எதிர்க்கட்சிகள் கூறியதைப் போன்று ஜெனிவா மாநாடு விவகாரத்தைத் தேர்தல் பரப்புரைக்காக அரசு கையிலெடுத்துள்ளது. இதனை உறுதிப்படுத்தும் வகையில் நேற்றைய மாநாட்டில் அமைச்சர்கள், "ஜெனிவா சவாலை முறியடிக்க வேண்டுமெனில் வெற்றிலைச் சின்னத்துக்கே வாக்க

21 ஆம் பக்கம் பார்க்க

## தேர்தல் வன்முறை தெற்கில் மோசம்

கொழும்பு, பெப். 11

தெற்கு தேர்தல் களத்தில் பரப்புரைப்போர் சூடுபிடித்து வரும் நிலையில், மறுபுறத்தில் தேர்தல் வன்முறைச் சம்பவங்களும் தலைதூக்க ஆரம்பித்துள்ளன. தேர்தல் சட்டவிதி மீறல்கள் தொடர்பில் நேற்று வரை தமது அமைப்புக்கு 117 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன என்று நீதியா

21 ஆம் பக்கம் பார்க்க

# தனியார் காணிகளை சுவீகரிக்கமாட்டோம்

## *யாழ்ப்பாணத்தில் கூறினார் காணி அமைச்சர்*

யாழ்ப்பாணம்,பெப்.11

பாதுகாப்புத் தேவைக்காகத் தனியார் காணிகள் இனி மேல் எடுக்கப்படமாட்டாது. அத்துடன் சுவீகரிப்புக்குட்பட்ட தனியார் காணிகளுக்கு எதிர்வரும் மார்ச் மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் நஷ்டஈடு வழங்கப்படும் என்று காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோன் நேற்று யாழ்ப்பாணத்தில் தெரிவித்தார்.



கூட்டத்தில் கலந்துகொண்ட காணி அமைச்சர், யாழ். அரச அதிபர்

யாழ். மாவட்டத்துக்கு நேற்று வருகை தந்த காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோன் தலைமையில் மாவட்டச் செயலகத்தில் விசேட கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது. இதில் யாழ்.மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம், மேலதிக அரச அதிபர் திருமதி ரூபிணி வரதலிங்கம், 15 பிர

21 ஆம் பக்கம் பார்க்க

## பிரதேச செயலக ஊழியர் படையினரை மதிப்பதில்லை

*காணி அமைச்சரிடம் நேற்று போட்டுக் கொடுத்த பிரிகேடியர்*

யாழ்ப்பாணம்,பெப்.11

காணி சுவீகரிப்பு நடவடிக்கைகளுக்காகப் பிரதேச செயலகத்துக்குச்சென்றால் அங்குள்ள ஊழியர்கள் தம்மை மதிப்பதில்லை என்றும்,அந்த நடவடிக்கைக்கு ஒத்துழைப்பு வழங்குவதில்லை என்றும் அமைச்சரிடம் அரச அதிகாரிகளைப் போட்டுக் கொடுத்தார்

21 ஆம் பக்கம் பார்க்க

## 58 எலும்புக் கூடுகள் நேற்றுவரை மீட்பு

மன்னார், பெப் 11


மன்னார் திருக்கேதீஸ்வரம் பகுதியில் கண்டு பிடிக்கப்பட்ட மனிதப் புதைகுழியைத் தோண்டும் நடவடிக்கை நேற்று மீண்டும் ஆரம்பிக்கப்பட்டது.

நேற்று 20ஆவது தடவையாகப் புதைகுழி தோண்டப்பட்டபோது மேலும் மூன்று மனித எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டுள்ளன.

கடந்த மாத இறுதியில் நிறுத்தப்பட்ட புதைகுழி தோண்டும் பணி நேற்றுத் திங்கட்கிழமை மீண்டும் ஆரம்பமானது.

மன்னார் நீதிமன்ற நீதிபதி ஆனந்தி கனகரட்ணம் முன்னிலையில் அநுராதபுரம் சட்ட வைத்திய நிபுணர் டி.எல். வைத்தியரட்ண தலைமையிலான குழுவினர் நேற்றுப் பணிகளை ஆரம்பித்தனர்.

21 ஆம் பக்கம் பார்க்க



நேற்று மீட்கப்பட்ட எலும்புக் கூடு ஒன்று

## யாழில் காணி இல்லாதோருக்கு அவற்றை வழங்க நடவடிக்கை

*மருதங்கேணியில் முதலில் பணிகள் ஆரம்பம்*

யாழ்ப்பாணம்,பெப்.11

யாழ்.மாவட்டத்தில் காணியற்றோரைப் பதிவு செய்து அவர்களுக்குக் காணிகள் வழங்குவதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தியுள்ள காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சர், முதலில் மருதங்கேணி பிரதேச செயலாளர் பிரிவில் இந்த நடவடிக்கை ஆரம்பிக்கப்படும் என்றும் தெரிவித்துள்ளார்.

21 ஆம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ரயில் பாதை அமைப்புக்கு எதிராக மீண்டும் மக்கள் போராட்டம்

தென்மராட்சி, பெப்.11

வாக்குறுதி மீறப்பட்டதால் மக்கள் மீண்டும் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

சாவகச்சேரி மருத்துவ மனைக்கு அருகில் உள்ள ஆயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் பயன்படுத்தும் சப்பச்சி மாவடி ரயில்பாதை அமைக்கும்போது தண்டவாளங்கள் வைக்கப்பட்டுப் போக்குவரத்து தடை செய்யப்பட்டது.

இதனையடுத்து மீண்டும் இவ் வீதியை மக்கள் பயன்படுத்த வீதி அமைத்து தரவேண்டுமென கடந்த வாரம் மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். அங்கு வந்த ரயில் திணைக்கள அதிகாரிகள் வீதி அமைத்துத் தருவதாக வாக்குறுதி அளித்ததையடுத்து மக்கள் போராட்டத்தைக் கைவிட்டனர்.

விநாசித்தம்பி வீதியிலிருந்து உப பாதை அமைக்க ஏற்பாடுகள் மேற்கொண்டு வருவதையடுத்து நேற்று மக்கள் மீண்டும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். (த-9)

# காணாமற்போனோர் ஆணைக்குழு அரசின் கண் துடைப்பு நடவடிக்கை

### ஜப்பான் அதிகாரியிடம் கூறினார் மாகாண சபை உறுப்பினர்

யாழ்ப்பாணம்.பெப..11

போரின்போது சரணடைந்தவர்கள், காணாமல்போனவர்களின் விபரங்கள் இதுவரை தெரியப்படுத்தப்படவில்லை. காணாமற் போனோர் தொடர்பில் அரசினால் அமைக்கப்பட்டுள்ள ஆணைக்குழு அரசின் வெறும் கண்துடைப்பு என்று வடக்கு மாகாண சபை பிரதி அவைத் தலைவர் ம.அன்ரனி ஜெகநாதன் ஜப்பானியத் தூதராலயத்தின் அரசியல் பிரிவு அதிகாரியிடம் சுட்டிக்காட்டினார்.

ஜப்பானியத் தூதரகத்தின் அரசியல் பிரிவு அதிகாரி நவொகொ குராமொச்சி அண்மையில் முல்லைத்தீவுக்குப் பயணம் செய்தார். இதன்போது அவர் வடக்கு மாகாண சபைப் பிரதி அவைத் தலைவர் ம.அன்ரனி ஜெகநாதனைச் சந்தித்து கலந்துரையாடினார்.

இதன்போது அவர் ஜப்பான் அதிகாரியிடம் தெரிவித்ததாவது:-

2009ஆம் ஆண்டு மே மாதம் முள்ளிவாய்க்காலில் இடம்பெற்ற போர் அரசினால் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்ட தமிழின அழிப்பின் செயற்பாடாகும்.

வன்னியில் இறுதிக்கட்டப் போர் இடம்பெற்றவேளை பாதுகாப்பு வலயம் என்ற ஒன்றை ஏற்படுத்தி அதற்குள் வலுக்கட்டாயமாகத் தமிழ்மக்களை இழுத்து எந்த வித பாராபட்சமும் காட்டாது குண்டு போட்டு அழித்தது அரசு. காயப்பட்டவர்களைக் கொண்டு செல்வதற்குக் கூடப் போக்குவரத்து வசதிகள் செய்துகொடுக்கப்படவில்லை. இதனால் எத்தனையோ தமிழ் மக்கள் தங்கள் உயிர்களை மாய்த்துக் கொண்டார்கள்.

இதனைத்தான் இந்த அரசு மனிதாபிமான நடவடிக்கை என்று உலக நாடுகளுக்குப் பறை சாற்றுகின்றது.

போர்ச்சூழலில் அகப்பட்ட மக்களுக்கு உணவு கொடுக்காமல் வெறுமனே 1000 பேருக்கு உணவு கொடுத்துவிட்டு அனைவருக்கும் போதியளவு உணவு கொடுத்திருக்கின்றோம் என்று சர்வதேசத்தை முழுக்கமுழுக்க ஏமாற்றியது அரசு. இப்போதும் இதனைத் தான் செய்கிறது.

போரின்போது சரணடைந்தவர்கள், காணாமற்போனவர்கள் பற்றிய விவரங்கள் இதுவரை தெரியப்படுத்தப்படவில்லை. கண் துடைப்புக்காக அரசால் நிறுவப்பட்ட காணாமற்போனோர் தொடர்பான ஆணைக்குழு இதுவரை செய்தது என்ன?

இந்த நாட்டிலே ஊடக சுதந்திரம் மறுக்கப்பட்டுள்ளது. உண்மையை வெளிப்படுத்தும் ஊடகவியலாளர்கள் பல வழிகளில் அச்சுறுத்தப்பட்டும் கொலை செய்யப்பட்டும் தண்டிக்கப்பட்டும் வருகின்றார்கள்.

மக்களால் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை எந்தவொரு செயற்பாடுகளையும் செய்ய விடாமல் முடக்குகிறது அரசு- என்று கூறினார். (த-14)



வடக்கு மாகாண சபை பிரதி அவைத் தலைவர் ம.அன்ரனி ஜெகநாதனை ஜப்பானிய தூத ராலயத்தின் அரசியல் பிரிவு அதிகாரி நவொகொ குராமொச்சி சந்தித்த போது



முல்லைத்தீவு மணற் குடியிருப்புக் கடலில் நேற்று மீனவர் ஒருவரின் வலையில் இரண்டு இராட்சதத் திருக்கைகள் சிக்கின. ஒவ்வொன்றும் 1000 கிலோ நிறையுடையன என்றும் ஒரு திருக்கை 80 ஆயிரம் ரூபா விலை போனதாகவும் தெரிவிக்கப்பட்டது.

## மகாவலியை இரணைமடுவுடன் இணைப்பார் ஜனாதிபதி மஹிந்த

### கிளிநொச்சியில் கமநல பிரதியமைச்சர் கருத்து

கிளிநொச்சி, பெப்.11

மகாவலி ஆற்றை இரணைமடு குளத்துடன் இணைக்கும் வேலைத்திட்டங்களுக்கு ஜனாதிபதி நடவடிக்கை மேற்கொள்ளவுள்ளார். வெகு விரைவில் இந்த திட்டம் நடைமுறைக்கு கொண்டு வரப்படும். இவ்வாறு தெரிவித்தார் கமநல அபிவிருத்தி பிரதி அமைச்சர் எஸ்.என். சந்திரசேன தெரிவித்தார்.

கிளிநொச்சி அரச செயலகத்தில் நேற்று நடைபெற்ற விவசாயிகளுக்கான ஓய்வூதியம் வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது.

நான் ஒரு விவசாயியின் மகன். இப்போதும் நான் விவசாயத்தில் ஈடுபட்டு வருகிறேன். எனவே என்னால் விவசாயிகளின் உணர்வுகளை அறிய முடியும்.

**நான் ஒரு விவசாயியின் மகன். இப்போதும் நான் விவசாயத்தில் ஈடுபட்டு வருகிறேன். எனவே என்னால் விவசாயிகளின் உணர்வுகளை அறிய முடியும்.**

வட மாகாணத்தில் விவசாயிகள்தண்ணீருக்குப் பெரும்நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளனர். இரணைமடுவுக்கு மகாவலி நீரைக் கொண்டு வரும் முயற்சியில் அரசு இறங்கியுள்ளது. இதன் மூலம் வட மாகாண விவசாயிகளின் தண்ணீர் தேவையைத் தீர்க்க முடியும் - என்றார்.

கிளிநொச்சி அரச அதிபர் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் வட மாகாண சபை எதிர்க் கட்சி உறுப்பினர்கள் வை.தவநாதன், எஸ்.தனபால, வவுனியா அரச அதிபர் பந்துல ஹரிச்சந்திர, முல்லைத்தீவு அரச அதிபர் என்.வேதநாயகன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இதில் 375 விவசாயிகளுக்கு ஓய்வூதியமாக தலா 5000 ரூபாவுக்கான காசோலைகள் வழங்கப்பட்டன. (ஜ-18)

# நாட்டுப் படகு மீனவர்கள் இன்று முற்றுகைப் போர்

சென்னை, பெப். 11

தடை செய்யப்பட்ட வலைகள், விசைப்படகுகளை மீனவர்கள் பயன்படுத்துவதைத் நிறுத்தக்கோரி இராமேஸ்வரம் மற்றும் பாம்பன் பகுதிகளைச் சேர்ந்த நாட்டுப்படகு மீனவர்கள் இன்று கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தவுள்ளதாக அறிவித்துள்ளனர்.

தமிழக விசைப்படகு மீனவர்கள் இரட்டை மடி மற்றும் சுருக்கு மடி போன்ற வலைகளைப் பயன்படுத்தி மீன்பிடித் தொழிலில் கடந்த 40 ஆண்டுகளாக ஈடுபட்டுள்ளனர்.

இதனால் கடல் வளம் விரைவாக அழிவடைந்து வருகிறது. இத்தகைய மீன்பிடி முறைகளுக்கு ஏற்கனவே தமிழக அரசு தடை விதித்துள்ளது. எனினும் விசைப்படகு மீனவர்கள் பலர் தடை செய்யப்பட்ட வலைகளைப் பயன்படுத்தி தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர்.

இத்தகைய மீன்பிடி முறைகளை தடுத்து நிறுத்தக்கோரி ராமேஸ்வரம் மற்றும் பாம்பன் பகுதி நாட்டுப்படகு மீனவர்கள் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை முதல் காலவரையற்ற வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.



பாம்பன் மீனவர்கள் வேலை நிறுத்தத்தில்.

இதன் அடுத்தகட்டமாக மீன்வளத்துறை அலுவலகத்தை முற்றுகையிட்டுத் தாம் கண்டன ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்த உள்ளதாகவும் அவர்கள் அறிவித்துள்ளனர்.

இது குறித்து நாட்டுப் படகு மீனவர் சங்கப் பிரதிநிதி ராயப்பன் கருத்துத் தெரிவிக்கையில்,

விசைப்படகு மீனவர்கள் தடை செய்யப்பட்ட இரட்டை மடி, சுருக்குமடிகளைப் பயன்படுத்தி வருகின்றனர். இதனால் கடலில் மீன் வளம் முற்றாக அழிக்கப்படுகிறது. இதனைக் கண்டித்து நாம் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றோம். இதன் தொடர்ச்சியாக நாளை (இன்று) ராமேஸ்வரம் மீன்வளத்துறை அலுவலகத்தை முற்றுகையிட்டு போராட்டம் நடதத உள்ளோம் - என்றார். (ஜ-10)

## டெங்கு பரவும் இடங்களுக்கு சிவப்பு அறிவித்தல்

சாவகச்சேரி பிரதேச சபையின் 101 நாள் வேலைத் திட்டத்தில் டெங்கு நுளம்பு உற்பத்தியாகக் கூடிய இடங்களாகக் காணப்படுபவைகளுக்கு சிவப்பு அறிவித்தல் சுட்டுத் துண்டு ஒட்டும் பணிகள் நேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் காணப்படும் பற்றைக் காணிகள், மரப் பொந்துக்கள், பிளாஸ்ரிக் பொருள்கள், ரயர்கள், பழைய தகர டின்கள், போத்தல்கள் போன்ற பொருள்கள்காணப்படும் இடங்கள் இனங்காணப்பட்டு சிவப்பு அறிவித்தல்கள் ஒட்டும் பணிகள் அந்தந்த பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

டெங்கு நுளம்பு உற்பத்தியாகக் கூடிய இடமாக இனங்காணப்பட்டுள்ளதால் இன்றிலிருந்து 14 நாள்களுக்குள் துப்புரவு செய்யுமாறு காணி உரிமையாளர்கள் அல்லது பராமரிப்பாளர்களின் கவனத்திற்கு என குறிப்பிடப்பட்டு சிவப்பு அறிவித்தல் ஒட்டப்பட்டுள்ளன. (த-9)

## வலி. கிழக்கு வரவு - செலவுத் திட்டம் வர்த்தமானி ஊடாக நடைமுறைக்கு

### நடவடிக்கை எடுத்தார் வடக்கு முதலமைச்சர்

யாழ்ப்பாணம்,பெப்.11

வலி.கிழக்குப் பிரதேசசபையின் வரவு - செலவுத் திட்டத்தை சபையின் செயலாளர் ஊடாக நடைமுறைப்படுத்துவதற்கு அதிகாரமளித்து. வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி. விக்னேஸ்வரன் வர்த்தமானி மூலம் அறிவித்துள்ளார்.

வலி.கிழக்குப் பிரதேச சபையின் 2014 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் சபையில் கடந்த ஆண்டு சமர்ப்பிக்கப்பட்டு தோற்கடிக்கப்பட்டிருந்தது.

இதனால் தவிசாளர் அ.உதயகுமார் பதவியிழந்திருந்தார். அத்துடன் வரவு - செலவுத் திட்டம் நிறைவேற்றப்படாமையால் ஊழியர்களுக்குரிய கடந்த மாதச் சம்பளம்வழங்குவதிலும் இடர்கள் ஏற்பட்டிருந்தன.

இறுதியில் பிராந்திய உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலகத்தினூடாக ஊழியர்களுக்குரிய சம்பளம் வழங்கப்பட்டிருந்தது. ஆனாலும் இந்தப் பிரச்சினையை நிரந்தரமாக தீர்க்க முதலமைச்சர் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

இந்த நிலையில் கடந்த 7 ஆம் திகதி 1848/31 ஆம் இலக்க வர்த்தமானி மூலம், 2014 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தை நடைமுறைப்படுத்தும் அதிகாரத்தை செயலாளரிடம், வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் கையளித்துள்ளார். (ஜ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதக் கழிவிலிருந்து பசளை தயாரிப்பு; வடக்கில் முதன் முதலாக மன்னாரில்

## பாப்பாமோட்டையில் 67 மில்லியன் ரூபா செலவில் பணிகள் ஆரம்பம்

மன்னார்,பெப்.11

மனிதக் கழிவு பொருள்களிலிருந்து பசளை தயாரிக்கும் திட்டம் வட மாகாணத்தில் மன்னார் மாவட்டத்திலேயே முதன் முதலாக முன்னெடுக்கப்பட்டு வருகிறது. 67 மில்லியன் ரூபா செலவில் இதற்கான பணிகள் இடம்பெற்று வருகின்றன.

மனிதக் கழிவு நீரைச் சுத்திகரிக்கும் இயந்திரத் தொகுதி குறித்த செயற்பாட்டுக்காக பயன்படுத்தப்படவுள்ளது.

உலர்வலய நகர் நீர் மற்றும் சுகாதார செயற்திட்டத்துக்கு அமைவாக நடைபெற்று வரும் குறித்த வேலைகளுக்கான நிதியை இலங்கை அரசு மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி என்பன இணைந்து வழங்கி வருகின்றன.

இதற்கென 67 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டு அபிவிருத்திப் பணிகள் துரித கதியில் நடைபெற்று வருகின்றன.

கடந்த வருடம் ஜூலை மாதம் ஆரம்பிக்கப்பட்ட குறித்த அபிவிருத்திப் பணிகள் எதிர் வரும் ஜூலை மாதம் வரையிலான ஒருவருடகாலம் நடைபெறவுள்ளது.

மன்னார் நகரசபைக்கு உட்பட்ட பகுதிகளில் சேரும் மனிதக் கழிவுகளை அப்புறப்படுத்தி வேறு இடத்தில் போடுவதில் சுகாதாரம் உட்பட பல சிக்கல்கள் காணப்பட்டன.

இந்நிலையைக் கருத்திற் கொண்டே குறித்த மனிதக் கழிவுகளை வடிகட்டி பதப்படுத்தி பயன்மிக்க பசளையாக தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதன்மூலம் சுற்றுச் சூழலுக்கும் சுகாதாரத்துக்கும் பாதிப்பில்லாமல் குறித்த மனிதக் கழிவுகளை அகற்றி அதன் மூலம் கிடைக்கப்பெறும் பசளையை மன்னார் மாவட்டம் உட்பட ஏனைய மாவட்டங்களுக்கும் ஏற்றுமதி செய்து கிடைக்கப்பெறும் நிதியின் மூலம்மேலும்பல அபிவிருத்திப் பணிகளுக்கு செல விடுவதற்கு மன்னார் நகர சபை திட்டமிட்டுள்ளது.

இதற்கென மன்னார் திருக்கேதீஸ்வரத்தை அண்மித்த பகுதியிலுள்ள ஏ -32 பிரதான வீதிக்கு அண்மையில் அமைந்துள்ள பாப்பாமோட்டை என்ற இடத்தில் கட்டுமானப் பணிகள் இடம் பெற்று வரு கின்றன.

குறித்த பகுதியில்1.75 ஹெக்ரெயர் நிலப்பரப்பில் இதற்கான வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.



பசளை தயாரிப்புக்கான கட்டுமானப் பணிகளில் ஈடுபடும் பணியாளர்கள்....

இதன்படி குறித்த பகுதியில் பசளை தயாரிப்புக்கென மொத்தமாக 5 விசாலமான தொட்டிகள் அமைக்கப் படு கின்றன.

இதன்படி 53 மீற்றர் நீளமும் 38 மீற்றர் அகலமும் கொண்ட தொட்டி ஒன்றும், 24 மீற்றர் நீளமும் 12 மீற்றர் அகலமும் கொண்ட தொட்டி ஒன்றும் , 18 மீற்றர் நீளமும் 10 மீற்றர் அகலமும் கொண்ட தொட்டி ஒன்றும் அதே போன்று 8 மீற்றர் நீளமும் 7 மீற்றர் அகலமும் கொண்ட இரண்டு தொட்டிகளும் அமைக் கப்பட்டு வருகின்றன.

குறித்த கட்டுமானப்பணிகள் முடிவடைந்தபின் பசளை உற்பத்தி வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

இதன்மூலம் மன்னார் மாவட்ட இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புகளும் கிடைக்க வுள்ளன என்பது குறிப்பிடத்தக் கது.

குறித்த வேலைத்திட்டத்தை முதல் இரண்டு வருடங்களுக்கு தேசிய நீர்வடிகாலமைப்பு அதிகார சபை பராமரிப்பதோடு அதன்பின் மன்னார் நகர சபைக்கு வழங்கப்பட்டு பராமரிக்கவும் முடிவாகியுள்ளது. (வ)

# தண்டவாளத் துண்டங்களை கடத்தியவர் கைது

தென்மராட்சி, பெப்.11

வெட்டப்பட்ட தண்டவாளத் துண்டங்களை மோட்டார் சைக்கிள் டிரெயிலரில் கடத்திச் சென்ற நபரை கொடிகாமம் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

நேற்று முன்தினம் கெற்பேலிப் பகுதியில்இலங்கைரயில்திணைக்களத்துக்குச் சொந்தமான தண்டவாளங்கள் பழைய இரும்பு விற்பனைக்காக கடத்தப்படுவதாக பொலிஸாருக்குக் கிடைத்த தகவலையடுத்தே இக் கைது நடவடிக்கை இடம்பெற்றது. (வ-9)

# ஏட்டிக்குப் போட்டியாக அஞ்சலி நிகழ்வுகள்

கொழும்புத்துறை, பெப்.11

தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் முன்னாள் தலை வர் அமரர் ஜீ.ஜீ.பொன் னம்பலத்தின் 37 ஆவது சிராத்த தினமாகிய நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை குருநகரில் உள்ள அவரது சிலைக்கு ஏட்டிக் குப் போட்டியாக அந்தக் கட்சியைச் சேர்ந்த இரு பிரிவினரால் அஞ்சலி நிகழ்வுகள் நடத்தப்பட்டன.

நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி அ.விநா யகமூர்த்தி தலைமை யிலான தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் பிரிவினர் அன்றைய தினம் காலை 9.30 மணிக்கு ஜீ.ஜீயின் உருவச்சிலைக்கு மலர் மாலை அணிவித்து மலரஞ்சலி செலுத்தி இரங்கலுரை நிகழ்த்தினர்.

இந்த நிகழ்வில் வடக்கு மாகாண சபை உறுப்பினர் களான த.சித்தார்த்தன், சட்டத்தரணி கே.சயந்தன், முன்னாள் நாடாளு மன்ற உறுப்பினர் சொலமன் சூ.சிறில் ஆகியோர்களும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மாநகரச சபை, பிரதேச சபை உறுப்பினர்களும்கலந்து கொண்டனர்.

அவர்கள் அஞ்சலி நிகழ்வுகள் நடத்திச் சென்ற பின்னர் அங்கு முற்பகல் 11 மணியளவில் வருகை தந்த தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திர குமார் பொன்னம்பலம் மற்றும் அவரது சகாக்கள் உருவச் சிலைக்கு மலர் மாலைஅணிவித்து அஞ்சலி செலுத்தினர். இந்த நிகழ்வில் முன்னாள் நாடாளு மன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன் மற்றும் காங்கிரஸ் கட்சியின் உறுப்பினர்களும் கலந்துகொண்டனர். (வ-51)

# வெய்யிலில் நிறுத்தப்படும் வாகனங்களுக்கும் அறவீடு

## அதிகரித்த கட்டணங்களில்




கட்டண அறவீட்டு அறிவித்தலும் வெய்யிலில் தரித்து நிற்கும் வாகனங்களும்

நெல்லியடிச் சந்தையில் அமைக்கப்பட்டுள்ள பாதுகாப்பு நிலையத்தில் நிறுத்தப்படும் வாகனங்களுக்கு கடந்த முதலாம் திகதியில் இருந்து வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச சபையால் கட்டணங்கள் அதிகரிக்கப் பட்டமைக்கு மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

சைக்கிளுக்கு 2 ரூபாவிலிருந்து 5 ரூபாவாகவும் மோட்டார் சைக்கிளுக்கு 5 ரூபாவிலிருந்து 10 ரூபாவாகவும் ஓட்டோவுக்கு 10 ரூபாவிலிருந்து 20 ரூபாவாகவும் பாதுகாப்புக் கட்டணங்கள் அதிகரிக்கப் பட்டுள்ளன.

நெல்லியடிச் சந்தையின் புனரமைப்பு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளமையால் தற்போது பாதுகாப்பு நிலையம் எதுவும்அமைக்கப்படவில்லை. இதனால் தமது சைக்கிள், மோட்டார் சைக்கிள், ஓட்டோ என்பவற்றைக் கொளுத்தும் வெய்யிலில் விட்டுவிட்டே மக்கள் சந்தையில் பொருள்களை வாங்கிக் கொள்கின்றனர். இதனால் சில சைக்கிள்களுக்கு காற்றுப்போய் விடுகின்றன. மோட்டார் சைக்கிளின் எரிபொருளும் (பெற்றோல்) ஆவியாகின்றது.

பாதுகாப்புநிலையம் முறையாக அமைக்கப்படாது கட்டணத்தை அதிகரித்தமைக்கு மக்கள் விசனம்தெரிவித்துள்ளதுடன்முறையான பாதுகாப்பு நிலையத்தை அமைத்துக் கட்டணத்தை அதிகரிக்கு மாறும் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (ஒ-422)

# ஜீ.ஜீ. போன்ற அரசியல் தலைவர்கள் இன்று தமிழர்களுக்குத் தேவை

## நினைவு தின நிகழ்வில் வடமாகாண சபை உறுப்பினர் சயந்தன்

குருநகர், பெப்.11

இன்றைய காலகட்டத்தில்அமரர் ஜீ.ஜீ.பொன்னம்பலம் போன்ற அரசியல் மேதைகள் தமிழர்களுக்குத் தேவை. இவ் வாறுதெரிவித்தார் வடமாகாண சபை உறுப்பினர் சட்டத்தரணி கே.சயந்தன்.

ஜீ.ஜீ.பொன்னம்பலத்தின் 37 ஆவது நினைவு தின நிகழ்வு யாழ்ப்பாணம், குருநகரில் அவரது உருவச்சிலை அமைந்துள்ள இடத்தில் நேற்றுமுன் தினம் நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரை நிகழ்த்தும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அமரர் ஜீ.ஜீ.பொன்னம்பலம் போன்றவர்கள் இன்று எம்மிடையே இல்லை என்பது கவலையளிப்பதாக உள்ளது. இன்றைய காலகட்டத்தில் தமிழ் மக்களின்பிரச்சினைகள் குறித்து இராஜதந்திர ரீதியிலும் சர்வதேச மட்டத்திலும் எடுத்துக்கூற வேண்டும்.

இதற்கு இரண்டிலும் திறமையுள்ள அமரர் ஜீ.ஜீ.பொன்னம்பலம் போன்ற தலைவர்கள் உருவாக வேண் டும் - என்றார்.

இந்த நிகழ்வில் உரையாற்றிய முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சொலமன் சூ.சிறில் கூறியதாவது:-

"தமிழ் மக்களின் வாழ்வில் மறக்க முடியாத மனிதன் ஜீ.ஜீ.பொன்னம்பலம். அரசியலை யும் சட்டத்தையும் இணைத்துப் பேசியவர் அவர். சேர் பொன். இராமநாதன், சேர் பொன்.அரு ணாசலம் ஆகியோரின் மறை வுக்குப் பின் ஏற்பட்ட அரசியல் வெற்றிடத்தை நிரப்ப அரசிய லில் குதித்தவர் ஜீ.ஜீ. தமிழ் மக்களின் துயரத்தை உலகுக்கு எடுத்துக் கூறியவர்.

ஐக்கிய நாடுகள் சபையின் முன் தோன்றி உரை நிகழ்த்தி தமிழ் மக்களது உரிமையை எடுத்துக் கூறியவர். ஜெனிவா மூலம் தமிழ் மக்களது உரிமை இலங்கையில் நிலைநாட்டப் படும் என்ற எண்ணத்துடன் - நம்பிக்கையுடன் தமிழ் மக்கள் தற்போது வாழ்ந்து வருகின்றனர்" - என்றார். (வ-51)

# வடக்கில் 5,500 ஹெக்ரெயரில் வெங்காயச் செய்கை

## வடமாகாண விவசாயப் பணிப்பாளர் தெரிவிப்பு

வடமாகாணத்தில் தற்போது 5 ஆயிரத்து 500 ஹெக்ரெயர் நிலப்பரப்பில் வெங்காயம் உற்பத்தி செய்யப்படுகிறது. விவசாயிகள் இதனை நுகர்வோருக்கு நியாயமான விலையில் வழங்கக் கூடியதாக உற்பத்திச் செலவைக் குறைத்து செய்கை பண்ண வேண்டியது அவசியமாகும் என்று வடமாகாண விவசாயப்பணிப்பாளர் எஸ்.சிவகுமார் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

வடமாகாணம் வெங்காய உற்பத்தியில் முன்னோடியாக அமைந்துள்ளது. இந்த உற்பத்தியை இலகுவாக்குவதற்கு ஏதுவாக யாழ்.மாவட்டத்தில் வெங்காய உண்மை விதை உற்பத்தி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதனை மற்றைய பகுதிகளுக்கும் விரிவுபடுத்த வேண்டிய தேவை உள்ளது.

வடமாகாணத்தில் இந்த வெங்காயச்செய்கையானது காலபோகத்தில் 2 ஆயிரத்து 200 ஹெக்ரெயர் நிலப்பரப்பிலும் அதே அளவு சிறு போகத்திலும் செய்கை பண்ணப்பட்டு வருகிறது. மொத்தமாக வட மாகாணத்தில் 5 ஆயிரத்து 500 ஹெக்ரெயரில் வெங் காயம் உற்பத்தி செய்யப்ப டுகிறது.

குறிப்பாக வடமாகாணத்தில் தான் சின்ன வெங்காய உற்பத்தி கூடியளவு உற்பத்தி செய்யப்படுகிறது. சின்ன வெங்காய உற்பத்தி ஊடாக விவசாயிகள் கூடியளவு வருமானத்தைப் பெறக்கூடியதாகவும் உள்ளது. இதில் எவ்வளவு தூரம் செய்கையில் செலவைக் குறைக்க முடியுமோ அதுவே முக்கியமானது.

உண்மை விதையை உற்பத்தி செய்து வெங்காய உற்பத்தி மேற்கொள்ளப்பட்டால் உற்பத்திச் செலவைக் குறைக்கக் கூடியதாக இருக்கும். தற்போதைய சூழலில் தரமான பொருள்களை வாங்குவதற்கே நுகர்வோர் விரும்புகிறார்கள்.

இதனைப் போன்று பல வருடங்களுக்கு முன்னர் உருளைக் கிழங்கு யாழ். மாவட்டத்தில் சுமார் 500 ஏக்கர் நிலப்பரப்பில் செய்கை பண்ணப்பட்டது என்றார். (வ-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆந்திராவுக்காக பதவி துறப்பேன்

## மாநில முதலமைச்சர் கிரண் குமார் ரெட்டி ஆவேசம்

புதுடில்லி, பெப்.11
ஆந்திராவுக்காக நான் எனது பதவியையும் தூக்கி எறியத் தயாராக இருக்கின்றேன் என்று தெரிவித்துள்ளார் ஆந்திர முதலமைச்சர் கிரண்குமார் ரெட்டி. ஆந்திராவைப் பிரித்து தெலுங்கானா மாநிலம் அமைப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்து கடந்த சில நாள்களாகப் புதுடில்லியில் ஆர்ப்பாட்டங்களை நடத்தி வருகின்றார் கிரண்குமார் ரெட்டி. இந்தநிலையில் நேற்று ஊடகவியலாளர்களைச் சந்தித்துக் கருத்துத் தெரிவிக்கும் போதே இவ்வாறு அவர் தெரி வித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

"தெலுங்கானாவால் காங்கிரஸ் கட்சிக்கு தேர்தலில் பூஜ்யம் தான் கிடைக்கும். இது ஆந்திரப் பிரதேசத்தில் காங்கிரஸ் கட்சிக்கு நீண்ட காலத்துக்குப் பாதிப்பை ஏற்படுத்தும். பிரதமரும், சோனியா காந்தியும் பிரச்சினை என்ன என்பதைப் புரிந்து கொள்ளாமல் இருக்கிறார்கள். 20, 25 வருடங்களாக தீவிரமான காங்கிரஸ்காரர்களாக இருந்தவர்கள் எல்லாம் ஏன் இப்போது எதிராகத் திரும்பியிருக்கிறார்கள் என்பதை அவர்கள் புரிந்து கொள்ளவில்லை.

ஆந்திராவைப் பிரிக்க நினைத்தது அவர்கள் செய்த மிகப் பெரிய தவறு. நாங்கள் ஜனாதிபதியின் பரிந்துரையை இரு அவைகளிலும் ஏற்க மறுத்து விட்டோம். ஆனால் மத்திய தலைவர்கள் அதனை நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்ய நினைப்பது வருந்தத்தக்கது. ஆந்திர சட்டசபை எடுத்த முடிவுக்கு நாடாளுமன்றமும், அனைத்துக்கட்சிகளும் மதிப்புக் கொடுக்க வேண்டும். ஆந்திராவை ஏன் பிரிக்க வேண்டும்? இதனால் இரு பகுதிகளைச் சேர்ந்த மக்களுக்கும் பயன் ஏதும் உள்ளதா? இரு பகுதிகளிலும் உள்ள மக்களுக்கு மின்சாரம், கல்வி போன்ற பலவகைகளிலும் பாதிப்புத்தான் ஏற்படும்.

மாநிலத்தை ஒன்றாக வைத்திருக்க நான் பதவியைத் தூக்கி எறிவது உட்பட எந்தத் தியாகத்தையும் செய்யத் தயார். மக்கள் நலனைவிட அதிகாரம், முதலமைச்சர் பதவி எதுவும் பெரிதல்ல. தனி நபரை விடக் கட்சி பெரிது தான். ஆனால், மக்கள் தான் கட்சியைவிடப் பெரியவர்கள். மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பு அளிக்க வேண்டும். நேரம் வரும் போது நான் உரிய முடிவை எடுப்பேன். நான் என்ன செய்கி றேன் என்பது எனக்கு தெரியும்.

மக்களின் எண்ணம் என்ன என்று எனக்குத் தெரியும். நான் மக்கள் எண்ணத்தை தான் பிரதிபலிக்கிறேன்" - என்று தெரிவித்துள்ளார். (ற)

# முன்னறிவிப்பு இன்றி வியாபாரத் தடை; திருநெல்வேலி வியாபாரிகள் குற்றச்சாட்டு

## மறுக்கிறது நல்லூர் பிரதேச சபை

யாழ்ப்பாணம்.பெப்.11
திருநெல்வேலி பொதுச்சந்தையின் கீழ் தளத்தில் உள்ள வியாபார நிலையங்களில் வெங்காயம், உருளைக் கிழங்கு என்பவற்றை சில்லறையாக விற்பனை செய்வதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளமை குறித்து தமக்கு உரிய அறிவித்தலை நல்லூர் பிரதேச சபை வழங்கவில்லையென பாதிக்கப்பட்ட வியாபாரிகள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

திருநெல்வேலி பொதுச்சந்தையின் கீழ் தளத்தில் உள்ள வியாபார நிலையங்களில் வெங்காயம் உருளைக் கிழங்கு போன்ற பொருள்களை சில்லறையாக விற்பனை செய்தால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று நல்லூர் பிரதேச சபை அண்மையில் ஊடகங்களுக்கு அறிவித்திருந்தது.

தற்போது அவ்வாறு விற்பனை செய்யும் வியாபாரிகளை இனங்கண்டு சட்ட நடவடிக்கையை எடுத்து வருகிறது.

ஆனால் இது தொடர்பில் தமக்கு அறிவித்தல் வழங்கப்படவில்லை என வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.

குறித்த சந்தைப்பகுதியில் ஒப்பந்த அடிப்படையில் மாதாந்தம் 4 ஆயிரம் ரூபா வாடகை செலுத்தி வியாபார நடவடிக்கை நாம் மேற்கொண்டு வருகின்றோம். நாம் உருளைக்கிழங்கு, வெங்காயம் என்பவற்றை மொத்த விலைக்கு விற்பனை செய்யாது விடின் பெரு நட்டம் ஏற்படும்.

அத்துடன் தமக்கு வழங்கப்பட்டுள்ள ஒப்பந்தக்கடிதத்தில் உருளைக்கிழங்கு விற்பனை செய்வதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளமை தொடர்பாக குறிப்பிடப்படவில்லை. சபையால் அங்கீகரிக்கப்பட்ட பொருள்கள், விற்பதற்கும் பாக்கு வெற்றிலை பழ வகைகள், உணவுச்சாலையுடன் தொர்டர்புடைய பொருள்களுக்கு மட்டுமே தடை விதிக்கப்பட்டுள்ளது என்றும் வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.

இந்த திடீர் அறிவிப்பு காரணமாக தாம் தொழில் செய்ய முடியாது போயுள்ளதாக தெரிவித்த அவர்கள் இது தொடர்பாக கடந்த 6 ஆம் திகதி யாழ். மனித உரிமை ஆணைக் குழுவிடம் முறைப்பாடு செய்துள்ளதாகவும் தெரிவித்தனர்.

இது தொடர்பாக நல்லூர் பிரதேச சபையுடன் தொடர்பு கொண்டு கேட்ட போது,

மேல் மாடியில் விற்பனை செய்யப்பட வேண்டிய பொருள்களை கீழ் கட்டடத்தில் விற்பனை செய்வதால் மேல் மாடி வியாபாரிகள் பாதிப்படைந்துள்ளனர். கடந்த 6 மாதத்துக்கு முன்னரே சபையில் குறித்த தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அது குறித்து சம்பந்தப்பட்ட வர்த்தகர்களுக்கும் அறிவிக்கப்பட்டது.

வியாபாரிகளது நலன் கருதியே இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளோம் என தெரிவித்தனர். (ஐ-14)

# மரண அறிவித்தல்

### திருமதி கந்தையா கனகம்மா

வாகையடி மட்டுவில் தெற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கந்தையா கனகம்மா நேற்று (10.02.2014) திங்கட்கிழமை காலமானார்

அன்னார் காலஞ்சென்ற கந்தையாவின் அன்புமனைவியும் காலஞ்சென்ற கனகரத்தினம் மற்றும் கமலாதேவி காலஞ்சென்ற கமலேஸ்வரன் மற்றும் இராஜேஸ்வரி ஆகியோரின் அன்புத்தாயும் காலஞ்சென்ற கணேசன் மற்றும் மனோன்மணி, கந்தசாமி ஆகியோரின் மாமியும் சுகுனா, சுமதி, சுஜேந்தினி, கஜரூபினி, கஜிசாந், திலக்சன், நிரோஜன், நிதுர்சன், ஆகியோரின் பேர்த்தியும் ஆர்த்திகா, அனுவராகன், அக்ஷயன் ஆருரன் ஆகியோரின் பூட்டியும் ஆவார் . அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.02.2014) செவ்வாய்க்கிழமை பி.ப. 2.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக குச்சப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
வாகையடி, மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி — குடும்பத்தினர்

# மாணவருக்கு விழிப்புணர்வு

உலக ஈரவலய தினத்தையொட்டி ஈர நிலங்களும் விவசாயமும் மற்றும் வளர்ச்சிக்கான பங்காளிகள் என்னும் தொனிப்பொருளில் மாணவர்களுக்கான விழிப்புணர்வுக் கருத்தரங்கு வியாழக் கிழமை மட்டக்களப்பு, பிள்ளையாரடி நல்லையா வித்தியாலயத்தில் இடம்பெற்றது.

இந்த விழிப்புணர்வில் ஈர வலயத்தை ஏன் பாதுகாக்க வேண்டும் மற்றும் எப்படிப் பாதுகாக்க வேண்டும், அதனால் ஏற்படும் நன்மைகள் என்ன? என்பன குறித்து மாணவர்களுக்கு விளக்கமளிக்கப்பட்டது. (ச)

# போதனா வைத்தியசாலை உணவகம் மூடப்பட்டதால் நுகர்வோர் கடும் சிரமம்

யாழ்ப்பாணம், பெப், 11
யாழ்.போதனா வைத்தியசாலையில் உள்ள உணவகம் திருத்த வேலைகளுக்காக மூடப்பட்டுள்ளது. அதனால் வைத்தியசாலையில் உள்ள நோயாளர்களது உறவினர்கள் மற்றும் வைத்தியசாலைப் பணியாளர்கள் அனைவரும் வைத்தியசாலைக்கு வெளியே உள்ள உணவகங்களுக்குச் சென்று தேநீர் மற்றும் சிற்றுண்டிகளை வாங்குகின்றனர்.

வைத்தியசாலை உணவகம் சுகாதார சீர்கேடாக இயங்குவது பொதுசுகாதாரபரிசோதகர்களால் கண்டறியப்பட்டதையடுத்து அது தொடர்பில் யாழ். நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. அதனடிப்படையில் உணவகத்தில் உள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்து எதிர்வரும் 20 ஆம் திகதி அறிக்கை சமர்ப்பிக்குமாறு நீதிமன்று உத்தரவிட்டிருந்தது.

இந்த நிலையில் தற்போது உணவகம் மூடப்பட்டுள்ளது. திருத்தம் செய்யவேண்டியவை என்று பொதுசுகாதார பரிசோதகர்களால் கூறப்பட்ட விடயங்களைச் சீர்செய்யும் முகமாக உணவகம் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது. புனரமைப்புப் பணிகளை மேற்கொள்ள ஒருவாரகாலம் தேவை என்றும் உணவகத்தை புதிய இடத்தில் அமைப்பது தொடர்பில் ஆராய்வதாகவும் வைத்தியசாலைப் பதில் பணிப்பாளர் மருத்துவர் எஸ். ஸ்ரீபவானந்தராஜா தெரிவித்தார். (ஐ-4)



கோப்புப்படம்

# 5 பேருக்கு ரூ.15 ஆயிரம் அபராதம்

அம்பாறை,பெப்.11
அம்பாறை, இலுக்குச்சேனை நீத்தைகுளத்தில் தடைசெய்யப் பட்ட தங்கூசி வலைகளை பயன்படுத்தி மீன்பிடித்த 5 பேருக்கு 15 ஆயிரம் ரூபாவை அபராதமாகச் செலுத்துமாறு அக்கரைப்பற்று நீதிவான் நீதிமன்ற நீதிபதி யு.எல்.எம். அஸ்ஹர உத்தரவிட்டுள்ளார்.

தமணபொலிஸாருக்குக்கிடைத்த தகவல் ஒன்றையடுத்து வாப்பொத்தான்சேனை, நீத்தை குளத்தில் தடைசெய்யப்பட்ட தங்கூசி வலைகளைப் பாவித்து மீன் பிடித்துக் கொண்டிருந்த 5 பேரை பொலிஸார் கைது செய்து நீதிமன்றத்தில் முன்னிலையாகுமாறு உத்தரவிட்டு பொலிஸ் பிணையில் விடுவித்திருந்தனர்.

அவர்கள் வெள்ளிக்கிழமை அக்கரைப்பற்று நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலையாகிய போதே ஒருவருக்கு தலா 3 ஆயிரம் ரூபா வீதம் 15 ஆயிரம் ரூபாவை அபராதமாகச் செலுத்துமாறும் வலைகளை பறிமுதல் செய்யுமாறும் நீதிபதி உத்தரவிட்டார். (ச)

# மரண அறிவித்தல்

### அந்தோனிமுத்து மேரிமற்றீனம்மா



மண்டைதீவு 5 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், பரிகாரிகண்டன் முருங்களை வசிப்பிடமாகவும் கொண்ட அந்தோனிமுத்து மேரிமற்றீனம்மா நேற்று (10.02.2014) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அந்தோனிமுத்து தேவராசாவின் (ஓய்வு பெற்ற அதிபர்) அன்புமனைவியும் கியூபேட் றாஜ்குமார், அல்பேட்விஜயகுமார் (கனடா), நாகேஸ் (ஜேர்மனி) காலஞ்சென்ற றட்னேஸ் மற்றும் ஆனந்தன் (நோர்வே), கமலேஸ் (ஆசிரியர் அரசினர் முஸ்லீம் பாடசாலை - வேப்பங்குளம்), யோகேஸ் ஆகியோரின் அன்புத்தாயும் ஜெயா, வசந்தி (கனடா), அன்ரன் கிறேவின் (ஜேர்மனி), மரீனா (நோர்வே), மரிய தாஸ் (சிங்கம் - அதிபர் மன்னார் கயாக்குளி றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாட சாலை), சிறில் ஆகியோரின் மாமியும் றொகான், விதுஷன், பிறாங், றாஜ், அந்திரேயாஸ், யோகான், ஜோனி, ஜோபினா, திரிசியா, திவ்வியா ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் காலஞ் சென்றவர்களான அகப்பீஸ், திருச்செல்வம், சின்னத்துரை, யேற்றூட்அம்மா மற்றும் மேரிப்பிள்ளை காலஞ்சென்ற ஞானசவுந்தரி ஆகியோரின் சகோதரியும் ஆவார்.அன்னாரின் பூதவுடல் நாளை (12.02.2014) புதன்கிழமை மு.ப. 09 மணிக்கு மன்னாரில் இருந்து மண்டைதீவுக்கு கொண்டுவரப்பட்டு பி.ப. 4.00 மணிவரை மண்டைதீவில் உள்ள அவரது இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பி.ப. 4.00 மணிக்கு மண்டைதீவு புனித பேருதுவானவர் தேவாலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு மண்டைதீவு சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும ஏற்றுக்கொள்ளவும்.

5 ஆம் வட்டாரம் மண்டைதீவு
077 9844421, 077 8020179, 077 5401570

தகவல்:
குடும்பத்தினர்

# திருட்டு திருமண மாப்பிள்ளையை எச்சரித்து விடுவித்தனர் பொலிஸார்

யாழ்ப்பாணம். பெப். 11
யாழ். சிவலிங்கப் புளியடியில் திருட்டுத்தனமாக இரண்டாந்தரம் திருமணம் முடிக்க முற்பட்ட நபர் ஏற்கனவே ஒரு பெண்ணைத் திருமணம் முடித்திருந்த போதும் அவரைப் பிரிந்து வாழ்ந்து வருவதாகத் தெரிய வந்துள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

எதிர்காலத்தில் இவ்வாறான செயல்களில் ஈடுபடக்கூடாது என்று எச்சரிக்கை செய்து அவரை விடுவித்துள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

5 லட்சம் ரூபா பணத்தைச் சீதனமாகப் பெற்று யாழ்.சிவலிங்கப் புளியடியைச் சேர்ந்த பெண் ஒருவரைத் திருமணம் செய்யப் முற்பட்டார். குறித்த நபர் தாலி கட்டுவதற்குச் சில மணிநேரத்துக்கு முன்னரே அவர் ஏற்கனவே திருமணமானவர் என்றும் ஒருபிள்ளையின் தந்தை என்றும் உண்மை தெரிய வந்தது. சம்பவம் தொடர்பில் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டு மணவறையில் வைத்தே மணமகன் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

பொலிஸார் மேற்கொண்ட விசாரணைகளின் போது அவர் ஏற்கனவே திருமணமானவர் என்றும் மனைவியைப் பிரிந்து வாழ்ந்துள்ளார் என்றும் தெரிய வந்துள்ளது. இதன் காரணமாகவே தான் இரண்டாவது பெண்ணைத் திருமணம் செய்ய முற்பட்டதாகத் சந்தேக நபர் தெரிவித்த நிலையிலேயே எச்சரிக்கை செய்து அவரை விடுவித்ததாக பொலிஸார் தெரிவித்தனர். (ஐ-4)

# மரண அறிவித்தல்

### சின்னத்துரை நாகேஸ்வரி



ஆனைக்கோட்டை ஆறுகால்மடத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை நாகேஸ்வரி நேற்றுமுன்தினம் (09.02.2014) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னவி-இராசலட்சுமி தம்பதியரின் அன்பு மகளும், சண்முகராஜாவின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற ரஞ்சன் மற்றும் சிறிசெந்தினி, காஞ்சனமாலா, குமுதினி, மதி வதனி, நித்தியகாமினி, சிறிதரன் ஆகியோரின் அன்புத் தாயும், காலஞ்சென்ற அப்பையாவின் அன்பு மாமியும், முருகேசு வரதராசா, விவேகானந்தராசா, பாலசிங்கம், கலாமாலினி ஆகியோரின் அன்பு மாமியும், தமயந்தி, தாரணி, டயான், டயானி, குவேனி, துர்க்கா, ராதா, ரதன், தீபன், மயூரன், யான்சன், துசாந்தன், குவிந்தன், தாட்சாயினி, துவாரகன், துவாரகா, ஜங்கரன், கிஸ்னுஜன், துஷியந்தினி, சுலக்சனா, சிந்து, சுமி, ஜெனார்த்தனன், துள சிகன், தூயவன், கண்ணா, கிரி, கஜன், கஜனி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், கேசனா, கனுசன், திவானுஜா, தனுசிகா, அபிசனா, பிருந்திகா, அர்ச்சயன் ஆகியோரின் அன்புப்பூட் டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.02.2014)செவ்வாய்க்கிழமை பி.ப. ஒரு மணியளவில் நடைபெற்று பூதவுடல் கோம்பயன் மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்..

தகவல் :
பாடசாலை வீதி, ஆறுகால் மடம், ஆனைக்கோட்டை. — குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்



### செல்லர் குமாரவேலு

எழுதுமட்டுவாளைப் பிறப்பிடமாகவும், கொய்யாத் தோட்டத்தை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லர் குமாரவேலு நேற்று (10.02.2014) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மகேஸ்வரியின் அன்புக் கணவரும் சுந்தரலிங்கம் (அரச கட்டட ஒப்பந்தகாரர்), அமிர்தலிங்கம் (ஜேர்மனி), கணேசலிங்கம் (ஜேர்மனி) ஆகியோரின் அருமைத்தந்தையும் இறாகேந்திரி, செல்வி (ஜேர்மனி), யேந்தி (ஜேர்மனி) ஆகியோரின் மாமனும் துஷியந்தி (UK), கஜமுகன் (UK), முகுந்தன், அனுசன், சாரங்கன், கீர்த்திகன், கரிசன், யோன்மேகனா ஆகியோரின் பேரனும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.02.2014) செவ்வாய்க்கிழமை பி.ப. 3.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக துண்டி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

39/5 புதுவீதி, கொய்யாத்தோட்டம் யாழ்ப்பாணம்.

தகவல்:
சுந்தரலிங்கம் (மகன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெற்காணியில் வீடு கட்டுவோருக்கு கமநல நிலையத்தின் அனுமதி தேவை

அச்சுவேலி,பெப் .11

நெற்பயிர்ச் செய்கைக்கான வயல் நிலங்களில் வீடு கட்ட வேண்டிய குடும்பத்தினர் கமநல சேவைகள் திணைக் களத்தில் விசேட அனுமதி பெற்று குறித்த பேர்ச் நில அளவை வீடு கட்டுவதற்கு பயன்படுத்த லாம். விசேட அனுமதி பெறுவ தற்கான விண்ணப்பம் தேவை வலியுறுத்தும் அலுவலர்களு டன் கமநல சேவை நிலை யங்களுக்கு பொறுப்பான பெரும்பாக உத்தியோகத்தர் ஊடாக சமர்ப்பிக்க வேண்டும். காணி உறுதியில் "நெற்பரப்பு" எனக் குறிப்பிடப்பட்டுள்ள காணி கள் நெற் பயிர்ச் செய்கைக் கான வயல் நிலங்களை சட்ட பூர்வமாக வலியுறுத்துவதால் இந்திய வீட்டுத்திட்ட உதவி கிடைக்கப்பெற்ற பயனாளிகள் கிடைக்கப்பெற்ற வீடுகளை உரிய முறையில் நிர்மாணிக்க முடியாமல் இடர்படுவது. அந்த வகையில் வீடு கட்ட முடியா மல் இருப்பது தொடர்பாக கம நல சேவைத் திணைக்கள அதி காரி ஒருவர் கருத்துத் தெரி விக்கையில்:-

தவிர்க்க முடியாத நிலையில் வேறுகாணி இல்லாத குடும் பங்களுக்கு நெற்காணிச்சட்ட நடைமுறைகளுக்கு அமைய அனுமதிவழங்குவதற்கு விசேட ஏற்பாடுகளுக்கு இடமளிக்கப்படு கின்றன.

குறித்த குடும்பத்தினருக்கு ஏனைய காணி எதுவும் இல் லாத நிலையில் 6 பேர்ச் தொடக் கம் 9 பேர்ச் அளவு நிலத்தை வீடு கட்டுவதற்கு கமநல சேவைத் திணைக்களம் அனுமதி வழங் குவதற்கு நெற் காணிச்சட்ட ஏற்பாடுகள் இடமளிக்கின்றன. வீடு கட்டுவதற்கு காணி வழங்குமாறு கோரி உரிய படிவத்தில் அதற்கான ஆவ ணங்களுடன் சம்பந்தப்பட்ட காணி சொந்தக்காரர் விண் ணப்பிக்க வேண்டும். அதனை பரிசீலனை செய்து ஏற்றுக் கொண்ட விண்ணப்பத்தை கமநல பெரும்பாக உத்தியோ கத்தர் பிரதேச செயலக ஒருங் கிணைப்பு கூட்டத்தில் சமர்ப் பித்து அதற்கான அனுமதி யைப் பெற்ற பின்னர் அது மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப் பட்டு மாவட்ட ஒருங்கிணைப் புக் குழுவின் அங்கீகாரத்தைப் பெற்ற பின்னர்,

கிராமப்புறங்களாயின் 6 பேர்ச் நிலமும் புறநகர்ப் பகுதியா யின் 9 பேர்ச் நிலமும் வீடுகட் டுவதற்கு விசேட அனுமதி வழங்கப்படும். குறித்த அளவு நிலத்தை மட்டும் வீடு கட்டு வதற்கு பயன்படுத்துவோம் என்ற உறுதிமொழியுடன் நிலம் குறித்த தேவைக்கு பயன்படுத்த முடியும் என்று தெரிவித்தார்.

காணி உறுதியின் நிலைப்பாட் டால் இந்திய வீட்டுத் திட்டத்தை உரிய முறையில் பயன்படுத்த முடியாமல் குழப்ப நிலையில் உள்ள பயனாளிகள் உடனடி யாக விசேட அனுமதி பெறு வதற்கான விண்ணப்பத்தை கமநல சேவை நிலையங் களில் பெற்று விண்ணப்பித்து அனுமதியைப் பெறலாம் என் றும் தெரிவித்தார். (வ-11)

## சங்கத்தில் பதிவு செய்து உ.கிழங்கை விற்பனை செய்க

### உற்பத்தியாளர் கூ.சமாசம் தெரிவிப்பு

அச்சுவேலி,பெப்.11

"உருளைக்கிழங்கு அறுவ டைக்குத் தயாராக உள்ள விவசாயிகள் தமது பிரதேசத் தில் உள்ள உருளைக்கிழங்கு உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்தில் பதிவு செய்து கிழங்கை அறுவடை செய்து கிலோ 70 ரூபா விலைக்கு 'சதோச' நிறுவனத்துக்கு வழங்க முடியும்.

குறைவான விலைக்கு விற் பனை செய்து நட்டமடைவதைத் தவிர்த்துக் கொள்ளுமாறு உரு ளைக்கிழங்கு உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களின் யாழ். மாவட்ட சமாசத்தின் செய லாளர் ஜே.என். ஜெயகிருஷ்ணன் உருளைக்கிழங்கு உற்பத்தி யாளர்களுக்கு அறிவித்துள்ளார். இந்த விடயம் தொடர்பாக செய லாளர் மேலும் தெரிவிக்கை யில்:

"தனியார் துறையினர் விவ சாயிகளிடம் தமது இலா பத்தை நோக்காகக் கொண்டு உருளைக்கிழங்கை கொள்வ னவு செய்கின்றனர். இதனால் விவசாயிகள் எதிர்பாராத வரு மான இழப்புக்கு உள்ளாக வேண்டிய நிலை ஏற்படுகிறது. உருளைக்கிழங்கு அறுவ டைத் திகதியை தமது பிரதேச உருளைக்கிழங்கு உற்பத்தி யாளர் கூட்டுறவுச் சங்கத்தில் பதிவு செய்து சங்கத்தின் அறி வுறுத்தலுக்கு அமைய கிழங்கை அறுவடை செய்து 'சதோச' நிறுவனத்துக்கு கிலோ 70 ரூபா விலைக்கு வழங்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்" என்று தெரிவித்தார். (வ-11)

## தொற்றுநோய் விழிப்புணர்வு நடவடிக்கையில் அதிகாரிகள்

தென்மராட்சி, பெப்.11

தென்மராட்சி பிரதேச கிராமங் களில் யாழ்.மாவட்ட தொற்று நோய்த் தடுப்புப் பிரிவைச் சேர்ந்த அதிகாரிகள் வீடு வீடா கச் சென்று தொற்றுநோய் தொடர்பாக விழிப்புணர்வு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

தொற்றுநோய்கள் தொடர் பான விழிப்புணர்வை மக்கள் மத்தியில் ஏற்படுத்தும் வகை யில் நடவடிக்கைகளை மேற் கொண்டதுடன் இது தொடர் பான செயற்பாடுகளை மேம் படுத்துவதற்காக வீடு வீடாகச் சென்று விழிப்புணர்வை ஏற் படுத்தி வருவதாக மக்கள் தெரி வித்தனர். (வ-9)



யாழ்.நகரில் பருத்தித்துறை வீதி, விக்ரோரியா வீதிச் சந்திக்கு அருகில் காணப்படும் இந்த வாய்க்காலில் கழிவு நீர் தேங்கி டெங்கு நுளம்பு பரவக் கூடிய சூழல் காணப்படுகிறது. எனவே குறித்த வீதிக்குச் சமீபமாக வசிப்போர் தாம் அச்சத்துடன் வாழ்வதாகவும் சம்பந்தப்பட்ட அதிகாரி களை இது தொடர்பில் கவனம் செலுத்துமாறும் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (வ-10-21)

## செயற்கை முறை சினைப்படுத்தும் நடவடிக்கை மீண்டும் ஆரம்பம்

உடுவில் கால் நடை சுகாதார அபிவிருத்தி திணைக்களத் தினால் கால் நடை களுக்கான செயற்கை முறையிலான சினைப்படுத்தும் நடவடிக் கைகள் மீள ஆரம்பிக்கப்பட் டுள்ளதாக உடுவில் நடை வைத்தியதிகாரி ரி.விமல குமார் தெரிவித்துள்ளார்.

கடந்த இரண்டு மாதங்களாக கால் நடைகள் மத்தியில் பரவிய கால்வாய் நோய் காரணமாக செயற்கை முறை யில் சினைப்படுத்தும் நட வடிக்கைகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டு இருந்தன.


தற்போது கால்நடைகளுக் கான கால்வாய் நோய் பரவு வது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டதைத் தொடர்ந்து மீண் டும் செயற்கை முறை சினைப் படுத்தல் ஆரம்பிக்கப் பட்டுள்ள தாக தெரிவித்தார். (ந-86)

## ஆலயத் திருவிழாக் காலங்களில் கடைகளைக் கண்காணிக்குக

### உள்ளூராட்சிச் சபைகளிடம் கோரிக்கை

தென்மராட்சி, பெப்.11

ஆலயங்களின் வருடாந்த திருவிழாவின்போது வியா பார நடவடிக்கைகளில் ஈடு படும் வியாபாரிகளின் உணவுப் பொருள் விற்பனை முறைமை, பாதுகாப்பற்ற உணவுப் பாது காப்பு முறைகள், தனி நபர் சுகாதாரம், மருத்துவ சான்றி தழ், பாதுகாப்பான சீருடை, 2014 ஆம் ஆண்டுக் கான வியாபார உரிமம்பெறல், அச்சுத் தாள் பாவனையை தடை செய் தல் உள்ளிட்டவற்றில் உள்ளூராட்சி சபைகள் கவனம் செலுத்தி உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு இளவாலை கெவி தேவாலயத்தில் 75 ஆவது வருடாந்த உற்சவம் எதிர் வரும் 16, 17 ஆகிய திகதிகளில் நடைபெறுவதை முன்னிட்டு வலிகாமம் தென்மேற்கு பிர தேச சபைத் தவிசாளர் தலை மையில் நடைபெற்ற ஆலோ சனைக்கூட்டத்தில் அந்தப் பகுதி பொது சுகாதார பரிசோதகர் களால் கருத்து முன்வைக்கப் பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. தற்போது பாதுகாப்பற்ற உணவு மற்றும் குடிதண்ணீர் காரண மாக அதிகளவான நோய்கள் பரவி வருவதை அடுத்து உண வுக் கட்டுப்பாட்டில் உரிய தீர்க்கமான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் என்றும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (வ-9)



கிணற்றை உள்ளடக்கி அமைக்கப்பட்டு வரும் சுற்று மதில்.

## குடிதண்ணீர் பெற முடியாத அவலநிலையில் கைதடி மக்கள்

யாழ்ப்பாணம், பெப்.11

கடந்த முப்பது வருடங்களுக்கு மேலாகப் பொது மக்களால் பயன்படுத்தப்பட்டு வந்த குடி தண்ணீர்க் கிணறு ஒன்று தற்போது தனியார் ஒருவரால் சுற்றுமதில் அமைக்கப்பட்டு பொது மக்கள் பாவனைக்குத் தடை செய்யப்படுவதாகப் பலரா லும் முறைப்பாடுகள் தெரிவிக் கப்படுகின்றன.

[illegible] யில் வடக்கு [illegible] சபையின் பேரவைச் செயலகத்துக்கு முன்பாக வுள்ள கிணறே இவ்வாறு சுற்று மதில் அமைக்கப்பட்டு குடி தண்ணீர் அள்ளுவதற்குத் தடுக் கப்பட்டுள்ளதாகக் கூறப்படு கின்றது.

குறித்த கிணறு மிக நீண்ட காலமாகப் பொதுமக்களால் பயன்படுத்தப்பட்டு வருவதை அறிந்த "அக்சன் பெய்ம்" நிறு வனம் பெருமளவு நிதி செலவ ழித்து அதைப் புனரமைப்புச் செய்த வேளை ஒருவரும் உரிமை கோராதிருந்தனர். தற்போது இவ்வாறு சுற்று மதில் அமைத்து குடிதண் ணீரைப் பெற விடாமல் தடுப் பது தமக்கு வேதனையளிப் பதாகவும், இனிமேல் தாம் நீண்டதூரம் சென்றே நீரைப் பெற வேண்டிய நிலை ஏற் பட்டுள்ளதாகவும் குடிதண் ணீர் பாவனையாளர் ஒருவரால் கவலை தெரிவிக்கப்பட்டது.

எனவே இந்த விடயத்தில் சமூக சேவை நிறுவனங்கள், சமூக சேவையாளர்கள் கவ னம் செலுத்தி தாம் தொடர்ந்து அங்கு குடிதண்ணீர் பெற வசதி செய்து தருமாறும் பல ராலும் கோரிக்கை விடுக்கப் பட்டுள்ளது. (வ-288-9)

## கிழக்கு மாகாண அலுவலர் விவரம் திரட்டல்

### வடமாகாண சபையில் கடமையாற்றுவோரில்

யாழ்ப்பாணம், பெப்.11

வடக்கு மாகாண சபையின் கீழ் கடமையாற்றி வரும் கிழக்கு மாகாணத்தை நிரந்தர வதிவிட மாகக் கொண்ட அலு வலர் களின் விவரங்களை வழங்கு மாறு ஆளுநரின் அறிவுறுத்தலுக் கமைய வடக்குமாகாண அமைச் சின் செயலாளர்கள், பிரதிப் பிர தம செயலாளர்கள் மற்றும் திணைக்களத்தலைவர்கள் ஆகி யோரிடம் வடக்கு மாகாண பிரதிப் பிரதமசெயலாளர் ஆர்.எஸ். துரை ராஜா கேட்டுள்ளார்.

வடக்கு கிழக்கு மாகாணத்தின் கீழ் நியமனம் பெற்றவர்களில் கிழக்கு மாகாணத்தைத் தமது நிரந்தர வதிவிடமாகக் கொண்ட வர்கள் பலர் வடக்கு கிழக்கு மாகாணப் பிரிப்பின்போது வடக்கு மாகாணத்துக்குள் உள்ளீர்க்கப்பட்டிருந்தனர். அத்தகையவர்கள் குறித்த விவ [illegible] முன்னதாக தமக்கு அனுப்பி வைக்குமாறும் அவர் மேலும் கேட்டுள்ளார். (வ-288)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## ஒரிசாவில் படகு விபத்து: 11 பேர் சாவு

சம்பல்பூர், பெப்.11
ஒரிசாவில் சுற்றுலாப் பயணிகள் சென்ற படகு கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் 11 பேர் உயிரிழந்துள்ளனர்.

ஒரிசா மாநிலம் சம்பல்பூர் மாவட்டத்தில் உள்ள ஹிராகுட் நீர்த்தேக்கத்தில், 100க்கும் மேற்பட்டோர் ஒரு படகில் சுற்றுலா சென்று கொண்டிருந்தனர்.

அப்போது அந்தப் படகு நிலைதடுமாறிக் கவிழ்ந்தது. அதையடுத்து படகில் பயணம் செய்தவர்கள் தண்ணீரில் மூழ்கினர். அதில் இரண்டு குழந்தைகள், ஐந்து பெண்கள் உட்பட 11 பேர் உயிரிழந்தனர். 80க்கும் மேற்பட்டோர் பாதுகாப்பாக மீட்கப்பட்டுள்ளனர். 9 பேர் காணாமற் போயுள்ளனர். அவர்களைத் தேடும் பணிகள் முழுவீச்சில் இடம்பெற்று வருகின்றன என்று ஒரிசா பொலிஸார் தெரிவித்துள்ளனர். விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கல் தெரிவித்துள்ள அந்த மாநில முதலமைச்சர் நவீன் பட்நாயக், மீட்புப் பணிகளை துரிதப்படுத்துமாறு அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார். (ற)



சேலம் மாவட்ட திருநங்கைகள் நல சங்கம் சார்பாக சேலம் நேரு கலையரங்கத்தில் 'திருநங்கைகள் அழகிப் போட்டி-2014' நிகழ்ச்சி நடைபெற்றது. அதில் ஓர் அங்கமாக ஈழத் தமிழர்களைக் கொன்று குவித்த சிங்கள இராணுவத்தின் அட்டூழியங்களை மிகத் தத்ரூபமாக நடித்து காட்டிய நிகழ்வும் இடம்பெற்றது. ஈழத் தமிழ்ப் பெண்களைக் கூட்டு வன்புணர்வு செய்த கொடூரத்தையும், இறுதிப்போரில் இனப்படுகொலை நிகழ்த்திய இராணுவக் கொடூரத்தையும் நெஞ்சுருக நடித்து காட்டினர் திருநங்கைகளும், அவர்களுக்கு துணை நின்ற ஆண் கலைஞர்களும். இந்த காட்சிகளின்போது அரங்கத்தில் திரண்டிருந்த பெரும்பான்மையோர் கண்கலங்கினர். இந்த நிகழ்ச்சிக்கு நடிகை அம்பிகா நடுவராகக் கலந்துகொண்டார். (ற)

## நெருக்கடியில் சிக்கியுள்ள புதுடில்லி அரசு



கெஜ்ரிவால்

புதுடில்லி, பெப்.11
சட்ட அமைச்சர் சோம்நாத் பார்தி விவகாரம், லோக்பால் விவகாரம் என பல்வேறு பிரச்சினைகளால் நெருக்கடியைச் சந்தித்து வரும் புதுடில்லி முதலமைச்சர் கெஜ்ரிவாலுக்கு மற்றொரு புதிய சிக்கலும் தற்போது எழுந்துள்ளது. ஆம் ஆத்மி கட்சி தலைமையிலான புதுடில்லி அரசுக்கு வழங்கி வரும் ஆதரவைத் திரும்பப் பெறப்போவதாக சுயேச்சை சட்டசபை உறுப்பினர் ஒருவர் அறிவித்துள்ளார். சுயேச்சை உறுப்பினர்கள், ஒரு ஐக்கிய ஜனதா தள உறுப்பினர் மற்றும் காங் கிரஸ் கட்சியின் ஆதரவுடன் ஆட்சியமைத்துள்ள ஆம் ஆத்மிகட்சி, இந்த அறிவிப்பால் நெருக்கடியை எதிர்நோக்கியுள்ளது. (ற)

# அரசியல் வாழ்க்கை முடிந்துவிடவில்லை

*அத்வானி கூறுகின்றார்*

புதுடில்லி, பெப்.11
எனது அரசியல் வாழ்க்கை இன்னமும் முடிந்துவிடவில்லையென்று தெரிவித்துள்ளார் பா.ஜ.க.வின் மூத்ததலைவர் எல்.கே.அத்வானி. நீண்ட இடைவெளிக்குப் பின்னர் கருத்துத் தெரிவித்துள்ள அவர், "நான் அரசியல் வாழ்வைத் தொடங்கி 55 ஆண்டுகள் ஆகிவிட்டன. எனினும் சாதிக்க வேண்டியவை இன்னமும் நிறையவே உள்ளன. இந்தியா-பாகிஸ் தான் பிரிவினைக்கு முந்தைய காலகட்டத்தில் கராச்சியில் பிறந்த நான், பதினான்கு வயதில் ஆர்.எஸ்.எஸ். இயக்கத்தில் இணைந்து பணியாற்றினேன்.

ஆர்.எஸ்.எஸ் இயக்கத்தில் இணைந்த அந்தத் தருணம் எனது வாழ்வை மிகவும் அர்த்தமுள்ளதாக்கியது. எனது அரசியல் வாழ்க்கை இன்னமும் முடிந்துவிடவில்லை. நான் ஆற்ற வேண்டிய மக்கள் சேவைகள் ஏராளம் உள்ளன" என்று தெரிவித்துள்ளார்.

அதேவேளை, எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் தாம் எந்தத் தொகுதியில் போட்டியிடுவது என்பது தொடர்பாக அத்வானியே முடிவு செய்ய வேண்டும் என்று பா.ஜ.க. தலைவர் ராஜ் நாத் சிங் தெரிவித்துள்ளார். (ற)


## முதலாம் ஆண்டு நினைவுத் தூறல்

மண் மகிழ்: 11 . 06 . 1950

மண் மகிழ்: 16 . 01 . 1962



கண் நெகிழ் : 01.01.2013
**சங்கரப்பிள்ளை தங்கேஸ்வரன்**

கண் நெகிழ்: 23.01.2013
**தங்கேஸ்வரன் ஜீவமாலா**

ஓராண்டு ஓடிப்போனாலும்
இருக்கின்றோம் உங்கள் நினைவில்
பண்புதனில் உயர்ந்து
பாசத்துடன் பழகி வந்த நீங்கள்
தொடரமுடியாத திக்கில் உறைந்து விட்ட சித்திரங்களாய்
ஆற்றாத் துயர் அணை மேவினும் நெருங்க முடியாத தூரமாய்
உங்கள் நினைவுகள் எங்களுக்குள்.....

(44589(10/14))

37/23, 1ஆம் ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

## வீடு வாடகைக்கு

K.K.S ரோட் தாவடிச் சந்திக்கும் கோண்டாவில் உப்புமடம் சந்திக்கும் இடையில் சகல வசதிகளுடனும் வீடு வாடகைக்கு உண்டு.
தொடர்பு:-
072 5987500, 077 5529969

## காணி விற்பனைக்கு

மந்திகை புலோலி அமெரிக்க மிஷன் பாடசாலைக்கு அருகில் கொடிகாமம் சந்தியை அண்மித்ததாக 4 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
தொடர்புகளுக்கு:-
077 3741738

## வேலையாள்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கிக் கொண்டிருக்கும் பிரபல மொத்த வியாபார நிறுவனத்துக்கு
- *. விற்பனையாளர்
- *. விற்பனை உதவியாளர்கள்
- *. யாழ்ப்பாணம்-கொழும்பு பேருந்து ஆசன பதிவு மேற்கொள்வதற்கும் அதற்கு உதவியாளர்களும் தேவை.

யாழ்ப்பாண நகரை அண்டியவர்கள் விரும்பத்தக்கது.
- *. பருத்தித்துறையில் உள்ள அலுவலகத்துக்கும் ஆள்கள் தேவையாக உள்ளனர்.

பருத்தித்துறையை வசிப்பிடமாக கொண்டவர்கள் விரும்பத்தக்கது.

(44550) (10.6.3)
077 573 6003

## மரண அறிவித்தல்



*மரியாம்பிள்ளை இயூஜின் மரியதாஸ்*
(ஊழியர், அன்ரோ டயாலி எலக்ரிக்கல்ஸ்)

மத்தியூஸ் வீதி, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிட மாகவும் கொண்ட மரியாம்பிள்ளை இயூஜின் மரிய தாஸ் நேற்று (10.02.2014) திங்கட்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் மேரிராணியின்(சந்திரா) அன்புக் கணவரும், காலஞ் சென்ற சந்தியோகு மரியாம்பிள்ளை (ஆசிரியர்) -அன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், அருட்பிரகாசம் -யூஸ்தினம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், பாலன், நிமல் (அன்ரோ எலக்ரிக்கல்ஸ்), சசி, நிமாலினி, கேமலக்ஷன் ஆகியோரின் அன்புத் தந்தையும், சுரேஸ் குமாரின் (இத்தாலி) அன்பு மாமனும், இம் மனுவேல் ஜோசேப், அல்பிரட் றெமி சியா, விமலநாயகி, றெஜிஸ் (கனடா), அன்ரன் (சுவிஸ்), ஜோர்ஜ் (வவுனியா) ஆகி யோரின் அன்புச் சகோதரனும், கிரிஸ் தோப்பர், துரை(சேவியர்), செல்வம், சௌந்திரம், லோரன்ஸ் (இந்தியா), மரிய நாயகம் (AUTO), காலஞ்சென்ற செல்வஞானம் மேரி அந்தோனிப்பிள்ளை (மலர்), மரியம்மா (தங்கம்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.02.2014)செவ்வாய்க் கிழமை பி.ப. 3.00 மணியளவில் யாழ் மரியன்னை பேராலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு பின் கொஞ்சேஞ்சி மாதா சேமக் காலைக்கு நல்லடக்கத்துக்காக எடுத்துச் செல்லப் படும். இந்த அறி வித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

7/1, மத்தியூஸ் வதி, யாழ்ப்பாணம்.
021 222 1305

தகவல் :
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

*நாகமுத்து தியாகராசா*
(முன்னாள் முகாமையாளர், கூட்டுறவு வைத்தியசாலை -சிற்றுண்டிச் சாலை- [illegible])



பொன்னாலையைப் பிறப்பிடமாகவும் மெமோரியல் வீதி, மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட நாகமுத்து தியாகராசா நேற்றுமுன்தினம் (09.02.2014) ஞாயிற்றுக்கிழமை இறைபதமெய் தினார்.

அன்னார் காலஞ்சென்ற நாகமுத்து -பார்வதி தம்பதியரின் ஏகபுதல்வனும், காலஞ்சென்ற சிதம்பரப்பிள்ளை-தங்க முத்து தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற கனகம்மாவின் பாசமிகு கணவரும், மல்லிகா (ஜேர்மனி), ஆனந் தன் (ஜேர்மனி), இராகவன் (லண்டன்), Dr. சுதர்மன் (மானிப்பாய் பிரதேசசபை) ஆகி யோரின் அன்புத் தந்தை யும், மனோகரன் (ஜேர்மனி), நவராணி (ஜேர்மனி), கஜீதா (லண் டன்), Dr. அருள்மொழி (யாழ். மாநகரசபை) ஆகியோரின் பாசமிகு மாமனும், திருமகள், சேயோன் (ஜேர்மனி), அனிதா, அர்ச்சனா (ஜேர்மனி), அனி ருத்தன், அட்சயா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (12.02.2014) புதன்கிழமை மு.ப. 11.00 மணியளவில் அவரது மானிப்பாய் இல்லத்தில் நடைபெற்று பூதவுல் தகனக்கிரி யைக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறி வித்தலை உற்றார், உறவினர், நண் பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

25/2, மெமோறியல் விதி, மானிப்பாய்.
021 225 5944

தகவல் :
Dr. தி. சுதர்மன் (மகன்)

## நினைவலைகள்

ஓம் விராட் விஸ்வப்பிரம்மனே நமஹ

**31 ஆம் நாள் வீட்டுக்கிருத்திய அழைப்பிதழ்**

தோற்றம் 23 * 09 * 1970



மறைவு 12 * 01 * 2014

அமரர் இரத்தினவேலு சிவகுமார்
(பெரியதம்பி)

திதி : துவாதசி

**22 ஆம் ஆண்டு நினைவஞ்சலி**

தோற்றம் 25 * 02 * 1943



மறைவு 09 * 02 * 1992

அமரர் முத்துத்தம்பி இரத்தினவேலு
(சந்தனம்)

அவர்களின் ஆத்மசாந்திப்பிரார்த்தனையும் மதிய போசன நிகழ்வும் இன்று (11.02.2014) அவரது இல்லத்தில் நடைபெறும்.

எத்தனை நாள்கள் ஆனாலும் நீங்கள் எங்களுடன் இருந்த போது
எங்கள் இல்லத்தில் ஒளி விளக்கு ஒளி [illegible]
அப்படி ஒரு பிரகாசத்தை இனி எப்போது [illegible]

பிரேம்விலாசா,
மானிப்பாய்

மனைவி, மக்கள், மருமகன்,
மருமகள்கள், பேரப்பிள்ளைகள்.

ஆலடி வைரவர் கோவிலடி,
உயரப்புலம், ஆனைக்கோட்டை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## கட்டுக்கடங்காத காட்டுத் தீ

ஆஸ்திரேலியாவின் இரண்டாவது பெரிய நகரமான மெல்போர்ன் அருகே பரவிவரும் காட்டுத் தீயினால் 20க்கும் மேற்பட்ட வீடுகள் எரிந்து சாம்பலாகியுள்ளன. மேலும் பல வீடுகள் தீயில் சிக்கும் அபாயம் உள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. வேகமாகப் பரவி வரும் தீயை அணைக்கத் தீயணைப்பு வீரர்கள் கடும் முயற்சி மேற்கொண்டு வருகின்றனர். எனினும் அதிகளவான இடங்களில் தீ பரவியுள்ளதால் தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவது சிரமமான காரியமாக அமைந்துள்ளது என்று கூறப்படுகின்றது. 2009ஆம் ஆண்டில் இவ்வாறு ஏற்பட்ட தீயில் சிக்கி 173 பேர் உயிரிழந்தனர். (ற)

## தென்னாபிரிக்க பொதுத்தேர்தல் மே மாதம்

ஜொகன்னர்ஸ்பேர்க், பெப்.11

தென்னாபிரிக்காவில் எதிர்வரும் மே மாதம் 7ஆம் திகதி 5 ஆவது பொதுத் தேர்தல் நடைபெறும் என்று அந்த நாட்டு ஜனாதிபதி ஜேக்கப் ஜூமா அறிவித்துள்ளார். இந்தத் தேர்தலில் இதுவரை இல்லாத அளவுக்கு கடும் போட்டி நிலவும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

தென்னாபிரிக்காவில் 1994 ஆம் ஆண்டு முதன்முறையாக ஜனநாயக முறைப்படி நடைபெற்ற தேர்தலில் ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் ஆட்சிக்கு வந்தது. இனவெறியை எதிர்த்துப் போராடிய நெல்சன் மன்டேலா நாட்டின் முதலாவது கறுப்பின ஜனாதிபதியானார்.

தேசத் தந்தை என அந்நாட்டு மக்களால் போற்றப்பட்ட மண்டேலா அண்மையில் சாவடைந்தார். அதன்பின்னர், முதன்முறையாக பொதுத் தேர்தல் நடைபெற உள்ளது. இதுவரை நடைபெற்ற 4 தேர்தல்களிலும் ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் கட்சி பெரும் வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. ஆனால், இந்த முறை அதற்கு வாய்ப்பு மிகவும் குறைவு என்று கூறப்படுகின்றது.

ஊழலை ஒழிக்க ஆக்கபூர்வ நடவடிக்கை எடுக்காதமை, வேலையில்லாத் திண்டாட்டம் மற்றும் மக்கள் நலத்திட்டங்களில் குளறுபடி போன்ற பல பிரச்சினைகள் காரணமாக ஜேக்கப் ஜூமா தலைமையிலான அரசுக்கு எதிராக கடும் அதிருப்தி நிலவுவதே இதற்குக் காரணம். அதேவேளை, ஆளும் ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் கட்சிக்குள்ளேயும் பிரச்சினைகள் வெடித்துள்ளன என்றும் கூறப்படுகின்றது. (ற)

# ஆபிரிக்க குடியரசில் தொடரும் மோதல்கள்

### நேற்றும் 9 பேர் சாவு

ஜூமா, பெப்.11

மத்திய ஆபிரிக்கக் குடியரசில் தொடர்ந்து இடம்பெற்றுவரும் வன்முறைச் சம்பவங்களில் 9 பேர் உயிரிழந்துள்ளனர்.

கடந்த சில மாதங்களாக மத்திய ஆபிரிக்கக் குடியரசில் இடம்பெற்றுவரும் மத ரீதியிலான வன்முறைச் சம்பவங்களில் 2 ஆயிரத்துக்கும் அதிகமானவர்கள் உயிரிழந்துள்ளனர். அதனை அடுத்து வன்முறைகளைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரும் விதத்தில்அந்நாட்டு இராணுவத்துடன் இணைந்து பிரான்ஸ் படைகளும் அங்கு நிலை கொண்டுள்ளன. எனினும் வன்முறைகள் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றன என்று அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.



வன்முறைகளை அடுத்து இடம்பெயர்ந்துள்ள மக்கள்

அதேவேளை, நேற்றும் அந்நாட்டுத் தலைநகர் பாங்கீயில், வேற்று மதத்தைச் சேர்ந்தவர்கள் மீது தாக்குதல் நடத்த முற்பட்ட கும்பல் ஒன்றை மத்திய ஆபிரிக்க அமைதிப் படையினர் விரட்டியடித்துள்ளனர் என்று கூறப்படுகின்றது. (ற)

## நோர்வேயில் பனி இசைத் திருவிழா

லண்டன், பெப்.11

நோர்வேயில் முற்றிலும் பனிக்கட்டிகளால் உருவாக்கப்பட்ட இசைக்கருவிகளைக் கொண்டு பனி இசைத் திருவிழா நிகழ்ச்சி நடத்தப்பட்டுள்ளது . உறைந்துபோன இசைக் கருவிகளை கலைஞர்கள் இசைக்க, அரங்கு முழுவதும் பனிக்கட்டிகளால் உருவாக்கப்பட்டிருந்தமை அனைவரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியது.



பனி இசைத் திருவிழாவில் ஒரு காட்சி

இயற்கை மற்றும் தண்ணீருக்கு மரியாதை அளிக்கும் விதத்தில் கடந்த 9 ஆண்டுகளாக இந்த பனி இசைத் திருவிழா நடைபெற்று வருகின்றது. இந்த ஆண்டு முதன்முறையாக பனி இசைக் குழு ஒன்று பிரத்தியேகமாக உருவாக்கப்பட்டுள்ளது என்று இதன் ஒருங்கிணைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர். (ற)

## மாடு திருடி மாண்ட திருடர்கள்

### மடகஸ்கரில் சம்பவம்

லண்டன், பெப்.11

மடகஸ்கரில் பொலிஸாருக்கு கால்நடைத் திருடர்களுக்கும் இடையே இடம்பெற்ற துப்பாக்கிச் சண்டையில் கால்நடைத் திருடர்கள் 15 பேர் உயிரிழந்துள்ளனர் என்று பொலிஸார் கூறுகின்றனர்.

கடந்த வெள்ளிக்கிழமை பொலிஸார் மேற்கொண்ட இந்த அதிரடி நடவடிக்கையில் நூற்றுக்கும் அதிகமான ஜேசி வகை மாடுகளின் தலைகளைத் தாம் கண்டெடுத்துள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர்.

மடகஸ்கரில் கால்நடைத் திருட்டு என்பது வழமையாக நடந்துவரும் ஒரு விடயம். 2012ஆம் ஆண்டில் கால்நடை திருட்டுத் தொடர்பான சம்பவங்களில் நூற்றுக்கும் அதிகமானோர் உயிரிழந்ததை அடுத்து, அந்நாட்டு அரசு கால்நடைத் திருட்டுக்கு எதிரான விசேட அதிரடிப்படை ஒன்றை அமைத்துள்ளது. (ற)

## குடியேற்றத்தை கட்டுப்படுத்த சுவிற்ஸர்லாந்து நடவடிக்கை

லண்டன், பெப்.11

சுவிற்ஸர்லாந்துக்கு ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து குடியேறுபவர்களின் எண்ணிக்கையை கட்டுப்படுத்தும் அரசின் திட்டத்துக்கு பொதுமக்கள் ஆதரவு வழங்கியுள்ளனர்.

ஐரோப்பிய ஒன்றிய நாடுகளின் மக்கள் சுவிற்ஸர்லாந்தில் கட்டுப்பாடில்லாமல் சுதந்திரமாக குடியேறும் ஒப்பந்தம் கடந்த 12 ஆண்டுகளாக நடைமுறையில் இருந்து வருகிறது. சுவிற்ஸர்லாந்து ஐரோப்பிய ஒன்றியத்தில் உறுப்பினராக இல்லாத போதும், அங்கு பொதுமக்கள் சுலபமாக குடியேறி வருகின்றனர்.

இந்தநிலையில் குடியேற்றத்தைக் கட்டுப்படுத்தும் திட்டத்தை மீண்டும் நடைமுறைக்கு கொண்டு வர, குடியேற்றக் கட்டுப்பாட்டுச்சட்டத்தின் மீது பொது வாக்கெடுப்பு நடந்தப்பட்டது. அதற்கு 50.3 சதவிகிதம் பேர் அரசுக்கு ஆதரவாக வாக்களித்துள்ளனர்.

அதேவேளை சுவிற்ஸர்லாந்து அரசின் இந்த முடிவால் வர்த்தக ரீதியாக பெரும் பாதிப்பு ஏற்படும் என்று துறைசார் வல்லுநர்கள் கருத்து தெரிவித்துள்ளனர். (ற)

# வேற்றுக்கிரக பறக்கும் தட்டு அமெரிக்கா மீது பறந்ததா?

நியூயோர்க், பெப்.11

அமெரிக்காவில் தெற்கு கரோலினா மாகாணத்தின் மீது வேற்றுக் கிரக பறக்கும் தட்டு பறந்ததாக இணையத்தளத்தில் பிரபலமடைந்து வரும் காணொலியால் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

இது தொடர்பாக பிரபல அமெரிக்க நாளிதழான 'நியூயோர்க் டெய்லி நியூஸ்' வெளியிட்டுள்ள தகவலில்,

"தெற்கு சார்லோட்டில் உள்ள போர்ட் மில் பகுதியில் குவாங் டிராங் [illegible] வேற்றுக் கிரக பறக்கும் தட்டு போன்ற ஒன்றைப் பார்த்துள்ளார். உடனடியாக அதனைத்தனது கைத்தொலைபேசியில் உள்ள கமரா மூலம் காணொலியாகப் பதிவு செய்தார். ஒரு நிமிடத்துக்குள்ளாக [illegible] பின் [illegible] முறையாக எடுத்த வீடியோவில் மற்றொரு வேற்றுக்கிரக பறக்கும் தட்டு போன்ற ஒன்று தெரிகிறது.

அது இடது புறமாகவும் பின்னர் வலது புறமாகவும் செல்கிறது. பார்ப்பதற்கு பயணிகள் பயணிப்பதற்கு ஏதுவானது போல் தெரிகிறது" எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த காணொலி 'யூடியூப்' இணையத்தளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது: இதில் கருத்துகளைப் பதிவு செய்துள்ள பலரும் இது தொடர்பாக விவாதித்து வருகின்றனர். அது ஆளில்லா விமானமாகவோ, ரிமோட் மூலம் கட்டுப்படுத்தப்படும் பொம்மையாகவோ இருக்கலாம் எனவும் சிலர் கருத்துத் தெரிவித்துள்ளனர். (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தகைமைகள் உள்ள போதும் நிரந்தர நியமனம் இல்லை

## முல்லைத்தீவு தொண்டர் ஆசிரியர்கள் விசனம்

முல்லைத்தீவு, பெப்.11

நிரந்தர நியமனம் வழங்கப்படுவதற்குரிய தகைமைகள் யாவும் இருந்த போதிலும் இதுவரை தமக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படாது இழுத்தடிக்கப்பட்டு வருகின்றமை தொடர்பாக முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த தொண்டர் ஆசிரியர்கள் சிலர் கடும்விசனம் தெரிவித்துள்ளனர்.

துணுக்காய் கல்வி வலயத்தில் மட்டும் இத்தகைய எட்டுப்பேர் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிய வருகின்றது. தகுதியுடையவர்களின் பெயர்கள் தம்மால் பரிந்துரை செய்யப்பட்டு அனுப்பி வைக்கப்பட்ட நிலையில் குறிப்பிட்டவர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படாமை தொடர்பாகத் தமக்கு எதுவும் தெரியாதென துணுக்காய் கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

**தகுதியுடையவர்களின் பெயர்கள் பரிந்துரை செய்யப்பட்டு அனுப்பி வைக்கப்பட்ட நிலையில் குறிப்பிட்டவர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படாமை தொடர்பாகத் தமக்கு எதுவும் தெரியாதென துணுக்காய் கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.**

சகல தகுதிகளுடனும் 12 வருடங்களுக்கும் மேலாகப் பணியாற்றியதுடன் நிரந்தர நியமனம் வழங்குவதற்கான நேர்முகப் பரீட்சையில் தோற்றிய போதிலும் ஏனையவர்கள் போன்று தமக்கும் நிரந்தர நியமனம் வழங்கப்படாமை குறித்து பாதிக்கப்பட்ட தொண்டராசிரியர்கள் மத்திய கல்வி அமைச்சர், ஜனாதிபதி, வடமாகாண கல்வி அமைச்சர், முதலமைச்சர் ஆகியோருக்கு முறைப்பாடு தெரிவித்துள்ள போதிலும் பயன் எதுவும் இதுவரை கிடைத்ததாகத் தெரியவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், தாம் மோசமாகப் பாதிக்கப்பட்ட நிலையில் சாதகமானதொரு பதில் கிடைக்கும் என்ற நம்பிக்கையுடன் காத்திருப்பதாகவும் அவர்களால் தெரிவிக்கப்பட்டது. (க-500)



கோப்புப் படம்

# சந்தைப்படுத்த முடியாத நிலையில் பனைசார் உற்பத்திப் பொருள்கள்

முல்லைத்தீவு, பெப்.11

ஒட்டசுட்டான் பிரதேசத்தில் சிறுகைத்தொழில்களில் ஈடுபடும் பெண்களின் பனைசார் உற்பத்திப் பொருள்களைச் சந்தைப்படுத்த முடியாத நிலையில் உற்பத்தியாளர்கள் பாதிக்கப்படுவதாக உற்பத்தி ஊக்குவிப்பாளர் திருமதி லக்கிராணி சிறிரஞ்சன் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்;

சிறுகைத் தொழில்களில் ஈடுபடும் பெண்கள் இதுவரை காலமும் தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனை கூட்டுறவுச் சங்கத்தின் அனுசரணையுடன் செயற்பட்டு பனைசார் உற்பத்திப் பொருள்களை உற்பத்தி செய்து விற்பனை செய்து வருகின்றனர்.

ஆனால் தற்போது இவர்கள் உற்பத்தி செய்யும் பொருள்களைக் கொள்வனவு செய்வதற்கு எவரும் முன்வராத நிலையில் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளார்கள். கற்சிலைமடு பொதுநோக்கு மண்டபத்தில் பெண்களுக்கான பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

விசுவமடு சிவில் நிர்வாக அலுவலகக் கிளையினர் பயிற்சி பெற்றவர்களை உள்வாங்க முன்வந்துள்ளதாகவும் இதன் மூலமாவது இவர்களுக்கு விமோசனம் கிடைக்குமென எதிர்பார்ப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (க-500)

# பார்வை இழந்தவர்களுக்கு வெள்ளைப் பிரம்புகள்

வவுனியா, பெப்.11

வன்னி விழிப்புலனற்றோர் சங்கத்தினால் பார்வை இழந்த 20 பேருக்கு வெள்ளைப் பிரம்புகள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வு வன்னி பார்வையற்றோர் சங்கத் தலைவர் எஸ்.ரூபராஜ் தலைமையில் பரந்தனில் உள்ள வன்னி விழிப்புலனற்றோர் சங்க அலுவலகத்தில் இடம்பெற்றது.

இந்த வெள்ளைப் பிரம்பு வழங்கும் நிகழ்வில் முன்னாள் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் தி.இராசநாயகம், இலங்கை மெதடிஸ்த திருச்சபையின் பங்குத்தந்தை றிச்சாட் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்தவெள்ளைப்பிரம்புகள்வெளிநாடொன்றில் இயங்கிவரும் புலம்பெயர்ந்தவர்களால் நடத்தப்படும் நிறுவனத்தின் உதவியுடன்வழங்கிவைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (க-402)

# மன்னார் நகரப் பகுதியில் பல அபிவிருத்திப் பணிகள்

## நகர சபை உறுப்பினர் தெரிவிப்பு

எதிர்காலத்தில் மன்னார் நகர சபையினால் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளதாகத் தெரிவித்தார் மன்னார் நகரசபையின் ஆளும்கட்சி உறுப்பினரான இரட்ணசிங்கம் குமரேஸ்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்;

மன்னார் நகரசபை பல்வேறு அபிவிருத்திப் பணிகளை மேற்கொண்டு வருகின்றது. குறிப்பாக போருக்குப் பின்னரான இந்தக் காலப் பகுதியில் நீண்ட காலத்துக்குப் பின்னர் மன்னார் மாவட்டத்தில் உள்ளூராட்சி மன்றங்கள் செயற்படத் தொடங்கியுள்ளன.

இவ்வாறான சூழ்நிலையில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பல சவால்களின் மத்தியில் ஆட்சியைக் கைப்பற்றியது. ஆனால் நிர்வாகத்தைக் கொண்டு செல்வதில் பல சிக்கல்கள் காணப்படுகின்றன.


ஆட்சியைப் பிடித்திருந்தாலும் தமது சேவைகளை வழங்குவதற்கு உள்ளூராட்சி மன்றங்களில் போதிய அளவு நிதியில்லை. இவ்வாறான சூழ்நிலையில் விமர்சனங்களையும் தாண்டி குறித்த நிர்வாகங்கள் தமது சேவைகளை மக்கள் மத்தியில் முன்னெடுத்து வருகின்றன.

இதன் பிரகாரம் மன்னார் நகர சபை பல்வேறு திட்டங்களின் ஊடாகப் பெறப்பட்ட நிதியை நகர அபிவிருத்திக்கெனச் செலவிட்டு வருகிறது.

இதற்கு உறுதுணையாக அரச சார்பற்ற தொண்டு நிறுவனங்கள் உள்ளிட்ட பல அமைப்புகள் மன்னார் நகர சபைக்கு அனுசரணை வழங்கி வருகின்றன. இதன் அடிப்படையில் உள்ளக வீதிகள், கடைத் தொகுதிகள், பொது மலசலகூடங்கள், தனியார் போக்குவரத்து நிலையம் என்பன அமைக்கப்பட்டன. மேலும் சேமக்காலை புனரமைப்பு, கழிவுப் பொருள்களை பசளையாக்கும் திட்டம், மன்னார் சிறுவர் பூங்காவின் அபிவிருத்தி, கிராமங்களின் உள்ளக வீதிகளை கொங்கிறீட் வீதிகளாகத் தரமுயர்த்தல், தாழ்நிலப் பகுதியில் வடிகால் அமைப்புகள் போன்ற பல அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதேவேளை 500 க்கும் அதிகமான தெரு விளக்குகள் மன்னார் நகரசபையின் நிதியில் இலங்கை மின்சார சபையுடன் இணைந்து மன்னார் நகர சபைக்கு உட்பட்ட பகுதிகளில் பொருத்தப்பட்டுள்ளதுடன் தொடர்ந்து அவை பராமரிக்கப்பட்டும் வருகின்றன.

இதேவேளை எதிர்காலத்தில் மேலும்பல அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுப்பதற்கு மன்னார் நகரசபை திட்டமிட்டுள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (க-56)



மன்னார் வாராந்த சந்தையின் பெயர்ப் பலகையை நகர சபைத் தலைவர் எஸ்.ஞானப்பிரகாசம் திரை நீக்கம் செய்து வைக்க அருகில் உபதலைவர், செயலாளர் ஆகியோரும் காணப்படுகின்றனர்.

# பால் உற்பத்தியை மேலும் அதிகரிக்க நடவடிக்கை

## மல்லாவியில் நடந்த பொங்கல் நிகழ்வில் உரை

துணுக்காய், பெப்.11

துணுக்காய் கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கமும், கால்நடை அபிவிருத்தி சுகாதாரப் பணிமனையும் இணைந்து அண்மையில் மல்லாவியிலுள்ள கால்நடை மருத்துவ நிலையத்தில் பொங்கல் நிகழ்வை நடத்தின.

கால்நடை அபிவிருத்திப் போதனாசிரியர் இ.இரத்தினசபாபதி தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்ட கால்நடை அபிவிருத்தி உதவிப் பணிப்பாளர் திருமதி கிரிஜகலா சிவானந்தன் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டார். அங்கு அவர் உரையாற்றுகையில்;

எமது மாவட்டத்தில் ஆ நிரைகளைப் பாதுகாத்து பால்வளம் பெருக்குவதற்குரிய ஒத்துழைப்பு கால்நடை அபிவிருத்தித் திணைக்களத்தினால் போதிய அளவு வழங்கப்படும்.

மேலும் கடந்த ஆண்டு கால்நடை வளர்ப்போரிடமிருந்து 11 லட்சத்து 5 ஆயிரத்து 608 லீற்றர் பால் கொள்வனவு செய்யப்பட்டு உள்ளூரில் விநியோகிக்கப்பட்டுள்ளது. இதேவேளை 11 லட்சத்து 98 ஆயிரத்து 660 லீற்றல் பால் வெளிமாவட்டங்களுக்கும், பாற்பொருள்களை உற்பத்தி செய்யும் நிறுவனங்களுக்கும் வழங்கப்பட்டன.

நடப்பு ஆண்டில் பால்உற்பத்தியை மேலும் அதிகரிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன - என்றார்.

செயற்கை முறைச் சினைப்படுத்தலின் மூலமாக கன்றுகளைப் பெற்றுக் கொண்ட பண்ணையாளர்களுக்கு இலங்கை வங்கி, மக்கள் வங்கி ஆகியவற்றின் அனுசரணையுடன் ஊக்குவிப்புத் தொகைகளும் வழங்கப்பட்டன. (க)

# பொதுக் கூட்டம் இடம்பெறாமை தொடர்பாக கடும் விசனம்

கிளிநொச்சி, பெப்.11

கிளிநொச்சி மாவட்ட டிராக்டர் உரிமையாளர் சங்கத்தின் பொதுக் கூட்டம் நீண்ட காலமாக நடத்தப்படாமை தொடர்பாக டிராக்டர் உரிமையாளர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

கிளிநொச்சியில் மீள்குடியமர்வு இடம்பெற்ற பின்னர் உருவாக்கப்பட்ட இந்தச் சங்கத்தின் அங்கத்தவர்களிடம் இருந்து பெறப்பட்ட நிதிக்குரிய கணக்குகள் தொடர்பாகத் தமக்கு எதுவும் தெரியாத நிலை காணப்படுவதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக கிளிநொச்சி மாவட்ட டிராக்டர் உரிமையாளர் சங்கத் தலைவர் க.சிவகுமாரிடம் கேட்ட போது;

விரைவில் சங்கத்தின் பொதுக் கூட்டம் நடத்தப்பட்டு புதிய நிர்வாகம் தெரிவு செய்யப்படவுள்ளதாகத் தெரிவித்தார்.

மேலும் மணல் அனுமதிப் பத்திரங்கள் கிடைக்காத டிராக்டர் உரிமையாளர்கள், சங்கம் தொடர்பாகப் பிழையான தகவல்களை வழங்கி வருவதாகவும் அவர் தெரிவித்தார். (க-18)

# 2014 ஆசிரியர் பயிற்சிக்கு எம்மையும் உள்ளீர்க்கவும்

## கிளிநொச்சி ஆசிரிய உதவியாளர் கோரிக்கை

கிளிநொச்சி, பெப்.11

இந்த ஆண்டிலேயே தம்மையும் ஆசிரியர் பயிற்சிக் கலசாலையில் உள்ளீர்க்குமாறு கிளிநொச்சி மாவட்ட ஆசிரிய உதவியாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கிளிநொச்சி மாவட்ட ஆசிரிய உதவியாளர் சங்கத்தின் ஏற்பாட்டில் கிளிநொச்சி மத்திய கல்லூரியில்கடந்தசனிக்கிழமை காலை 9 மணிக்கு கிளிநொச்சி மாவட்ட ஆசிரிய உதவியாளர்களுடனான கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றபோது இந்தக் கோரிக்கை விடப்பட்டது.

தாம் கிளிநொச்சி மாவட்டத்தில் நீண்ட காலமாகத் தொண்டர் ஆசிரியர்களாகச் சேவையாற்றிய போதிலும் அண்மையிலேயே தமக்கு ஆசிரியர் உதவியாளர் நியமனம் வழங்கப்பட்டதாகவும் தெரிவிக்கும் இவர்கள் தம்மை ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைக்கு உள்வாங்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமெனக் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-426)

# உவர்த் தடுப்பணையை அமைக்க பல்லவராயன்கட்டில் கோரிக்கை

பூநகரி, பெப்.11

பூநகரியின் பல்லவராயன் கட்டுக் கிராமத்தின் மேற்குப் பகுதியில் உவர்த் தடுப்பணை அமைக்கும் திட்டத்தை முன்னெடுக்க வேண்டும் என வடமாகாண விவசாய அமைச்சரிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

கடந்த 2007 ஆம் ஆண்டு ஒக்ஸ்பாம் நிறுவனத்தின் நிதியுதவியுடன் மூன்று கிலோ மீற்றர் நீளமான உவர்த் தடுப்பணை வேலைகள் இங்கு நடைபெற்றுக் கொண்டிருந்த போது போர்ச்சூழல் காரணமாக வேலைகள் இடைநிறுத்தப்பட்டன.

கிராஞ்சியின் சம்வெளியிலிருந்து குமிழமுனைக் கிராமம் வரையான இந்த உவர்த்தடுப்பணையை அமைப்பதன் மூலமாக பல்லவராயன் கட்டு, கரியாலை நாகபடுவான், கிராஞ்சி ஆகிய கிராமங்களின் 1,600 ஏக்கர் வயல் நிலங்கள் பாதுகாக்கப் படுவதற்கான சூழ்நிலை உருவாகும்.

தடுப்பணை இல்லாததன் காரணமாக பல்லவராயன்கட்டு கிராம அலுவலர் பிரிவின் 90 வீதமான நிலம் உவராக மாறியுள்ளது.

நொச்சிமுனை ஆற்றின் வழியாகவே கடல் நீர் கிராமங்களுக்குள் பரவி வருவதாக பல்லவராயன்கட்டு கமக்கார அமைப்பின் தலைவர் செ.கனகசபை தெரிவித்தார்.

கிராஞ்சியின் ஆயிரம் ஏக்கருக்கு மேலான வயல்நிலங்களில் பெரும்பகுதி உவராக மாறியுள்ளது.

பூநகரியின் ஆலங்கேணிப் பகுதியில் உவர்த் தடுப்பணை அமைக்கப்படும் போது அதன் தெற்குப் பகுதியின் உவராபத்தையும் கட்டுப்படுத்துமாறு கிராஞ்சி பல்லவராயுன்கட்டு, கரியாலை நாகபடுவான் மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (க-18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்கில் ஒன்றிணைந்த சிறுவர் பாதுகாப்புத் திட்டம்

ஏறாவூர்,பெப்.11
ஒன்றிணைந்த சிறுவர் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் கிழக்கு மாகாணத்தில் சிறுவர் கழகங்கள் வலுப்படுத்தப்பட்டு வருகின்றன என்று பிளான் ஸ்ரீலங்கா நிறுவனம் தெரிவித்துள்ளது.

விளையாட்டு ஊடகத்தினூடாக சிறுவர்களுக்கு ஆற்றல் விருத்திக்கான பயிற்சிகளும், புறக்கிருத்திய செயற்பாடுகளுக் கூடாக சகவாழ்வு மற்றும் ஆளுமை விருத்திச் செயற்பாட்டுப் பயிற்சிகளும் வழங்கப்பட்டு வருகின்றன என்று இந்த நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

ஏறாவூர் நகர பிரதேச செயலர் பிரிவிலுள்ள 950 சிறுவர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் 9 சிறுவர் கழகங்களுக்கு சுமார் மூன்று லட்சம் ரூபா பெறுமதியான விளையாட்டு உபகரணங்கள் கையளிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)




கல்முனையில் உள்ள தரவைப்பிள்ளையார் ஆலய வீதி தொடர்பாக அண்மையில் கல்முனை மாநகர சபை முதல்வரால் எடுக்கப்பட்ட பெயர் மாற்ற முடிவுக்கு எதிர்ப்புத் தெரிவித்து கல்முனையில் உள்ள பொது அமைப்புக்கள், சிவில் சமூகம், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கிழக்கு மாகாணசபை உறுப்பினர்கள், மாநகரசபை உறுப்பினர்கள், பெண்கள் அமைப்புக்கள், விளை யாட்டுக்கழகங்கள் ஆகியவற்றின் உறுப்பினர்களும் இணைந்து நேற்றுத்திங்கட்கிழமை கல்முனை தரவைப் பிள்ளையார் ஆலய முன்றிலில் இருந்து கல்முனை மாநகரசபை வரை ஆர்ப் பாட்டப் பேரணியில் ஈடுபட்டனர். (ச-10-31)

# நவீன முறையில் இறைச்சி கடைகள் புனர்நிர்மாணம்

மட்டக்களப்பு,பெப்.11
பொதுமக்களுக்குச் சுத்தமான இறைச்சி வகைகளை வழங்கும் நோக்கோடு கல்முனை மாநகர சபைக்குட்பட்ட இறைச்சிக் கடைகளை நவீன முறையில் புனர்நிர்மாணம் செய்யும் வேலைத்திட்டத்தை கல்முனை மாநகர சபை முன்னெடுத்து வருகிறது.

இதற்கமைவாக சாய்ந்தமருது பொதுச்சந்தையில் அமைந்துள்ள ஜும்ஆப் பள்ளிவாசலுக்குச் சொந்தமான இறைச்சிக் கடைகள் நவீன முறையில் நிர்மாணிக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டுள்ளன.

சாய்ந்தமருது ஜும்ஆப் பள்ளிவாசல் கட்டடங்கள் பராமரிப்பு குழுத் தலைவரும், முன்னாள் சாய்ந்தமருது மாளிகைக்காடு வர்த்தகர் சங்கத் தலைவருமான அல்-ஹாஜ் ஏ.சீ.எம். இக்பாலின் வழிகாட்டலில் இந்த வேலைத்திட்டத்தை சாய்ந்தமருது ஜும்ஆப் பள்ளிவாசல் மேற் கொண்டுள்ளது. (ச-10)

# திருமலை மாவட்டத்தில் அபிவிருத்தி திட்டங்கள்

## கிழக்கு முதல்வர் தெரிவிப்பு

திருகோணமலை,பெப்.11
மஹிந்த சிந்தனை வேலைத் திட்டத்தின் கீழ் திருகோணமலை மாவட்டத்தில் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் துரிதமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இவ்வாறு கிழக்கு மாகாண முதலமைச்சர் நஜீப் ஏ மஜீத் தெரிவித்தார்.

கிண்ணியா பிரதேச செயலகத்தில் கிழக்கு மாகாண முதலமைச்சர் நஜீப் ஏ மஜீத்தின் 34 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டின் மூலம் நிர்மாணிக்கப்பட்ட மாநாட்டு மண்டப மேல் மாடிக் கட்டட கையளிக்கும் நிகழ்வு வெள்ளிக் கிழமை இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறினார்.


கிழக்கு முதல்வர் நஜீப் ஏ மஜீத்

மிக விரைவில் கிண்ணியா பிரதேச செயலகத்துக்கு ஐந்து கோடி ரூபா செலவில் அதி நவீன வசதிகளைக் கொண்ட மூன்று மாடிக் கட்டடம் நிர்மாணித்துக் கொடுக்கப்படும் என்று முதல்வர் தெரிவித்தார். (ச)

# பெரும்பான்மைச் சமூகம் புனானையில் குடியேற்றம்

## திட்டமிட்ட நடவடிக்கை என்கிறது கூட்டமைப்பு

மட்டக்களப்பு,பெப்.11
மட்டக்களப்பு மாவட்டத்தின் வடக்கு எல்லையான புனானையில் மீள்குடியேற்றத்துக்கு புறம்பாக வெளி மாவட்டத்தை சேர்ந்த பெரும்பான்மையின குடும்பங்களும் திட்டமிட்டுக் குடியேற்றப்படுகின்றன என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு குற்றம் சாட்டியுள்ளது.

அங்குள்ள இராணுவமும் பௌத்த பிக்குவும் வெளி மாவட்டத்தை சேர்ந்த சிங்கள குடும் பங்களின் குடியேற்றத்துக்கு பின்புலமாக இருக்கின்றனர் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பொன். செல்வராசா தெரிவிக்கிறார்.


பொன். செல்வராசா

புனானையில் ஏற்கெனவே வாழ்ந்துவந்த தமிழ்க் குடும்பங்களை மீள்குடியேற்றுவதை விடுத்து, சிங்கள மக்களைஅங்கு புதிதாகக் குடியேற்ற முயற்சிகள் நடந்து வருகின்றன என்று நாடாளுமன்ற உறுப்பினர் பொன். செல்வராசா குற்றம்சாட்டியுள்ளார்.

சொந்தக் கிராமத்துக்குத் திரும்பினாலும் தமது காணிகளில் இராணுவ முகாம் அமைந்துள்ளதால், சொந்தக் காணியில் குடியிருக்கும்வாய்ப்பு தமக்கு கிடைக்கவில்லை என்று புனானைப் பகுதி தமிழ்க் குடும்பங்கள் கவலை தெரிவித்தன.

மீள்குடியேற்றத்துக்கு தெரிவான குடும்பங்களுக்கு தற்போது காணிகள் அடையாளமிடப்பட்டு பிரதேச செயலகத்தினால் வழங்கப்பட்டாலும், இராணுவம் மற்றும் பௌத்த பிக்குகள் தலையீடு காரணமாக பொருத்தமான காணிகளை வழங்குவதில் சிங்களக் குடும்பங்களுக்கே முன்னுரிமை வழங்கப்படுகிறது என்று அவர்கள் கூறினர்.

இதேவேளை இராணுவத்தின் மீது சுமத்தப்படும் குற்றச்சாட்டுகள் ஆதாரமற்றவை. ஏன் இப்படியான குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படுகின்றன என்பது குறித்து இராணுவம் ஆராயும் என்று அதன் பேச்சாளர் பிரிகேடியர் ருவான் வணிகசூரிய தெரிவித்தார். (ச)




# அபிவிருத்தி என்ற போர்வையில் அகற்றப்படுகின்றன மண்மலைகள்

## சின்னமுகத்துவார மக்கள் விசனம்

மட்டக்களப்பு,பெப்.11
அக்கரைப்பற்று, சின்னமுகத்துவாரப் பிரதேசத்தின் கடற்கரைப் பகுதியில் அபிவிருத்தி என்ற போர்வையில் அங்குள்ள மண்மலைகளைச் சிலர் சட்ட விரோதமாக அகற்றிவருகின்றனர். அதனால் கடல் நீர் குடியிருப்புப் பகுதிக்குள் இலகுவாக உள்நுழையக் கூடிய அபாயம் ஏற்பட்டுள்ளது என்று பொதுமக்கள் விசனம் தெரிவித்தனர்.


சின்னமுகத்துவார கடற்கரைப்பகுதியி[illegible]றப்படும் மண் மலைகள்


இந்தப் பகுதியில் உள்ள பல மண்மலைகள் உல்லாச விடுதிகள் அமைப்பதற்காக என்ற போர்வையில் அகற்றப்பட்டு வருகின்றன. எனவே இவ்வாறான நடவடிக்கையால் எதிர் காலத்தில் கடல் நீர் குடியிருப்பு பகுதிக்குள் உள்நுழையக் கூடிய சூழல் ஏற்பட்டுள்ளது என்று மக்கள் கூறுகின்றனர்.

இது தொடர்பாக கடல்சார் பாதுகாப்பு அதிகாரிகள் மற்றும் சம்பந்தப்பட்ட அ[illegible]களின் கவனத்துக்கு கொண்டுவந்தும் இதுவரை எந்த விதமான நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை என்று மக்கள் குற்றஞ் சாட்டியுள்ளனர். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 39 பிச்சைக்காரர்கள் கொழும்பில் கைது

கொழும்பு, பெப்.11
பிச்சைக்காரர்களை கைது செய்யும் விசேட நடவடிக்கையை பொலிஸார் ஆரம்பித்துள்ளனர். அதனடிப்படையில் ஞாயிற்றுக்கிழமை இரவு கொழும்பில் 39 பிச்சைக்காரர்களைப் பொலிஸார் கைது செய்துள் ளனர்.
பிச்சைக்காரர்களில் சிலர் போதைப் பொருள் வர்த்தகத்துடன் தொடர் புடையவர்களாக இருக்கக் கூடும் என்ற சந்தேகம் ஏற்பட்டுள்ளது.
கைது செய்யப் பட்டவர்களில் சிலரும் இவ்வாறு போதைப் பொருள் களுடன் தொடர்புபட்டுள்ளனர் என்பது விசாரணைகளில் தெரிய வந்துள்ளது என்று பொலிஸ் பேச்சாளர் அஜித் ரோகண தெரித்தார்.
சட்டவிரோத செயற்பாடுகளை தடுக்கம் நோக்கிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டனர் என்று அவர் கூறினார். (ச-10)



கொழும்பு, கொம்பனித்தெரு விதானகே மாவத்தையில் உள்ள தொடர்மாடி வீடமைப்புத் தொகுதிகள் 130 லட்சம் ரூபா செலவில் நவீனமயப்படுத்தி மக்களிடம் கையளிக்கப்பட்டன. இந்த நிகழ்வில் அமைச்சர் விமல் வீரவன்ச, கொழும்பு மாநகர சபை உறுப்பினர் முஸம்மில் உட்பட பலர் கலந்து கொண்டனர். (ச)

# இலங்கையின் அரசமைப்பில் இருபாலாருக்கும் சமஉரிமை

## *ஷிரந்தி தெரிவிப்பு*



*ஷிரந்தி*

கொழும்பு.பெப்.11
பெண்களுக்கு எதிரான வன்முறைகளைத் தடுக்க பல்வேறு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்ட நாடாக இலங்கை விளங்குகின்றது.
இலங்கை அரசமைப்பின்படி ஆணும் பெண்ணும் சமமான உரிமையுடையவர்கள் என்பது ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது என்று ஜனாதிபதியின் பாரியார் ஷிரந்தி விக்கிரமசிங்க ராஜபக்ஷ தெரிவித்தார்.
ஸ்ரீ ரவிசங்கரின் வாழும் கலை அமைப்பால் ஏற்பாடு செய்யப்பட்ட சர்வதேச மகளிர் மாநாடு, இந்தியாவின் பெங்களூர் நகரில் நடைபெற்றது.
இந்த நிகழ்வில் கலந்து கொண்டுஉரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.
இலங்கையில் நடைமுறையிலுள்ள மகளிர் கொள்கைகளுக்கு அமைய பெண்களுக்கான அரசியல் மற்றும் பொது உரிமைகள், கல்வி, பொருளாதார நலன்கள் உட்பட பல உரிமைகளை இலங்கைப் பெண்கள் அனுபவித்து வருகின்றனர் என்று அவர் கூறினார். (ச)

# தீர்மானத்தை முறியடிக்க ஆதரவு தேடும் இலங்கை

## *பல அமைச்சர்கள் வெளிநாடுகளுக்குப் பயணம்*

கொழும்பு,பெப்.11
ஐ.நா மனிதஉரிமைகள் சபையில்,இலங்கைக்கு எதிரான மூன்றாவது தீர்மானத்தைக் கொண்டு வரும் முயற்சிகளில் அமெரிக்கா தீவிரமாக இறங்கியுள்ள நிலையில், அதனை முறியடிப்பதற்கான, ஆதரவைத் திரட்டும் முயற்சிகளில் இலங்கையும் மும்முரமாக இறங்கியுள்ளது.
இலங்கை அமைச்சர்கள் பலரும், பல்வேறு நாடுகளுக்கும் சென்று ஆதரவு திரட்டியுள்ளனர்.
இலங்கை வெளிவிவகார அமைச்சர்ஜி.எல்.பீரிஸ், இந்தியாவிடம், ஆதரவு கோரிய நிலையில், சீனா செல்லவுள்ளார்.
தற்போது, ஐ.நா மனித உரிமைகள் சபையில் அங்கம் வகிக்கும் மொராக்கோவுக்கு அமைச்சர், ஜோன் செனிவிரத்னவும், அல்ஜீரியாவுக்கு அமைச்சர் தினேஸ் குணவர்த்தனவும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.
அமைச்சர் ஏ.எச்.எம்.பௌசி மேற்காசிய நாடுகளின் ஆதரவைத் திரட்டுவதற்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.
அடுத்தமாத முற்பகுதியில், பொதுநலவாய மாநாட்டு நிகழ்வுகளில் பங்கேற்க, பிரிட்டன் செல்லும் இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும், பொது நலவாய நாடுகளின் தலைவர்களைச் சந்தித்து, ஜெனிவாவில் இலங்கைக்கு ஆதரவு வழங்கும்படி கேட்கவுள்ளார். (ச)

# ஓட்டோவில் சென்றவர் வசமாக மாட்டினார்



*கோப்புப்படம்*

கொழும்பு,பெப்.11
தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் ஓட்டோவில் சென்ற நபரொருவரை நெடுஞ்சாலை பொலிஸார் ஞாயிற்றுக்கிழமை கைது செய்துள்ளனர்.
தனியார் பாதுகாப்பு பிரிவைச் சேர்ந்த இந்தச் சந்தேகநபர், தனது பிள்ளையைத் தேடுவதற்காகவே நெடுஞ்சாலையில் ஓட்டோவில் சென்றதாகத் தெரிவித்துள்ளார்.
அதிவேக நெடுஞ்சாலையின் கஹதுடுவ பிரவேசத்தினூடாக நெடுஞ்சாலைக்குள் பிரவேசித்த குறிப்பிட்ட ஓட்டோ காலி நோக்கிப் பயணித்துக்கொண்டிருந்த போது அதனைத் பின் தொடர்ந்து சென்ற பொலிஸார், தடுத்து நிறுத்தி சாரதியைக் கைது செய்துள்ளனர். (ச)

# காடுகளில் தீ பரவுவதைக் கட்டுப்படுத்தத் திட்டம்

## *நடைமுறைப்படுத்தியது சுற்றாடல் அமைச்சு*

காடுகளில் தீ பரவுவதை கட்டுப்படுத்துவதற்காக விசேட திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்று சுற்றாடல் அமைச்சு தெரிவித்துள்ளது.
இந்தத் திட்டம் காடுகளை அண்மித்த பகுதிகளில் வாழும் மக்களின் ஒத்துழைப்புடன் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாக அமைச்சின் செயலர் பி.எம்.யூ.டி.பஸ்நாயக்க தெரிவித்தார்.
அண்மைக்காலங்களில் காடுகளில் ஏற்பட்ட தீயால் அங்கு நீர் நிலைகள் அழிவடைந்துள்ளதாக இடர் முகாமைத்துவ நிலையம் குறிப்பிட்டுள்ளது.
நல்லதண்ணி, ஹந்தானை, கேகாலை ஆகிய பிரதேசங்களிலுள்ள பெருமளவு காடுகள் தீயினால் அழிவடைந்துள்ளன என்று இடர் முகாமைத்துவ உதவி பணிப்பாளர் பிரதீப் கொடிப்பிலி தெரிவித்தார்.
காடுகளில் தீ பரவுவதை கட்டுப்படுத்துவதற்கு மக்கள் அதிகளவு ஒத்துழைப்பு வழங்க வேண்டியது அவசியம் என்று இடர் முகாமைத்துவ நிலையம் குறிப்பிட்டுள்ளது.
இதேவேளை, காடுகளுக்கு தீ வைப்பவர்களுக்குஎதிராககடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது. (ச)

ஈரவிழிகளுடன் ஓராண்டு நினைவஞ்சலி

அமரர்
குலநாயகம் தயாளன்

தோற்றம்:
03.10.1965

மறைவு:
24.01.2013

(திதி : திரயோதசி)
11.02.2014



ஆண்டொன்று சென்றாலும் ஆயிரம் உறவுகளிருந்தாலும்
ஆறாது எம்மனமே! கடல்கடந்து இருந்தாலும்
உம் நினைவாக வாழ்ந்தோம் – ஐயா
பாசமான உம் உருவம் நீறாகிப் போனதென்று
நினைக்க மனம் இல்லை ஐயா
பாசத்திற்கு இலக்கணமாய் எமைப்
பாசவலையில் வீழ்த்திவிட்டு
பரமபாதத்தினை நாடிச் சென்றதேனோ...
பேறாகப் பெற்ற பெருமகனே!
பிரிந்திருக்க மாட்டோம் – யாம்
நினைத்திருப்போம் எந்நாளும்.

இல.42, குமாரசாமி வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

(44548 (7.8.3)

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
07
★
08
★
1949

மறைவு
23
★
01
★
2013

திதி:
துவாதசி 11.02.2014

செல்லத்துரை அன்ரனி யோகராஜா

பண்பின் சிகரமாய் பாசத்தின் உறைவிடமாய்
கடமையே கண்ணாக ஊர் போற்றும் உத்தமராய்
வாழ்ந்து எம்மை விட்டு மாயமாக மறைந்தீரே
ஆண்டொன்று ஓடியதே ஆறவில்லை எம் துயரம்
எம் உயிர் உள்ளவரை உம் நினைவு
எம்மை விட்டு மறையாது

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓடக்கரை,
பருத்தித்துறை.

(44542)(3.8.4)

மனைவி, மகன்.
(077 745 2389)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## போதைப்பொருள் பாவனையை தடுப்பதில் தீவிர போக்குத் தேவை

போதைப்பொருள் மற்றும் போதைப் பவுடர் பாவனை இலங்கையின் தென்பகுதியில் மட்டுமல்ல வட பகுதியிலும் வேகமாகப் பரவி வருகிறது. நகரங்களிலும் கிராமங்களிலும் போதைப் பொருள் பாவனை அதிகரித்து வருவதாகப் புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன. போதைப்பொருள் வியாபாரம் செய்வோர், போதைப்பொருளை நாட்டுக்குள் கடத்துவோர் மற்றும் போதைப்பொருளை விநியோகித்து பெருமளவு பணம் சம்பாதிப்போர் நாட்டில் பெருகி வருகின்றனர். இத் தொழிலில் ஈடுபடுவோர் வெளிநாட்டவர்களாக இருந்தாலும் சரி உள்நாட்டவர்களாக இருந்தாலும் சரி கடுமையான தண்டனை வழங்கப்படவேண்டும். இதற்காக சட்டத்தில் திருத்தம் கொண்டுவரப்படுவது அவசியமாகும்.

ஈழத்துக்கு எதிரான இரண்டாம் கட்டப் போரை ஆரம்பிக்குமாறு அறைகூவல் விடுத்துள்ள அமைச்சர் விமல் வீரவன்ஸ, போதைப்பொருளுக்கு எதிரான போருக்கும் அழைப்பு விடுத்துள்ளார். இந்த நாட்டில் போதைப்பொருள் தொழிலில் ஈடுபடுபவர்கள் அல்லது போதைப்பொருள் கடத்துபவர்கள், வியாபாரம் செய்பவர்களைப் பிடித்து அவர்களுக்கு மரண தண்டனை விதிக்கவேண்டும் என்றும் விமல் கோரியுள்ளார். இத்தகையோருக்கு சிறைத்தண்டனை வழங்கினால் போதாது மரண தண்டனை விதிக்கும் விதத்தில் சட்டத்தில் திருத்தம் கொண்டுவரப்படவேண்டும் என்று ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளார் அவர்.

பாமர மக்களில் இருந்து அரசியல்வாதிகள் வரை ஆதிக்கம் செலுத்துகிறது போதைப்பொருள். கடுமையான சட்டங்களைக் கொண்டுவருவதன் மூலமே இதனை ஓரளவுக்காவது கட்டுப்படுத்த முடியும். அரபு நாடுகள் சிலவற்றில் போதைப்பொருள் பாவனைக்கு மரண தண்டனை விதிக்கப்படுகிறது. அதனால் அந்த நாடுகளில் போதைப்பொருள் பாவனை கட்டுப்பாட்டிலுள்ளது.

இலங்கை, போதைப்பொருள் கடத்தலின் மத்திய நிலையமாக இருப்பதாகவும், ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான் ஆகிய நாடுகளில் இருந்து இலங்கைக்கு போதைப்பொருள் கடத்தப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. கஞ்சா, ஹெரோயின், கொக்கெய்ன், ஹசீஷ் போன்ற பலதரப்பட்ட போதைப் பொருள் வகைகள் இலங்கையில் புழக்கத்தில் உள்ளன. ஒரு கிராம் கொக்கெய்ன் தலைநகரின் சாதாரண நடைபாதைகளில் 15 ஆயிரம் ரூபாவுக்கு விலைபோவதாகக் கூறப்படுகிறது. இவற்றை வைத்திருப்போர் கைதுசெய்யப்பட்டாலும் இதன் பாவனை குறைந்து விடவில்லை என்று சுட்டிக்காட்டப்படுகிறது. கடந்த வருடம் இலங்கையில் 50 ஆயிரம் கிலோ கஞ்சாவும்(கேரள கஞ்சா உட்பட), 23 கிலோ ஹெரோயினும், 18 கிலோ ஹசீஷும், 10 கிலோ கொக்கெய்னும் கைப்பற்றப்பட்டுள்ளன.

இலங்கையில் உல்லாசப் பயணிகளின் வருகை அதிகரித்து வருகிறது. அதனால் போதைப்பொருள் பாவனையும் அதிகரிக்கும் ஆபத்து உண்டு. மேற்கு நாட்டவர்கள் கொக்கெய்னை அதிகம் விரும்புகின்றனர். அதனால் கொக்கெய்ன் கடத்தல் அதிகரிக்கலாம். கடந்த வருடம் மட்டும் கஞ்சா வைத்திருந்த குற்றச்சாட்டில் 22 ஆயிரத்து 700 பேரும், ஹெரோயின் வைத்திருந்த குற்றச்சாட்டில் 11ஆயிரத்து 787 பேரும் கைதுசெய்யப்பட்டிருப்பதால் எதிர்காலத்தில் இலங்கை எதிர்நோக்கும் பிரச்சினைகளில் போதைப்பொருள் புழக்கம் பிரதான இடத்தை வகிக்கும் ஆபத்து உண்டு. வெளிநாட்டவர்களும் இக்கடத்தலில் ஈடுபட்டுக் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் பாகிஸ்தானியர்களே அதிகம். இந்தியர்கள், மாலைதீவு, ஈரான் நாட்டவர்களும் உள்ளனர்.

தேசிய போதைப்பொருள் கட்டுப்பாட்டுச் சபை 2013 ஆம் ஆண்டுக்கான தனது அறிக்கையில், இலங்கையில் 45 ஆயிரம் முதல் 50 ஆயிரம் பேர் வரை போதைப்பொருள் பாவிப்பதாகத் தெரிவித்துள்ளது.

போருக்குப் பின்னர் வடக்கிலும் போதைப்பொருள் பாவனை அதிகரித்து வருகிறது. இலங்கையின் கடல் பகுதிக்குள் சட்டவிரோதமாக வரும் இந்திய மீனவர்கள் மூலம் வடக்கு மீனவர்களுக்கு கிடைக்கும் போதைப் பொருள் குறிப்பாக கேரள கஞ்சா வடபகுதி பாடசாலை மாணவர்கள் மத்தியில் புழக்கத்தில் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. ஆகவே இப்பிரச்சினை தற்பொழுது தெற்கிலிருந்து வடக்கு வரை வியாபித்துள்ளது.

போரினால், பல வகைகளாலும், வழிகளாலும் நொய்ந்து நொடிந்து போயுள்ள வடக்கில், போதைப் பொருள் பாவனை, சில தரப்புகளால் அடாத நோக்குடன் மறைமுகமாக தூண்டப்பட்டு வருவதும் அதிகரித்து வருகிறது.

அந்தக் குழுமங்களை இனங்கண்டு தடுப்பதும், குற்றவாளிகளைத் தண்டிப்பதும் நடைமுறைக்கு வரவேண்டும். சம்பந்தப்பட்ட தரப்புகள் இதில் போதிய நடவடிக்கை மேற்கொள்ள முன்வருவார்களா, எப்போது...?

# பொதுநலவாய தலைமைப் பதவி; தூக்கப்படுவாரா மஹிந்த?

சிங்கள மூலம்:மவ்பிம, தமிழில்-வீஎஸ்ரீ.

## அமெரிக்கா நினைத்தால் காரியம் நடந்தே தீரும்

'நான் எவருக்கும் தெரியாமல் எனது செயலாளர் லலித் வீரதுங்கவை வன்னிக்கு அனுப்பி விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனுடன் பேசிப் பிரச்சினைக்குத் தீர்வுகாண முயற்சித்தேன்' என 2009 ஆம் ஆண்டு ஜூலை மாதம் இந்தியாவின் பிரபல ஊடகமான 'த ஹிந்து' பத்திரிகையின் அவ்வேளைய ஆசிரியர் என்.ராமுக்கு ஜனாதிபதி மஹிந்த தெரிவித்திருந்தார். அதனை உறுதிப் படுத்தும் விதத்தில் ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்கவும் தாம் விடுதலைப் புலிகளின் தலைவர்களை பேச்சுவார்த்தைக்கு முன்வரச் செய்யும் முயற்சியாக 2006 ஆம் ஆண்டில் வன்னிக்குச் சென்றதாகத் தெரிவித்திருந்தார்.

அந்த வகையில் விடுதலைப் புலிகளுக்கு எதிராகப் போரை ஆரம்பிப்பதற்கு முன்பதாக தாம் பேச்சுவார்த்தையூடாகப் பிரச்சினைக்குத் தீர்வு காண முயன்றதாக மஹிந்த வெளிப்படுத்தியிருந்தாரா என்ற கேள்வி எழுகிறது. நீரில் தத்தளிப்பவனுக்கு மூக்கு வரை நீர் மட்டம் உயர்ந்தது போன்றதொரு வேளையிலேயே மஹிந்த தமது செயலாளர் லலித் வீரதுங்கவிடம் அத்தகையதொரு பொறுப்பை ஒப்படைத்திருக்கலாம். விடுதலைப் புலிகள் போர் நிறுத்த உடன்பாட்டை முறித்துக் கொண்டு அரச படையினர் மீது தீவிரமான தாக்குதல்களைத் தொடர்ச்சியாக நாட்டின் சகல பகுதிகளிலும் மேற்கொள்ள ஆரம்பித்ததையடுத்து ஜனாதிபதி மஹிந்த கடும் சவால்களுக்கு முகம் கொடுக்க நேர்ந்தது. அத்தகையதொரு இக்கட்டு நிலையிலேயே ஜனாதிபதி மஹிந்த தமது செயலர் லலித் வீரதுங்கவை வன்னிக்கு அனுப்பி விடுதலைப் புலிகளைப் பேச்சுக்களுக்கு அழைக்க முயன்றிருக்கக் கூடும்.

### ஜனாதிபதியின் செயலர் அவசர அவசரமாக ஜெனிவாவுக்கும் வொஷிங்டனுக்கும் சென்றதேன்?

அப்படியானால் தற்போது ஜனாதிபதி மஹிந்த தமது செயலர் லலித் வீரதுங்கவை ஜெனிவாவுக்கு அனுப்பி வைத்தமை, இத்தகையதொரு இக்கட்டு நிலையைச் சமாளித்து அதிலிருந்து தப்பித்துக் கொள்ளும் நோக்கில் ஆனதொன்றா? என்ற கேள்வி எழுகிறது. அன்று பிரபாகரன், ஜனாதிபதி மஹிந்தவுக்குச் சிரமத்தை ஏற்படுத்தி வைத்தமை போன்று, இன்று அமெரிக்கா உட்பட்ட மேற்குலக நாடுகள் ஜனாதிபதி மஹிந்தவைச் சிரமத்துக்கு உள்ளாக்கி வைத்துள்ளன. கடும் அழுத்தத்தைப் பிரயோகித்து வருகின்றன. எனவேதான் மஹிந்த தண்ணீரில் மூழ்காது தப்பி மூச்சு விடுவதற்கு வழிவகையொன்றைக் காணும் நோக்கில் தமது செயலர் லலித் வீரதுங்கவை ஜெனிவாவுக்கு அனுப்பி வைத்திருக்கக்கூடும்.

அமெரிக்காவுக்குச் சென்ற லலித் வீரதுங்க செய்தியாளர்களிடம் கருத்து வெளியிட்டபோது, போர்க் குற்றங்கள் தொடர்பாக சர்வதேசம் விசாரணையொன்றை மேற்கொள்ள முயன்றால், இலங்கையில் குழப்பம் உருவாகும் என்று தெரிவித்திருந்தார். அன்று விடுதலைப் புலிகளின் தாக்குதல்களைத் தடுத்திட இயலாத நிலையில் லலித் வீரதுங்கவை வன்னிக்கு அனுப்பி விடுதலைப் புலிகளின் தலைவர்களுக்கு. இதேபோன்றதொரு செய்தியைத்தான் மஹிந்த தெரிவித்திருந்தாரோ தெரியவில்லை. பேச்சு வார்த்தைக்கு முன்வராது விட்டால் போர் மூலம் பெரும் நாசம் ஏற்படும் என்று லலித் வீரதுங்க எச்சரித்திருக்கக்கூடும். ஆனால் விடுதலைப் புலிகள் அவற்றுக் கெல்லாம் மசிந்து கொடுக்கவில்லை. ஆனால் தாம் லலித் வீரதுங்க ஊடாக விடுதலைப் புலிகளுக்கு வழங்கிய எச்சரிக்கையை செய்கையிலும் மேற்கொண்டு காட்டி வைத்தார் மஹிந்த. விடுதலைப் புலிகள் முற்று முழுதாக இலங்கை அரசால் அழிக்கப்பட்டனர்.

ஆனால் விடுதலைப் புலிகளுடன் முரண்பட்டமைபோன்று அமெரிக்காவுடன் மஹிந்தவால் முரண்பட இயலாது. என்ன உள்ளர்த்தத்தில் அமெரிக்காவில் வைத்து லலித் வீரதுங்க அத்தகையதொரு கருத்தை வெளியிட்டிருக்கக்கூடும் என்பதை ஊகிக்க முடியவில்லை. ஒரு வேளை இலங்கை மீது சர்வதேச விசாரணை நடத்தப்படுமானால் பெரும்பான்மையின மக்கள் வீதியில் இறங்குவார்கள் என்று சூசக மாகக் கூறியிருக்கக் கூடும். ஆனால் அவ்விதம் மக்கள் வீதியில் இறங்கி யாருக்குத்தான் எதிர்ப்புத் தெரிவிக்கப் போகிறார்கள் என்று அமெரிக்கா எண்ணினால் அதில் ஆச்சரியப்பட எதுவு மில்லை. உண்மையில் அமெரிக்கா உட்பட பலம்வாய்ந்த உலக நாடுகளை பிரபாகரன் போன்று ஜனாதிபதி கணக்குப் போடுவாரானால் அது கேலிக்கு உரியதொன்றே.

அன்று பிரபாகரனை மஹிந்த எந்த வகையில் மடக்கினாரோ, அதே விதத்தில் தான் இன்று அமெரிக்கா உட்பட்ட மேற்குலக நாடுகள் மஹிந் தவை மடக்க முயல்கின்றன. 2009 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 7 ஆம் திகதியன்று ஹிந்து பத்திரிகைக்கு ஜனாதிபதி மஹிந்த வழங்கிய பேட்டியில் பிரச்சினைக்குத் தீர்வுகாண பேச்சு வார்த்தைக்கு முன்வருமாறு தாம் பிரபாகரனுக்கு முன்னர் அழைப்பு விடுத்ததாகத் தெரிவித்திருந்தார். லலித் வீரதுங்கவை வன்னிக்கு அனுப்புவதற்கு முன்னர் அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளேயை பல தடவைகள் வன்னிக்கு அனுப்பி விடுதலைப் புலிகளைப் பேச்சு வார்த்தைக்கு முன்வருமாறு அழைப்பு விடுப்பித்ததாகவும் மஹிந்த ஹிந்து பத்திரிகைக் குத் தெரிவித்திருந்தார்.

அதேவேளை ஜனாதிபதி மஹிந்த நியமித்த கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துமாறு வற்புறுத்த அமெரிக்காவால் அனுப்பப்பட்ட பல உயர்மட்டப் பிரதிநிதிகள் ஒருவர் மாறி ஒருவராக இலங்கைக்கு வந்தனர். ஆனால் ஜனாதிபதி அது குறித்துச் சிறிதேனும் அக்கறை காட்டினாரில்லை. தமது நிலைப் பாட்டில் இருந்து அசைந்து கொடுத் தாரில்லை. 2012 மற்றும் 2013ஆம் ஆண்டுகளில் ஐ.நா. மனித உரிமைகள் சபைக் கூட்டத் தொடர்களில் இலங்கைக்கு எதி ராக அமெரிக்கா பிரேரணைகளை முன்வைத்து நிறைவேற் றியதன் மூலம் இலங்கை அரசுக்கு அபாய அறிவிப்பு விடுத்தது. ஆனால் மஹிந்த அவற்றை எல்லாம் கணக்கில் எடுத் தாரில்லை. கடைசியில் பொறுமை இழந்த அமெரிக்கா முன்னர் பிரபா கரனுக்கு மஹிந்த கற்பித்த பாடத்தை, தற்போது ஜனாதிபதி மஹிந்தவுக்குக் கற்பிக்கத் தயாராகிறது.

அந்த வகையில், அமெரிக்காவால் எதை முன்வைத்து தனது இலக்கை நிறைவேற்றிக்கொள்ள முடியும் என்ற கேள்வியும் எழாமலில்லை. உண்மையில் உலக அரசியலில் அமெரிக்காவால் இயலாத விடயம் என்று ஒன்றில்லை. 2012 மற்றும் 2013 ஆகிய ஆண்டுகளில் அமெரிக்கா ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கைக்கு எதிராக முன்வைத்த பிரேரணைகளின் சர்வதேச விசாரணை தேவை என்ற விடயம் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந் துரைகளை முறைப்படி நடைமுறைப் படுத்துமாறே வலியுறுத்தப்பட்டிருந்தது. இலங்கை அரசு தானே நியமித்த ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடை முறைப்படுத்தாவிட்டால், நாம் நடைமுறைப்படுத்துவிக்கவுள்ளோம் என்று இப்போது அமெரிக்கா கூறுகிறது. அதாவது இலங்கையில் இடம்பெற்ற போர்க் குற்றங்கள் குறித்து விசாரிக்க சர்வதேச விசாரணை ஒன்றைக் கோர விருக்கிறது அமெரிக்கா. வெறுமனே இலங்கை அரசு மீது சர்வதேச போர்க் குற்ற விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும் என்று அமெரிக்கா மார்ச் மாத மனித உரிமைகள் சபைக் கூட்டத் தொடரில் கோரவிருப்பதாகக் கொள்ள முடியவில்லை. உண்மையில் 53 நாடுகள் அங்கம் வகிக்கும் பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள் அமைப்பின் தலைவருக்கு எதிராகவே அமெரிக்காவின் பிரேரணை முன்வைக்கப்படவுள்ளதாகவே கருத முடிகிறது.

அப்படியானால் மஹிந்தவை பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள் அமைப்பின் தலைமைப் பதவியிலிருந்து அகற்றும் நோக்கில்தானா அமெரிக்கா இத்தகைய முயற்சியை மேற்கொள்கிறது என்ற கேள்வியும் எழுகிறது.

உண்மையில் எதிர்வரும் மார்ச் மாத ஜெனிவாக் கூட்டத் தொடரில் இலங்கைக்கு எதிரான அமெரிக்காவின் பிரேரணையின் முக்கிய குறிக்கோள் மஹிந்தவை பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள் அமைப்பின் தலைமைப் பதவியில் இருந்து அகற்றுவது தானா? என்ற கேள்வி எழுவது நியாயமானதே.

### அமெரிக்காவினதும் பிரிட்டனினதும் தற்போதைய உள்நோக்கம்

கடந்த ஆண்டு நவம்பரில் பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள் அமைப்பின் தலைமைப் பதவியை ஏற்க மஹிந்த தயாரான வேளையில், பிரிட்டனின் முக்கிய எதிர்க்கட்சியான தொழிற் கட்சி யின் தலைவர் டேவிட் மிலிபான்ட் பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள் அமைப்பின் தலைமைப் பதவி மஹிந்த வுக்கு வழங்கப்படக் கூடாதெனக் கருத்து வெளியிட்டிருந்தார். ஆனால் குறிப்பிட்ட அந்த மாநாட்டில் கலந்துகொள்ள இலங்கை வந்திருந்த பிரிட்டிஷ் பிரதமர் டேவிட் கமரூனோ, இலங்கை அரசு தனது கடப்பாட்டை நிறைவேற்ற இவ்வாண்டு மார்ச் மாதம் வரை சந்தர்ப்பம் வழங்குவோம், அதுவரை பொறுமை காப்போம் எனத் தெரிவித்திருந்தார்.

மஹிந்த பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள் அமைப்பின் தலைமைப் பதவியை ஏற்ற நாள்களில் இலங்கையி லும் வெற்றி கண்டு, உலக நாடுகளையும் வென்றெடுத்த எமது தலைவருக்கு ஆதரவு வழங்குவோம் என்ற வாசகங்க ளுடன் கொழும்பு நகர் தொடங்கி நாட்டின் கிராம மட்டங்கள்வரை பதாகைகள் அமைக்கப்பட்டன.

சரி, எதிர்வரும் மார்ச் மாத ஜெனிவா மனித உரிமைகள் சபைக் கூட்டத் தொடரில் அமெரிக்கா முன்வைக்கும் இலங்கையின் போர்க் குற்றங்களுக்கு எதிரான சர்வதேச விசாரணை தேவை என்ற பிரேரணை நிறைவேற்றப்பட்ட பின்னர், ஜனாதிபதி மஹிந்தவை பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள் அமைப்பின் தலைமைப் பதவியிலிருந்து நீக்க வேண்டும் என அந்த அமைப்பின் அமைச்சர் மட்ட நடவடிக்கைக் குழுவில் பிரிட்டன் தீர்மானம் ஒன்றைக் கொண்டு வந்து நிறைவேற்றினால் நிச்சயமாக மஹிந்த அவ் அமைப்பின் தலைமைப் பதவியை மற்றொரு உறுப்புநாட்டிடம் கையளிக்க நேரிடும். அது அவ்விதம் நிகழுமானால், தலைமைப் பதவியை ஏற்றமை குறித்து பெருமிதத்தை வெளிப்படுத்த அமைக்கப்பட்ட பதாகைகளுக்கு என்ன ஆகும்?

உண்மையில் மஹிந்த தமது செயலர் லலித் வீரதுங்கவை ஜெனிவாவுக்கும் வொஷிங்டனுக்கும் அனுப்பி வைத்தமை, தமது பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள் அமைப்பின் தலைமைப் பதவி யையும், நாடு முழுவதும் பெருமையை வெளிப்படுத்தி நிற்கும் பதாகைகளையும் காப்பாற்றிக் கொள்ளும் நோக்கிலான ஒன்றுதானா என்பதைக் கூற இயலாதுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆஸ்திரேலியாவின் செயல் வெட்கக்கேடானது



## அந்நாட்டு ஊடகமான 'த ஏஜ்' ஜின் ஆசிரிய தலையங்கத்தில் இருந்து



இலங்கையில் பல்வேறு போர்க்குற்றங்கள் மேற்கொள்ளப்பட்டபோது அதனைப் புரிந்தவர்களுக்கு தண்டனை வழங்கப்பட வேண்டும் என்பதை அதன் ஆளும் அரசு அசட்டை செய்துள்ளது. அத்துடன் இவ்வாறான குற்றங்கள் எவையும் இடம்பெறவில்லை என இலங்கை அரசு உறுதியாகக் கூறுகிறது. இந்த விடயத்தில் ஆஸ்திரேலியா நடவடிக்கை எடுக்கத் தவறியுள்ளது. இலங்கைக்கு எதிராக நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டால் அதன்மூலம் இரு நாட்டு உறவுகளில் விரிசல் ஏற்படும் எனப் பயந்து ஆஸ்திரேலியா தனது கடமையைச் செய்யத் தவறக்கூடாது. இலங்கை விடயத்தில் நீதியை நிலைநாட்டுவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் முன்னெடுக்க வேண்டியது எமது தார்மீகக் கடமையாகும்.

1946இல் நியூறெம்பேர்க்கில் அனைத்துலக இராணுவ நீதிமன்றம் தனது விசாரணையை மேற்கொண்டது. போர்க் குற்றங்கள் மேற்கொள்வதற்குக் காரணமாக இருந்த அதிகாரிகள் அனைத்துலகச் சட்டத்தை மீறியிருந்தனரா என்பது தொடர்பாக அதில் ஆராயப்பட்டது. அந்த விசாரணையின்போது, நீதிமன்றம் மிக முக்கிய தீர்மானம் ஒன்றை அறிவித்திருந்தது: அதாவது அனைத்துலகச் சட்டத்தை மீறிக் குற்றமிழைத்தவர்களுக்கு எதிராக அவர்கள் தொடர்புபட்ட அமைப்பின் சார்பாக அல்லது தனிப்பட்ட ரீதியாக தண்டனை வழங்கப்பட வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டிருந்தது.

இலங்கையில் இடம்பெற்ற 30 ஆண்டுகால உள்நாட்டுப் போரின் போது மேற்கொள்ளப்பட்ட பல்வேறு போர் மீறல்கள் தொடர்பாக 'பொது நல ஆலோசனை மையம்' The Public Interest Advocacy Centre அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. இந்த அறிக்கையில் போர்க் குற்றங்கள் தொடர்பான உண்மையான பதிவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மக்கள் படுகொலைகள், நிராயுதபாணிகளான ஆண்கள், பெண்கள் மற்றும் சிறார்கள் படுகொலை செய்யப்பட்டமை, பரந்தளவிலான சித்திரவதைகள், பாலியல் வன்புணர்வுகள், பாலியல் சித்திரவதைகள், பொதுமக்கள் மீதான எறிகணைத் தாக்குதல்கள், வைத்தியசாலைகள் மீது மேற்கொள்ளப்பட்ட எறிகணைத் தாக்குதல்கள் போன்ற பல்வேறு விடயங்கள் இந்த ஆவணத்தில் சாட்சியமாக்கப்பட்டுள்ளன. இலங்கையில் போர் இடம்பெற்ற காலப்பகுதியில் படுகொலை செய்யப்பட்டு புதைக்கப்பட்ட மனிதப் புதைகுழிகள் தொடர்பான தடயங்களை இலங்கைப் பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் அழிக்க முயற்சித்தமை போன்ற விடயங்களும் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

மே 2009இல் போர் முடிவுக்கு வருவதற்கு முன்னர் போரில் பங்கு கொண்ட இரு தரப்புக்களாலும் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு போர் மீறல்கள் போன்றவை 'பொது நல ஆலோசனை மையத்தால்' வெளியிடப்பட்ட அறிக்கையில் பதிவாக்கப்பட்டுள்ளன. இந்த மையத்தின் ஆய்வின் பிரகாரம், இலங்கையில் இடம்பெற்ற பெரும்பாலான போர் மீறல்கள் இலங்கைப் பாதுகாப்புப் படையினராலேயே மேற்கொள்ளப்பட்டுள்ளன. 2009ஆம் ஆண்டிலிருந்து இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அரசின் ஆதரவுடன் இலங்கையில் காணாமற் போதல்கள், பாலியல் வன்புணர்வுகள் போன்றவை இடம்பெறுகின்றன. இலங்கை அரசானது குற்றவிலக்களிப்புக் கலாசாரத்தைப் பேணிவருவதால் நாட்டில் தொடர்ந்தும் மனித உரிமை மீறல்கள் இடம்பெறுகின்றன. அதாவது குற்றமிழைத்தவர்கள் எவ்வித தண்டனைகளுக்கும் உட்படுத்தப்படாது சுதந்திரமாகத் திரிவதால் மேலும் மேலும் குற்றங்கள் தொடர்கின்றன. இதன்காரணமாக அதிகளவான இலங்கையர்கள் ஆஸ்திரேலியாவில் புகலிடம் கோருகின்றனரா?

போரில் தோற்றவர்களால் வேண்டுமென்றே தமக்கெதிராகப் போர்க் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுவதாக இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கூறுகிறார். இவர்கள் நாட்டில் சமாதானம், நீதி மற்றும் அமைதி எட்டப்படுவதை விரும்பவில்லை எனவும் கடந்த 30 ஆண்டுகளில் இடம்பெற்ற கசப்பான அனுபவங்களை மீள்நினைவூட்ட விரும்பவில்லை எனவும் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். கசப்பான நினைவுகள் விரைவில் எமது மனங்களை விட்டு அழியவேண்டும். எனவே இவை மண்ணில் எழுதப்பட வேண்டும் என மஹிந்த ராஜபக்ஷ கூறுகிறார்.

மஹிந்த ராஜபக்ஷவின் இந்தப் பதிலானது, இலங்கையில் இடம்பெற்ற பல்வேறு மனிதஉரிமை மீறல்களை உறுதிப்படுத்துவதற்கான சாட்சியங்களாக உள்ள அதேவேளையில், ஒரு மேம் போக்கான, தட்டிக்கழிக்கின்ற, ஆபத்தான ஒன்றாகக் காணப்படுகிறது. இந்த விடயத்தில் ஆஸ்திரேலியா தொடர்ந்தும் இலங்கைக்கான தனது ஆதரவைக் காட்டுவதென்பது நிச்சயமாக நியாயமான ஒன்றாக இருக்க முடியாது. மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்ட ஒரு நாட்டை தனிமைப்படுத்துவதை விடுத்து அந்த நாட்டுடன் கலந்துரையாடல்களை மேற் கொள்வது சிறந்தது என ஓர் ஆண்டுக்கு முன்னர் ஆஸ்திரேலிய முன்னாள் வெளியுறவு அமைச்சர் பொப் கார் சுட்டிக்காட்டி யிருந்தார். இதன் பின்னர் ஆஸ்திரேலியாவில் புதிதாகத் தெரிவு செய்யப்பட்ட பிரதமர் ரொனி அபோற் இலங்கையில் இடம்பெற்ற பொது நலவாய உச்சி மாநாட்டில் கலந்து கொண்டிருந்தார்.

இந்த நிலையில் கடினமான சூழலில் கடினமான சில சம்பவங்கள் இடம்பெறுவது சாதாரணமானது. இதுவே இலங்கை விடயத் திலும் அவை இடம்பெற்றுள்ளன என ஆஸ்திரேலிய அரசு அறிவித்திருந்தது.


இலங்கையைத் திருப்திப்படுத்தும் ஆஸ்திரேலியாவின் இந்த நகர்வானது, வெட்கக்கேடான, அவமானகரமான விடயமாகும். இலங்கையில் இடம்பெறும் மனித உரிமை மீறல்கள் மற்றும் சட்ட ஆட்சி குழிதோண்டிப் புதைக்கப்பட்டுள்ள இந்தச் சந்தர்ப்பத்தில் ஆஸ்திரேலியா இவற்றைத் தனது கவனத்தில் எடுக்காது இலங்கையுடன் அரசியல் உறவைப் பேணுவதென்பது ஒரு பிழை யான நகர்வாகும். ராஜபக்ஷ அரசு போர்க் குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக எதனை யும் செய்யவில்லை என பிரித்தானியா, அமெரிக்கா மற்றும் கனடா போன்ற சில நாடுகள் வெளிப்படையாக விமர்சித்து வருகின்றன.

இந்த விடயத்தில் ஆஸ்திரேலியா ஓரங்கட்டப்படும் அபாயம் தென்படுகிறது. இலங்கை அரசு சட்ட ஆட்சியை நிலைநாட்டாது, கண்மூடித் தனமாகச் செயற்பட்டால் அது அனைத்துலக சட்டத்தை மீறுவதாகக் கருதப்படும். இந் நிலையில் நாங்கள் இலங்கையை எதிர்த்து நிற்காவிட்டால் குற்றங்களை மறைப்பதற்கு ஆதரவாக இருந்தோம் என குற்றம் சாட்டப்படுவோம். இலங்கையில் அனைத்துலக விசாரணை ஒன்று இடம்பெறுவதற்கு அபோற் அரசு ஆதரவாக இருக்கும் என நாங்கள் நம்பலாம். ஆனால் கெட்ட வாய்ப்பாக இது இடம்பெறும் என நாம் எதிர் பார்க்கவில்லை என்பது வேதனைக்குரியது.

---

பி.சுபீகா

# பிரச்சினைகளுக்குள் மூழ்காமல் சவாலை எதிர்கொண்டு சாதிப்போம்



உலகில் உள்ள ஒவ்வொரு மனிதனுக்கும் பிரச்சினை இருந்து கொண்டுதான் இருக்கிறது. மேலும், தினசரி புதிய பிரச்சினைகளும் வந்து கொண்டிருக்கின்றன. உடனடியாகத் தீர்க்க வேண்டிய பிரச்சினை. நாளை தீர்க்க வேண்டிய பிரச்சினை. சில நாள் அல்லது சில மாதங்கள் கழித்து தீர்க்க வேண்டிய பிரச்சினை என பிரச்சினைகளின் வகைகளைப் பிரித்து வைத்துக் கொண்டு, அதனை எதிர்கொண்டு தீர்க்க முயல வேண்டும்.

எந்தப் பிரச்சினை வந்தாலும் அதில் மூழ்கிவிட வேண்டாம். ஒவ்வொரு நாளும் பிரச்சினைகளை எண்ணிக் கொண்டிருந்தால் பிரச்சினைகள் தீராது. ஒரு பிரச்சினையைத் தீர்க்கப் பல வழிகளை யோசிக்க வேண்டும். பிரச்சினை குறித்து அலசி ஆராய வேண்டும். எந்த முடிவு என தீர்மானம் செய்ய வேண்டும். அந்த முடிவை அடையும் வழிமுறைகளை யோசிக்க வேண்டும். இறுதியில் எந்த வழி சிறந்தது என ஆய்வு செய்து, அந்த வழியில் செல்ல வேண்டும்.

இதனை விட்டுவிட்டு, இந்தப் பிரச்சினையை எப்படிச் சமாளிப்பது என சும்மா இருந்து கொண்டு சிந்தித்துக் கொண்டிருந்தால், அந்தப் பிரச்சினையில் மூழ்க நேரிடும். பின்னர், அதிலிருந்து விடுபடுவது கடினமாக இருக்கும். குழப்ப நிலையிலிருந்து மீண்டு தெளிவான நிலையில் இருந்து கொண்டு பிரச்சினைகள் குறித்து யோசிக்க வேண்டும். தேவைப்பட்டால் பிறரின் ஆலோசனையைக் கேட்கலாம்.

நமது பழக்கங்களும் மனப் போக்கும் ஒரு புதிய பிரச்சினையைத் தொலை வில் நின்று பார்க்க முடியாமல், ஆராய முடியாமல் தடுக்கும்.

அடுத்து, நமது விருப்பு வெறுப்புகள் எம்மில் ஒரு பிடிவாதத்தை ஏற்படுத்தி விடும். பிரச்சினைகளில் தடை ஏற்படும்போது சற்றுப் பின்வாங்கிப் புதிய உத்திகளையும், புதிய திட்டங்களையும் யோசிக்க வேண்டும்.

ஒரு துறவி தனது சீடர்களுடன் காட்டுவழியே நடந்து சென்று கொண்டிருந்தார். அப்போது ஆறு ஒன்று குறுக்கே ஓடிக் கொண்டிருந்தது. ஆற்றைக் கடக்க வேண்டும் என முடிவு எடுத்தபோது, அங்குவந்த இளம்பெண் ஒருவர், சுவாமி எனக்கு நீச்சல் தெரியாது. என்னை ஆற்றைக் கடந்து அக்கரைக்கு கொண்டு செல்ல தாங்கள் உதவ வேண்டும் எனக் கேட்டாள். அப் பெண் கூறியதைக் கேட்டதும் சீடர்களுக்குக் கோபம் வந்தது.

ஆனால் துறவி, நீ என் தோளில் அமர்ந்து கொள். உன்னை அக்கரைக்குக் கொண்டு சென்று விடுகிறேன் எனப் பெண்ணிடம் கூறி யதையடுத்து அப்பெண், துறவியின் தோளில் அமர்ந்து கொண்டார். துறவி தண்ணீரைக் கடந்து மறு கரையில் அப் பெண்ணை இறக்கிவிட்டுவிட்டு, மீண்டும் நடக்கத்தொடங்கினார். சீடர்கள் கசமுசாவென பேசிக் கொண் டார்கள். சிறிது தூரம் சென்ற பின்னர் ஒரு சீடன், சுவாமி, நீங்கள் அப் பெண்ணைத் தோளில் சுமந்து சென்றமை தவறு என எங்களுக்குப்படுகிறது என்றான். நான் அப் பெண்ணை அப்போதே கீழே இறக்கிவிட்டு விட்டேன். நீ இன்னுமா சுமந்து கொண்டிருக்கிறாய் எனத் துறவி கேட்டராம். அதுபோல, நாம் பிரச்சினைகளைத் தேவையில்லாமல் எமது மனதில் வைத்துக்கொண்டு தடுமாறுகிறோம்.

சளைக்காத மனம் வேண்டும் என ஓர் அறிஞன் கூறுகிறான். பந்து விளையாட்டில், பந்தை எதிர்கொள்பவனே வெற்றி கொள்கிறான். அதுபோல பிரச்சினைகளை எதிர்கொள்பவர்களே வெற்றி பெறுகிறார்கள். வாழ்வின் மிக முக்கியமான பிரச்சினை -நாம் எமது வாழ்வில் அதிர்ஷ்டத்தைத் தோற்றுவிக்க முடியுமா என்பதுதான்.

ஒரு விடயத்தைப் பற்றி முழுமையாகத் தெரிந்துகொண்டு, வழி தெரியாமல் திண்டாடிக் கொண்டிருக்கும்போது, ஒரு சிறு சம்பவம் நேருகிறது. உடனே எமது மனம் எமது பிரச்சினையுடன் அதை இணைத்து முடிவு காண்கிறது. சொல்லப்போனால் எமது மனம் பிரச்சினைக்கு என்ன தீர்வு எனச் சிந்தித்த வண்ணம், எதிர்பார்த்த வண்ணம் உள்ளது. மனம் எதிர்பார்க்கும்போது, அது எதிர்பார்ப்பதே நிகழ்கிறது.

பிரச்சினைகளுக்கு விடை இருக்கும் எனத் திடமாக நம்ப வேண்டும். எமது அன்றாட வாழ்வில் சிறு பிரச்சினைகள், பெரும் பிரச்சினைகள் என எமது வாழ்க்கை, பிரச்சி னைகளால் நிரம்பியுள்ளது. பல சிறு பிரச்சினைகளுக்குச் சரியாக முடிவு எடுக்கும்போது, வாழ்க்கை பல சிறு வெற்றிகளை அடைகிறது. சிறு வெற்றிகளை இணைத்து சாதனை என்ற மாலையை நாம் அணிந்து மகிழ்ச்சியுடன் வாழ்வோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா



**மேடம்:** சிலர் சொல்லும் தேவையற்ற அறிவுரை, மனதில் சங்கடத்தை உருவாக்கும். புதிய முயற்சியை, பின்னொரு அனுகூல நாளில் ஆரம்பிப்பது நல்லது. தொழில், வியாபார நடைமுறை மந்த கதியில் இயங்கும்.



**இடபம்:** செயல்களை மனப்பூர்வமாக ஆரம்பிப்பீர்கள். நீண்டநாள் எதிர்பார்த்த நன்மை எளிதாக வந்து சேரும். தொழில், வியாபாரத்தில் திட்டமிட்ட வளர்ச்சி இலக்கு பூர்த்தியாகும். பெண்களுக்குத் தாய் வீட்டு உதவி பெற அனுகூலம் உண்டு.



**மிதுனம்:** புதிதாக உருவாகின்ற அவசரப்பணி மனதுக்கு கஷ்டத்தைத் தரும். நண்பரின் உதவியால், நிலைமையைச் சரி செய்வீர்கள். தொழில், வியாபாரம் நடைமுறை சீராக கூடுதல் முயற்சி உதவும். பாதுகாப்புக் குறைவான இடங்களுக்குச் செல்ல வேண்டாம்.



**கடகம்:** உங்களின் எண்ணத்தில் உற்சாகமும் செயல்களில் புதிய பரிமளிப்பும் நிறைந்திருக்கும். தொழில், வியாபாரத்தில் அதிகம் பணி புரிவீர்கள். உடன்பிறந்தவர்களுக்கு இயன்றளவில் உதவி புரிவீர்கள். உத்தியோகத்தர்களுக்கு பணி சிறந்து பாராட்டுக் கிடைக்கும்.



**சிங்கம்:** உங்கள் செயல்களில் மதிநுட்பம் நிறைந்திருக்கும். வாழ்வில் கூடுதல் வளம் பெற, புதிய வாய்ப்புத் தேடி வரும். தொழில், வியாபாரத்தில் உற்பத்தி, விற்பனை செழிக்கும். நீண்ட நாள் காணாமல் தேடிய பொருள் கைக்கு வந்து சேரும்.



**கன்னி:** உங்களுக்குக் கூடுதல் வேலைப் பளு ஏற்படலாம். கால விரயம் ஏற்படுத்தும் வகையில் பேசுபவர்களிடம் விலகுவது நல்லது. புதிய யுக்தியால் தொழில், வியாபார வளர்ச்சி நிலை சீராகும். பிறர் பார்வையில் அதிக பணம் செலவு செய்ய வேண்டாம்.



**துலாம்:** பொது விவகாரங்களில் கருத்துச் சொல்வதைத் தவிர்த்திடுங்கள். தொழில், வியாபாரத்தில் மாறுபட்ட சூழ்நிலை உருவாகித் தொந்தரவு தரலாம். நண்பருடன் வாகனத்தில் பயணிக்கும்போது மிதவேகத்தைப் பின்பற்றவும்.



**விருச்சிகம்:** உங்கள் மனதில் பலநாள் இருந்த குழப்பமான சூழ்நிலையைச் சரி செய்வீர்கள். முன்னர் செய்த நற்செயலுக்கான பயன் தேடி வரும். தொழில், வியாபாரம் அபிவிருத்தியாகும்.



**தனுசு:** உங்கள் மனதில் உற்சாகம் நிறைந்திருக்கும். நண்பரிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தொழில், வியாபாரம் செழிக்க கூடுதல் பணி புரிவீர்கள். குடும்பத்தில் மங்கல நிகழ்வு உருவாகும்.



**மகரம்:** உங்கள் செயல் நிறைவேற நலம் விரும்புபவரின் ஆலோசனையைப் நடந்து கொள்வீர்கள். தொழில், வியாபாரத்தில் இருந்த சிரம சூழ்நிலை சரியாகும். உத்தியோகத்தர், பணியாளர்களை ஊக்கப்படுத்தி வேலை வாங்குவது நல்லது.



**கும்பம்:** உங்களிடம் எதிர் மனப்பாங்குடன் பேசுபவரிடம் விலகுவது நல்லது. தாமதமான செயல்களை நிறைவேற்ற வேண்டிய நிர்ப்பந்த சூழ்நிலை ஏற்படலாம். தொழில்,வியாபாரம் சீர் பெற அதிக நேரம் பணிபுரிவீர்கள். எதிர்பார்த்த அளவில் பணவரவு கிடைக்கும்.



**மீனம்:** உங்கள் மனதில் ஒருமுகத் தன்மை அதிகரிக்கும். நண்பர், உறவினர்களிடம் கூடுதல் அன்பு, பாசத்துடன் பேசுவீர்கள். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சிப் பணி இனிதே நிறைவேறும். பணப்பரிவர்த்தனை திருப்திகரமாகும்.

## நாளை

**தை-30 புதன்கிழமை | 12.02.2014**

திதி: திரயோதசி பி.இ.02.18 வரை
நட்சத்திரம்: புநர்பூசம் மு.இ.08.59 வரை
சுபநேரம்: 05.04-06.34 வரை
இராகுகாலம்: 12.34-02.04 வரை

## விவேகானந்தர் சிந்தனையில் இருந்து...




### ஆன்மிக குரு

ஒவ்வொரு ஆன்மாவும் பூரணத்துவத்தை எய்த வேண்டுமென்பது நியதி. ஒவ்வோர் உயிரும் கடைசியில் அந்த நிலையை அடைந்தே தீரும். நாம் இப்பொழுது உள்ள நிலை, முன்னர் இருந்த அல்லது நினைத்த எண்ணங்களின் விளைவேயாகும். எதிர்காலத்தில் நாம் எப்படி இருப்போம் என்பது, இப்போது நாம் செய்யும் காரியங்களையும், எண்ணும் எண்ணங்களையும் பொறுத்தது. ஆனால் இது நாம் வெளியிலிருந்து உதவி பெறுவதைத் தடுக்கவில்லை.

ஆன்மாவின் வளர்ச்சி எப்பொழுதும் புற உதவியினால் துரிதமடைகிறது. ஆகவே இவ்வுலகில் பெரும்பாலானோர் விடயங்களில் புற உதவி இன்றியமையாததாய் இருக்கிறது. துரிதப்படுத்தும் தூண்டுதல்கள் வெளியிலிருந்து வருகின்றன. அவை நம்மிடமுள்ள திறமைகளைத் தூண்டிவிட நம்மிடம் வளர்ச்சி தொடங்குகிறது; ஆன்மிக வாழ்வு பிறக்கிறது. கடைசியில் மனிதன் புனிதமடைகிறான்; பூரணத்துவம் எய்துகிறான்.

வெளியிலிருந்துவரும் இந்தத் துரிதப்படுத்தும் தூண்டுதல், நூல்களிலிருந்து கிடைக்காது. மற்றொரு ஆன்மாவிலிருந்துதான் ஓர் ஆன்மாவுக்கு தூண்டுதல் கிடைக்கும்; மற்ற எதிலிருந்தும் அல்ல. வாழ்க்கை முழுவதும் நாம் நல்ல நூல்களைப் படிக்கலாம்; நாம் மிகவும் மதிநுட்பம் வாய்ந்தவர்களாகத் திகழலாம். ஆனால் கடைசியில் ஆன்மிகத்தில் எவ்வித வளர்ச்சியும் அடையவில்லை என்பதைக் காண்போம். மதிநுட்ப வளர்ச்சி இருந்தால், ஒருவனுக்கு ஆன்மிக வளர்ச்சியும் இருக்கும் என்று ஒரு பொழுதும் சொல்லிவிட முடியாது. அதற்கு மாறாக, மதிநுட்பம் அடைந்ததன் காரணமாக ஆன் மாவின் வளர்ச்சி தடைப்பட்டு விட்டதைத் தினந்தோறும் பார்க்கிறோம்.

# 8 லட்சம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த மனிதனின் கால்தடங்கள்



*ஆதிகால மனிதன் பதித்துச் சென்ற கால் தடங்கள்*

ஆபிரிக்காவில் சுமார் 8 லட்சம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த மனிதனின் கால் தடங்கள் தற்போது கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.

50 இற்கும் மேலான கால் தடங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ள நிலையில், 12 தடங்கள் மட்டுமே முழுமையாக உள்ளன.

**50 இற்கும் மேலான கால் தடங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ள நிலையில், 12 தடங்கள் மட்டுமே முழுமையாக உள்ளன.**

இதனை முதன்முதலாகப் பார்த்தபோது, அவை என்ன என்பதை எங்களால் உறுதிப்படுத்த முடியவில்லை என பிரிட்டிஷ் மியூசியத்தைச் சேர்ந்த நிக் ஆஷ்டன் தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து தடங்களை ஆய்வு செய்த போது தான், பண்டையகால மனிதர்களின் கால் தடங்கள் என்பது தெரிய வந்துள்ளது.

வடக்கு ஐரோப்பா பகுதியில் வாழ்ந்த மனிதர்களை ஆய்வு செய்ய இந்தத் தடங்கள் உதவும் என விஞ்ஞானிகள் கருதுகின்றனர்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 1 | | 2 | | 8 | 4 | 7 | |
| 5 | 2 | | | 4 | | | | |
| 4 | | 8 | 6 | | 1 | 5 | | 3 |
| | | | | | 9 | | 1 | |
| 9 | | 1 | | | | 2 | | 4 |
| | 7 | | 3 | | | | | |
| 7 | | 3 | 1 | | 5 | 6 | | 2 |
| | | | | 6 | | | 4 | 5 |
| | 5 | 2 | 8 | | 4 | | 9 | |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | 2 | 9 | 6 | 5 | 4 | 1 | 7 | 3 |
| 7 | 3 | 5 | 2 | 9 | 1 | 8 | 4 | 6 |
| 4 | 6 | 1 | 8 | 7 | 3 | 2 | 5 | 9 |
| 5 | 9 | 2 | 4 | 3 | 8 | 7 | 6 | 1 |
| 3 | 4 | 6 | 1 | 2 | 7 | 9 | 8 | 5 |
| 1 | 8 | 7 | 9 | 6 | 5 | 3 | 2 | 4 |
| 9 | 5 | 3 | 7 | 4 | 2 | 6 | 1 | 8 |
| 2 | 1 | 4 | 3 | 8 | 6 | 5 | 9 | 7 |
| 6 | 7 | 8 | 5 | 1 | 9 | 4 | 3 | 2 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வைத்திய நிலைய விடுதித் தொகுதியை நகர சபைத் தலைவர் இ.தேவசகாயம்பிள்ளை திறந்து வைக்கிறார்.

## சாவகச்சேரி நகரில் மேலும் ஒரு வைத்திய நிலையம்

தென்மராட்சி, பெப்.11

சாவகச்சேரி நகர்ப் பகுதியில் மேலும் ஒரு தனியார் மருத்துவ நிலையம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. யாழ். போதனா மருத்துவ மனை சத்திர சிகிச்சை நிபுணர் சு.ரவிராஜ் வைத்திய நிலையத் தையும், சாவகச்சேரி நகர சபைத் தலைவர் இ.தேவசகாயம்பிள்ளை விடுதித் தொகுதியையும் திறந்து வைத்தனர்.

இந்த நிகழ்வில் சாவகச்சேரி ஆதார மருத்துவமனை பொறுப் பதிகாரி மருத்துவர் த.குகதாஸன், சாவகச்சேரி இலங்கை வங்கிக் கிளை, ஹற்றன் நஷனல் வங்கிக் கிளை ஆகியவற்றின் முகா மையாளர்கள், ஹற்றன் நஷனல் வங்கியின் பிராந்திய முகா மையாளர் கை.இந்திரவாசன், சாவகச்சேரி நகர கட்டளைத் தளபதி மேஜர் அமரதுங்க உட்பட பலர் கலந்து கொண் டனர். (வ-9)


## விற்பனைக் குழுவைக் கௌரவித்தது பியூரிட்

யுனிலீவர் ஸ்ரீலங்கா நிறுவனத்தின் உள்ளக நீர் தூய்மையாக்கி வர்த்தக நாமமான பியூரிட் (Pureit) ஆனது. புது வருடத்தைக் கோலாகலமான நிகழ்வுடன் ஆரம்பித்து வைத்தது. 200 இற்கும் மேற்பட்ட விற்பனைக் குழுவினர் பங்கு பற்றிய இந் நிகழ்வில் பிரதம விருந் தினராக கலந்து கொண்ட கிரிக்கெட் ஜாம்பவான் அர்ஜுன ரணதுங்க முக்கிய உரையாற்றியிருந்தார்.

கிரிக்கெட் என்ற தொனிப்பொருளின் கீழ் நடைபெற்ற மாபெரும் நிகழ்வினை பியூரிட் வர்த்தகநாமத்தின் வியாபாரப் பிரிவின் தலைவர் ஷானக வதுராகல அவர்கள் 2014 ஆம் ஆண்டின் திட்டங் கள் குறித்த தகவல்களுடன் ஆரம்பித்து வைத்தார். மேலும் இந் நிகழ்வில் யுனிலீவர் ஸ்ரீலங்கா நிறுவனத்தின் தலைவர் சாஸியா சயீட், தனிநபர் பராமரிப்பு மற்றும் நீர் பிரிவின் சந்தைப்படுத்தல் பணிப்பாளர் சித்தார்த் பெனர்ஜி, விற்பனை பணிப்பாளர் சுரித் பெரேரா ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

2013 ஆண்டில் அனைத்து பியூரிட் நீர் நிபுணர்கள் மத்தியிலும் அதிகூடிய விற்பனை நட்சத்திர விருது வழங்கப் பட்டது. 2012 ஆம் ஆண்டு பியூரிட் குழுவுடன் இணைந்து கொண்ட சுஜித் பிரியங்கர அதியுயர் விற்பனையை பதிவு செய்து ஒரு பங்காளராக வியா பாரத்தை அபிவிருத்தி செய்வதற்கு வழங்கிய பங்களிப்பை அடையாளப் படுத்தும்வகை யில்இவ்விருதுஅவருக்குவழங்கப்பட்டது.

'ஒவ்வொரு ஆண்டும் நாம் எமது விற் பனைக் குழுவினரின் கடின உழைப்பு மற்றும் சாதனைகளை அடையாளப் படுத்துகிறோம். இந்த வருடம் நடை பெறும் மாநாட்டில் சந்தையிலுள்ள எமது எதிர்கால திட்டங்களை நிறைவேற் றிக் கொள்வதற்கான வழிமுறைகளை தெளிவுபடுத்தியமை விசேட நிகழ்வாக அமைந்திருந்தது. எமது நீர் வணிகத் தின் முதுகெலும்பாக உள்ள விற்பனைக் குழுவினர் அதியுயர் திறமையை வெளிப் படுத்துவதற்கான வழிகாட்டல்களை வழங்குவதற்கான செயற்பாடுகளை நாம் தொடர்ச்சியாக முன்னெடுத்து வருகின்றோம்' என பியூரிட் வர்த்தக நாம முகாமையாளர் ரொவினி இலுக் கும்புராதெரிவித்தார். உயர்தரத்தில்பியூரிட் சேவையை வழங்கும் நோக்கிலமைந்த புரட்சிகரமான தயாரிப்பான "பியூரிட் அல்ரிமா றிசேர்வ் ஒஸ்மோசிஸ் 418" அறிமுகம் செய்யப்பட்டு நாடாளுமன்ற உறுப்பினர் அர்ஜுன ரணதுங்கவிடம் கையளிக்கப்பட்டது. (த)




## தென் ஆசியாவில் ஜுகி நிறுவனத்தின் 2ஆவது பயிற்சி மையம் கொழும்பில்



தென் ஆசியாவில் ஜுகி நிறுவனம் தனது இரண்டாவது பயிற்சி மையமொன்றை கொழும்பில் ஆரம்பித்து வைத்தது. இது கொழும்புதாஜ்ஹோட் டலில் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

விசேட அதிதியாக கலந்துக் கொண்ட கைத்தொழில் மற் றும் வர்த்தக அமைச்சர் ரிசாத் பதியுதீன் மற்றும் சிங்கப்பூர் ஜுகி நிறுவனத்தின் நிறை வேற்று துணைத் தலைவர் சையிட்டோ நொரியாக்கி ஆகி யோர் பயிற்சி மையத்தினை உத்தியோகபூர்வமாக ஆரம் பித்துவைத்தனர்.

இலங்கையின் ஆடை உற்பத் தித்துறை தொடர்பாக வர்த்தக அமைச்சர் ரிசாத் பதியுதீன் அர சாங்கத்தின் இலக்கு குறித்து விவரமாக எடுத்துரைத்தார்.

ஜுகி நிறுவனம் கடந்த 40 வருடாங் களாக இலங்கைக்கு தனது பங்களிப்பினை வழங்கி வருகின்றது. நாங்கள் இலங் கைக்கு ஜுகி தையல் மெஷின் கள் உட்பட அதற்கான தொழில் நுட்ப பயிற்சி, ஆலோ சனைகள் ஆகியவற்றை வழங்கி வருகின்றோம். ஜுகி மெஷினானது உலகளவு ரீதி யாக மிகவும் பிரசித்தி பெற்று வரும் ஒரு ரகம் ஆகும். 160 இற்கும் அதிகமான நாடுகளில் இந்த ஜுகி மெஷின் பாவனை யில் இந்த ஜுகி தையல் இயந் திரத்துக்கு இந்தியா, பாகிஸ் தான், தாய்லாந்து, வியாட் நாம், இலங்கை ஆகிய தெற் காசிய நாடுகளில் சிறந்த வர வேற்பு இருக்கின்றது.

ஆசியாவிலேயே இலங்கை இந்த ஜுகி தையல் இயந்திர மெஷின் தொடர்பில் உயர் தொழில்நுட்ப அறிவைப் பெற் றதுடன் தனது ஆடை உற் பத்தித் துறைக்கு அதிகமாக பாவித்து வருகின்றது என நிறுவனத்தின் துணைத் தலைவர் தமது உரையில் தெரிவித்தார். (த)



வங்கிக் கிளைக் கட்டடத்தை திறந்து வைக்கும் யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவத்துறை விரிவுரையாளர் கலாநிதி பா. நிமலதாசன்

## இலங்கை வங்கி திருநெல்வேலிக் கிளை நேற்று முதல் புதிய கட்டடத்தில் ஆரம்பம்

இலங்கை வங்கி திருநெல்வேலிக் கிளையின் புதிய கட்டடத் திறப்பு விழா நேற்று திங்கட் கிழமை நடைபெற்றது.

யாழ்.பல்கலைக்கழக முகா மைத்துவத்துறை விரிவுரை யாளர் கலாநிதி பா.நிமலதாசன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு புதிய கட்டடத்தைத் திறந்து வைத்தார்.

இந்த நிகழ்வில் வடபிராந்திய உதவிப் பொது முகாமையாளர் ரி.எம்.ரி.தென்னக்கோன், யாழ்.வணிகர் கழகத் தலைவர் ஆர்.ஜெயசேகரம், பிரபல வர்த்தகர் ஈ.எஸ்.பி.நாகரத் தினம் உட்பட வங்கி முகாமை யாளர்கள் சிறப்பு விருந்தினர் களாகக் கலந்து கொண்டனர்.

முன்னதாக திருநெல்வேலி சந்தியில் உள்ள தனியார் வீட்டில் இயங்கி வந்த வங்கி யில் இருந்து விருந்தினர்கள் மங்கல வாத்திய சகிதம் புதிய கட்டடப் பகுதிக்கு ஊர்வலமாக அழைத்து வரப்பட்டார்கள். தேசியக்கொடி ஏற்றப்பட்டு புதிய கட்டடம் பிரதம விருந்தினர் கலாநிதி நிமலதாசனால் திறந்து வைக்கப்பட்டதை அடுத்து வங்கிக் கணக்குகள் ஆரம் பித்து வைக்கப்பட்டன.

நிகழ்வில் சிறுவர் சேமிப்புக் கணக்குப் போட்டிகளுக்கான பரிசில்களும் பிரதம விருந்தினர் மற்றும் வடபிராந்திய உதவிப் பொது முகாமையாளர் ரி.எம்.ரி. தென்னக்கோன், வங்கி முகாமை யாளர் எஸ்.சந்திரகுமார் ஆகியோ ரால் வழங்கப்பட்டது. (த-7)

## கிராமிய அபிவிருத்தி வங்கியின் கிளை விரைவில் முல்லைத்தீவில்

முல்லைத்தீவு நகரில் கிரா மிய அபிவிருத்தி வங்கியின் கிளையொன்றை அமைப்ப தற்கு சகல நடவடிக்கை களும் எடுக்கப்பட்டுள்ளன எனக் குறித்த வங்கியின் கிளிநொச்சி கிளை முகாமையாளர் ஜீ.சற் குணபாலன் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

'கிராமிய அபிவிருத்தி வங்கி யின் கிளிநொச்சி கிளையில் 500 இற்கும் மேற்பட்ட முல் லைத்தீவு மாவட்டத்தின் கரைத் துறைப்பற்று பிரதேச செயல கத்துக்கு உட்பட்ட முள்ளிய வளை, முல்லைத்தீவு, குமுழ முனை, கொக்கிளாய், கொக் குத்தொடு வாய், கருநாட்டுக் கேணி ஆகிய பகுதிகளை சேர்ந்தபயனாளிகள்உள்ளனர்.

இவர்களின் வங்கி நடவடிக்கை களுக்காக நாம் ஒவ்வொரு மாதமும் இரு தடவைகள் முல்லைத்தீவுக்கு வந்து வங்கி நடவடிக்கைகளை மேற் கொண்டு வருகிறோம். எனி னும் இது மக்களுக்கு மிகவும் சிரமத்தைக் கொடுக்கிறது என்பதால் முல்லைத்தீவு நகரில் கிராமிய அபிவிருத்தி வங்கியின் கிளையொன்றை அமைப்பதன் அவசியத்தை உணர்ந்துள்ளோம்.


எனவே, முதலில் புதுக்குடியி ருப்பில் வாடகைக் கட்டட மொன்றில் கிராமிய அபிவி ருத்தி வங்கி கிளையொன்றை திறந்து வைத்து வங்கி நட வடிக்கைகளை முன்னெ டுக்க வுள்ளதுடன் மிக விரை யில் முல்லைத்தீவு நகரிலும் கிளையொன்றையும் திறக்க வுள்ளோம்.

முல்லைத்தீவு நகரில் கிரா மிய அபிவிருத்தி வங்கியின் கிளையொன்றை அமைப் பதற்கு கரைத்துறைப்பற்று பிர தேச செயலகத்தின் காணிப் பிரிவு காணியை வழங்கி யுள்ளது என்றார். (த)



யாழ்.ஜேர்மன் இன்ஸ்ரிரியூட்டில் DEUTSCH டொச் மொழிப் பயிற்சி பெற்று நடைபெற்ற பரீட்சையில் சித்தி அடைந்து சான்றிதழ்களைப் பெற்றுக்கொண்ட மாணவர்களைக் காணலாம். இவர்களுக்கான மொழிப் பயிற்சியை அந்த மொழியில் தேர்ச்சி பெற்ற ஆசிரியர் திருமதி கஜேந்தினி வழங்கியிருந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## பாதீனிய அழிப்பு

அளவெட்டிப் பகுதியில் பரவி வரும் பாதீனியச் செடிகளை அழிப்பதில் அளவெட்டி வடக்கு லியோ கழகமும், மானிப்பாய் வட்ட லயன்ஸ் கழகமும் இணைந்து நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தொடங்கியுள்ளன. இதில் முதல் கட்டமாக அளவெட்டி பெருமாக் கடவைப் பகுதியில் பரவி உள்ள பாதீனியச் செடிகளின் அழிப்பு நடவடிக்கையில் சனிக்கிழமை ஈடுபட்டனர். (வ-86)

## கும்பாபிஷேகம்

சரவணை நாவலடி ஞான வைரவர் ஆலய மகா கும்பாபிஷேகம் நாளை புதன்கிழமை காலை 9.10 மணிக்கு நடைபெறவுள்ளது.

முன்னதாக இன்று செவ்வாய்க்கிழமை காலை 8 மணி முதல் மாலை 3 மணி வரை அடியவர்கள் எண்ணெய்க் காப்புச் சாத்தும் நிகழ்வு இடம் பெறும். கும்பாபிஷேகக் கிரியைகளை சிவஸ்ரீ கா.புவனேஸ்வரக் குருக்கள் நடத்தி வைப்பார். (ந)

◆◆◆

நவாலி களையோடை கண்ணகை அம்மன் ஆலய மகா கும்பாபிஷேகம் நாளை புதன் கிழமை காலை 9 மணிக்கு ஆரம்பமாகும். இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை அம்மனுக்கு எண்ணெய்க் காப்பு சாத்தும் நிகழ்வு இடம்பெறும். தொடர்ந்து கும்பாபிஷேகக் கிரியைகள் எதிர் வரும் 26 ஆம் திகதி புதன்கிழமை வரை நடைபெறவுள்ளன. (ந-50)

◆◆◆

அளவெட்டி தர்மாவளவு ஸ்ரீ ஞான வைரவர் ஆலய மகா கும்பாபிஷேகம் எதிர்வரும் 12 ஆம் திகதி புதன்கிழமை காலை 7 மணிக்கு விசேட பூசைகள், வழிபாடுகளுடன் ஆரம்பமாகி முற்பகல் 9.35 மணிக்கு கும்பாபிஷேகம் நடைபெறவுள்ளது. முன்னதாக இன்று செவ்வாய்க் கிழமை காலை 8 மணி முதல் பிற்பகல் 5 மணி வரை எண் ணெய்க் காப்புச் சாத்தும் நிகழ்வு இடம் பெறவுள்ளது. (ந-86)

### சிறுத்தீவு லூத்து அன்னை உற்சவம்; குருநகரில் இருந்து படகுச் சேவை

சிறுத்தீவு லூர்து அன்னையின் திருவிழாத் திருப்பலி எதிர்வரும் 16 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு நடைபெறும். இத்திருப்பலியில் பங்குபற்றவுள்ள பக்தர்களுக்கான படகுச் சேவைகள் குருநகர் இறங்குதுறையில் இருந்து அன்று நடைபெறும் என குருநகர் புனித யாகப்பர் ஆலயத்தின் பங்குத் தந்தை வண.பிதா ஆர்.நேசராஜா அடிகளார் அறிவித்துள்ளார். (ஓ-51)

## கலாசார பிரச்சினையை அவதானமாகக் கையாளவும்

*யாழ்.பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் தெரிவிப்பு*

யாழ்ப்பாணம், பெப்.11

சிங்கள கலாசாரத்தைவிட தமிழ்க் கலாசாரம் சிறந்தது. எனவே இங்கு கலாசாரம் தொடர்பான பிரச்சினைகள் ஏற்படும்போது அது தொடர்பில் மிக அவதானமாகச் செயற்பட வேண்டும் என்று தெரிவித்தார் யாழ்.பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பி.விமலசேன.

யாழ்.பொலிஸ் நிலையத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இடம் பெற்ற வாராந்த செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

யாழ்.நகரில் பல மசாஜ் நிலையங்கள் உள்ளன. அவற்றில் ஒருசில வற்றில் சமூகச் சீர்கேடுகள் இடம் பெறுவதாகத் தெரிவிக்கப்பட்டது தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சமூகச் சீர்கேடு தொடர்பில் உரிய புலன் விசாரணை மேற்கொண்டே நடவடிக்கை எடுத்தல் வேண்டும். மசாஜ் நிலையங்களில் உள்ளவர்கள் மதிக்கத்தக்கவர்கள். இந்த நிலையில் அதற்குப் பாதிப்பு ஏற்படாதவண்ணம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் என்றும் அவர் கூறி னார். (வ-4)

## ஓய்வூதியருக்கான திருத்தல யாத்திரை

யாழ்ப்பாணம், செப்.11

ஓய்வூதியர்களுக்கான திருத்தல யாத்திரைக்காக பகிரங்க சேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதிய யாழ்ப்பாண பிரதேச சங்கம் ஏற்பாடு செய்து வருவதாக அதன் தலைவர் வி.சிறிசக்திவேல் தெரிவித்தார்.

யாழ்ப்பாணப் பிரதேச ஓய்வூதியர் நம்பிக்கை நிதிய அங்கத்தவர்கள் இதில் பங்குகொள்ளலாம்.

திருக்கேதீஸ்வரம், மடு ஆகிய திருத்தலங்கள் இந்த யாத்திரையில் உள்ளடக்கப்படுகின்றன. சிவராத்திரி தினமான எதிர்வரும் 27 ஆம் திகதி காலை 6 மணிக்கு யாழ். பிரதேச செயலக முன்றலில் இருந்து பிரத்தியேக பஸ் சேவை மூலம் இந்த யாத்திரை ஆரம்பமாகும். அங்கத்தவர்கள் தமது குடும்ப உறுப்பினர் ஒருவரையும் இணைத்துக் கொள்ளலாம். பயணச் சீட்டுக் கட்டணமாக ஒருவருக்கு 850 ரூபா அறவிடப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பயணத்துக்கான சீட்டை நாளை மறுதினம் வியாழக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் நண்பகல் 12 மணி வரை யாழ்.பிரதேச செயலகத்தில் பெற்றுக் கொள்ளலாம் என்று நிதியத்தின் செயலாளர் சு.கணேசலிங்கம் அறிவித்துள்ளார். (ஓ-51)

## நிர்வாகிகள் தெரிவு

யாழ்ப்பாணம், செப்.11

தொண்டமானாறு வெளிக்கள நிலையத்தின் 2014 ஆம் ஆண்டுக்கான நிர்வாகசபை அண்மையில் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இதன் தலைவராக திருமதி எஸ்.குகநாதன், இணைச் செயலாளர்களாக எஸ்.சுகுமாரன், மற்றும் ஏ.லோகநாதன் ஆகியோரும் பொருளாளராக வி.உலக நாதன், உபதலைவர்களாக என்.அனந் தராஜ் மற்றும் திருமதி.எம்.இராஜராம் உப பொருளாளராக ரி.நந்தகுமாரன், பத்திராதிபராக எஸ்.சத்தியநாராயணன் ஆகியோரும் நிர்வாகசபை உறுப்பினர்களாக கே.சின்னத்தம்பி, ஆர்.குகா னந்தன், பி.நாகரட்ணம் ரி.சண்முகலிங்கம், எம்.ரவீந்திரன், வி.கே.ரவிகரன், ரி.பால கிருஸ்ணன், கே.அசோகன் ஆகியோரும் கற்கை நெறிப்பணிப்பாளராக எஸ்.வி.மகேந்திரன் ஆலோசகர்களாக கே.சித்திரவேல், சுந்தரம் ..., வி.கணேசலிங்கம் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (ந-...)

## கண்ணீர் அஞ்சலி

யாழ்ப்பாண மாவட்ட திட்டமிடல் செயலகத்தில் அபிவிருத்தி உதவியாளராக (NGOo) கடமையாற்றும் நவரத்தினம் தயாபரன் அவர்களின் அன்புத் தந்தை

**செம்பொற்சோதி நவரத்தினம்**

அவர்கள் 09.02.2014 அன்று அமரத்துவம் அடைந்த செய்தி கேட்டு ஆழ்ந்த கவலையடைவதுடன், அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். (44548) (2.6.3)

மாவட்ட திட்டமிடல் செயலக உத்தியோகத்தர்கள், மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்.

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையின் பழைய மாணவி அமுதாவின் அன்புத் தந்தையும், உரும்பிராய் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்க கனடா கிளையின் தலைவராகிய த. வரதராஜன் அவர்களின் அன்பு மாமனும், உரும்பிராய் பாடசாலைகளின் பழைய மாணவர்களாகிய விஜிதா, உதயனன், கமலா ஆகியோரின் அன்புத் தந்தையுமாகிய

**செல்லையா சோமசுந்தரம்**

(உரும்பிராய்/கனடா)

அவர்களின் மறைவையிட்டு எமது கல்லூரிச் சமூகம் ஆழ்ந்த துயரடைந்துள்ளது.

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினரின் துயரத்தில் பங்குகொள்வதுடன் அவரின் ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கல்லூரிச் சமூகம்,
உரும்பிராய் இந்துக்கல்லூரி.

(சி/12002) (10.6.3)

## இலட்சார்ச்சனை நாளை

தென்மராட்சி,பெப் .11

சாவகச்சேரி சந்திரசேகர வாரிவனநாதசிவன் ஆலய மாசிமக இலட்சார்ச்சனை நாளை புதன்கிழமை காலை 7.30 மணிக்கு ஆரம்பமாகி எதிர்வரும் 14 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பி.ப. 3 மணிக்கு நிறைவு பெறும்.

மாசிமக தினமான 15 ஆம்திகதி சனிக்கிழமை காலை 8 மணிக்கு அகண்டநாம பஜனை, விசேட மகா யாகம், அபிஷேகம் பூஜை என்பன இடம்பெறும்.

இலட்சார்ச்சனைக் கிரியைகள் சிவப்பிரம்மஸ்ரீ தியாக உமாசுதன் குருக்கள் தலைமையில் நடைபெறும். (ந-9)

## ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 06.04.1950 — மறைவு 06.02.2009

திதி: பூர்வபக்க துவாதசி

ஆண்டுகள் ஐந்தென்ன
ஐம்பதே ஆனாலும்
மாறாது உம் நினைவு
எம்மனங்களிலிருந்து
உங்களின் ஆத்மா
சாந்தியடையப்
பிரார்த்திக்கின்றோம்.

தே. அரியதேவி (மனைவி)
குடும்பத்தினர்
அல்லிப்பளை, பளை.

தற்காலிக முகவரி:
மீசாலை கிழக்கு, மீசாலை.

**தியாகராசா தேவகுருநாதன்**

(44217)(3.6.4)

## ஓராண்டு நினைவஞ்சலி



அமரர்

**தர்மலிங்கம் தங்கராசா**

(பெரியப்பா, திருநெல்வேலி சந்தை)

மண்ணில் 27.07.1952

விண்ணில் 23.01.2013

அன்பின் பிறப்பிடமே
பாசத்தின் ஒளி விளக்கே
சாகாமல் இருப்பதென்பது சாத்தியமில்லை தான்
ஆனால் நீ வாழாமல் பாதியில் போனதேன்....
ஆறுதல் சொல்ல ஆண்டவனே வந்தாலும்
உங்கள் அன்பை இனி யார் தருவார்.
ஏற்றமிகு வாழ்வு தந்தவரே
வையத்துள் உங்கள் வாழ்வு ஓய்ந்து இன்று
வருடமொன்று ஆனதுவோ....!
வணங்குகிறோம் நற்கதிக்காய்...!

இல. 91, பாற்பண்ணை வீதி,
திருநெல்வேலி.

(44327)(45.3.6)

குடும்பத்தினர்.

## 7ஆம் ஆண்டு நினைவஞ்சலி



செல்வன்

**பத்மகாந்தன் சஞ்ஜீத்**

(மாணவன்
யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி.
S.S.M பொறியியல் கல்லூரி.
சேலம். இந்தியா)

அன்னை மடியில்
19*03*1985

ஆண்டவன் அடியில்
11*02*2007

காலம் கடிதெனக் கரையவெம்
கனவுகள் பலவும் நனவாக
நிழலானவுன்
நினைவுகள் மட்டும்
நிரந்தரமாயெங் கனத்த
இதயமதில்...
விழியோர நீருள்
விதியெண்ணிக் கழன்றோட
வித்தகனே நீ விண்ணிலும்
சிறந்திருப்பாய்.

(33354) (7.6.3)

புனித வாசம்,
மீசாலை கிழக்கு,
மீசாலை.

குடும்பத்தினர்.
5-4/3, 42ஆவது லேன்,
கொழும்பு-06.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிற்போடப்பட்டுள்ளது

வட்டுக்கோட்டை, பெப்.11
இன்று செவ்வாய்க்கிழமை நடைபெறவிருந்த வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் ஆரம்பப் பிரிவு விளையாட்டுப் போட்டி தவிர்க்க முடியாத காரணத்தால் நாளை புதன்கிழமைக்கு பிற்போடப்பட்டுள்ளது என்று அதிபர் அறிவித்துள்ளார். (ஒ-86)


**உடனடியாகத் தேவை**

தரமான ஒடியல், புளுக்கொடியல் தேவை. தொகையாகவோ, சிறிய தொகையாகவோ உள்ளவர்கள் தொடர்புகொள்ளவும்.

அண்ணா பாம் (C/12008)(10.6.3) துரை வீதி, இணுவில்.

**ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி**

தோற்றம் 20 - 06 - 1945 மறைவு 06 - 02 - 2009



அமரர் **சண்முகராசா இலங்கைநாதன்**

(ஸ்தாபகர் அன்னராஜா ஸ்ரோர்ஸ்)

திதி : துவாதசி (பூர்வபக்க) 11.02.2014

ஆண்டுகள் ஐந்து ஆயிடினும்
உங்கள் அன்பு முகம் மறக்கவில்லை
ஈன்று உம் நினைவாய் இருந்தே
நாம் தவிக்கின்றோம் - தூண்டாமணி
விளக்காய் ஒளிவீசி பிரகாசித்தீர் - இன்று
வேண்டி துதித்தே நாம் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓடை ஒழுங்கை,
வண்ணார்பண்ணை. குடும்பத்தினர்.

**கரம்-T.T போட்டிகள்(ஓப்பின்)**

மணி+ஜெயா சோதரர்களின் 19 ஆவது ஆண்டு நினைவாக எதிர்வரும் 15 ஆம், 16 ஆம் திகதிகளில் யாழ்.மத்திய கல்லூரியில் மேற்படி போட்டிகள் நடைபெறும். **விண்ணப்ப முடிவு திகதி-14.02.2014** அன்றே மாலை 4 மணிக்கு அணி ஒழுங்குத் தெரிவு நடைபெறும்.
அறிவிப்பாளர் தெரிவுப் போட்டியில் பங்குபற்ற விரும்பும் ஆண், பெண் இருபாலாரும் 18.02.2014 அன்று மு.ப.10.30 மணிக்கு யாழ். மத்திய கல்லூரிக்கு சமுகம் தரவும்.
தொடர்புகள்: V.S.சற்குணன், 20, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, கண்டுக்குழி, யாழ்ப்பாணம். T.P:021 222 7535
(44545)(3.6.4)

**கரைதுறைப்பற்று ப.நோ.கூ.சங்க கிளைக்குழு தெரிவிற்காக வாக்காளர் பட்டியலை முடிவுறுத்தி காட்சிப்படுத்தல்**

கிளைக்குழு தெரிவு விரைவில் நடைபெற இருப்பதனால் சங்கத்தின் 18 கிளைகளுக்குரிய கிளைக்குழுக்களை தெரிவு செய்வதற்கு வாக்களிக்கத் தகுதியுள்ள வாக்காளர்களின் பட்டியல் குறித்த கிளைகளில் 10.02.2014 தொடக்கம் 20.02.2014 வரை காட்சிப்படுத்தப்படுகின்றது. குறித்த வாக்காளர் பட்டியலில் தமது பெயர்கள் உள்ளடக்கப்படாதிருப்பவர்கள் மற்றும் முதலெழுத்துக்கள், பெயர்கள் என்பவற்றில் திருத்தம் செய்ய வேண்டிய வாக்காளர்கள் 20.02.2014 அன்று கடமை நேரத்திற்கு பிந்தாமல் சங்க செயலாளருடன் எழுத்து மூலமாகத் தொடர்புகொண்டு தமது பெயர்களை சேர்த்துக்கொள்ளல் மற்றும் திருத்தங்கள் தொடர்பில் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

பெயர்களை சேர்த்துக்கொள்ளல் மற்றும் திருத்தங்கள் தொடர்பில் தமது கோரிக்கைகளை முன்வைப்பதற்கு இதுவே இறுதிச் சந்தர்ப்பமாகும். 20.02.2014 அன்று கடமை நேரத்திற்கு பின்னர் கிடைக்கப்பெறும் கோரிக்கைகள், ஆட்சேபனைகள் என்பன ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

07.02.2014ஆம் திகதிய நெறியாளர் குழுக் கூட்டத் தீர்மானத் திற்கமைய.

செயலாளர்

*திகதி : 10.02.2014* கரைதுறைப்பற்று ப.நோ.கூ.சங்கம்

# மெய்வன்மைப் போட்டிகள்

தென்மராட்சி,பெப்.11
கைதடி முத்துக்குமாரசாமி மகாவித்தியாலய இல்ல மெய் வன்மைப்போட்டிகள் இன்று செவ்வாய்க்கிழமை பி.ப. 2 மணிக்கு வித்தியாலய மைதானத்தில் நடைபெறும்.
அதிபர் சி.பவளகுமாரன் தலை மையில் இடம்பெறும் போட்டிகளுக்கு முதன்மை விருந்தின ராக தென்மராட்சி கல்விவலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் வே.பாலசுப் பிரமணியம் கலந்துகொள்வார். சிறப்பு விருந்தினராக ஹற்றன் நஷனல் வங்கியின் கைதடி கிளை முகாமையாளர் ம.கோபிகிருஷ்ணா கலந்து கொள்வார். (ந-9-23)

◆ ◆ ◆

சுழிபுரம் விக்ரோறியாக் கல் லூரி இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று செவ் வாய்க் கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு கல்லூரிமைதானத்தில் அதிபர் வ.ஸ்ரீகாந் தன் தலைமையில் நடைபெறவுள்ளது.
நிகழ்வில் பிரதம விருந்தினராக வட மாகாண கல்வித் திணைக் கள பிரதிக் கல்விப் பணிப்பாளர் கே.சத்தியபாலன், சிறப்பு விருந்தினராக 'விக்ரோறியன்', ச.யோக லிங்கம், கனடா பழைய மாண வர் சங்க நிர்வாக உறுப்பினர் திருமதி மகாராணி யோகலிங்கம் ஆகியோர் கலந்து கொள் வர். (ந-28)

◆ ◆ ◆

மானிப்பாய் விவேகானந்த வித்தியா சாலையின் இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று செவ்வாய்க்கிழமை 1.30 மணிக்கு அதிபர் திருமதி க.சரவணபவன் தலைமையில் பாடசாலை விளை யாட்டு மைதானத்தில் நடைபெறும்.
பிரதமவிருந்தினராக வலிகாமம்வலயக் கல்வி, நிர்வாக பிரதிக் கல்விப் பணிப் பாளர் பொ.ரவிச்சந்திரன், சிறப்பு விருந் தினராக வலிகாமம் வலய சேவைக் கால விளையாட்டுத்துறை ஆசிரியர் திருமதி கோசலை குலபால சிங் கம் கலந்து கொள்வார். (ந-100)

◆ ◆ ◆

மருதங்கேணி இந்து தமிழ்க் கலவன் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை விளை யாட்டு மைதானத்தில் பாட சாலை அதி பர் செ.ஸ்ரீ இராமச் சந்திரன் தலைமை யில் நடை பெறவுள்ளது.
நிகழ்வில் பிரதம விருந்தினராக வடம ராட்சி கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் (நிர்வாகம்) யோ.ரவீந் திரன் கலந்து கொள்ளவுள்ளார். இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினராக மரு தங் கேணி, கரவெட்டி கோட்டக் கல்விப் பணிப் பாளர் க.பொன் னையா கலந்துகொள்வார்.

◆ ◆ ◆

மன்னார் அல்-அஸ்ஹர் ம.வி. தேசிய பாடசாலையின் இல்ல மெய் வன்மைப் போட்டிகளின் இறுதி நிகழ்வுகள் இன்று செவ்வாய்க் கிழமை பிற்பகல் 2 மணிக்கு பாடசாலையின் அதிபர் எம்.வை. மாஹிர் தலைமையில் இடம் பெறவுள் ளன.
நிகழ்வில் பிரதம விருந்தினராக அமைச் சர் றிஸாத் பதியுதீன், சிறப்பு விருந்தின ராக வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஹுனைஸ் பாரூக் ஆகி யோர் கலந்து கொள்வர். (ந-56)

◆ ◆ ◆

பளை மத்திய கல்லூரியின் இல்ல மெய் வன்மைப்போட்டி இன்று செவ்வாய்க் கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.
அதிபர் சி.பாலகிருஷ்ணன் தலை மையில் நடைபெறும் நிகழ்வில் பிரதம விருந் தினராக கிளி.புனித அந்தோனி யார் றோ.க.த.க. பாடசாலை அதிபர் கு.குணபாலசிங்கம், சிறப்பு விருந்தின ராக பழைய மாண வன் க.சிவபால ராஜா, கிளிநொச்சி தலை மைக் காரி யாலய பொலிஸ் பரிசோதகர் கே.ஏ.டீ.சி. குமார வீரசிங்க ஆகியோர் கலந்து கொள்வர். (ந)

◆ ◆ ◆

அனலைதீவு சதாசிவ மகாவித் தியாலய இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை புதன் கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு வித்தியாலய மைதானத்தில் அதிபர் என். இராதா கிருஷ்ணன் தலைமையில் நடைபெறும்.
நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப் பாணம் தேசிய கல்வி யியற் கல்லூரி ஓய்வுநிலை பீடாதிபதி எஸ்.கே.யோகநா தன், சிறப்பு விருந்தினராக ஊர்காவற்று றைக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் நி.சோமசேகரம் ஆகியோர் கலந்து கொள்வர். (ந)

◆ ◆ ◆

அளவெட்டி அருணோதயக் கல்லூரி யின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டிகள் நாளை புதன்கிழமை பிற் பகல் 1.30 மணிக்கு கல்லூரி மைதானத் தில் அதிபர் நா.கேதீஸ்வரன் தலைமை யில் நடை பெறவுள்ளது.
இந்த நிகழ்வில் பிரதம விருந் தினராக வடமாகாண முதல மைச்சர் செயலக பிரதி பிரதம செயலாளர் அ.மனோரஞ் சனும், சிறப்பு விருந்தினராக தெல் லிப்பழை கல்விக் கோட்ட கல்விப் பணிப்பாளர் சு.சண்முககுலகுமார னும், கௌரவ விருந்தினராக கொழும்பு பழைய மாணவர் சங்க உறுப்பினர் செ.செல்வநேசன், தெல்லிப்பழை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எஸ். கஸ்தூரி ஆராய்ச்சியும் கலந்து கொள்ள வுள்ளார்கள். (ந-86)

◆ ◆ ◆

கெற்பேலி அ.த.க.பாடசாலை இல்ல மெய்வன்மைப் போட்டி கள், நாளை புதன்கிழமை பிற் பகல் 2 மணிக்கு பாட சாலை மைதானத்தில் இடம்பெறும்.
பாடசாலை அதிபர் பொ.நடேசலிங்கம் தலைமையில் நடைபெறும் போட்டி களுக்கு முதன்மை விருந்தினராக ஓய்வுநிலை ஆரம்பப் பிரிவு உதவிக் கல்விப் பணிப்பாளர் த.ஸ்ரீஸ்கந்தராஜா வும், சிறப்பு விருந்தினர்களாக உடற் கல்வி ஆசிரிய ஆலோச கர் ந.ஸ்ரீகாந்தா ஸ்ரெப் ஆங்கிலக் கல்வி நிலைய பயிற்சி நிர்வாகி கு.குண.ருபன் ஆகியோரும் கலந்து கொள்வர். (ந-9)

◆ ◆ ◆

ஆழியவளை சீ.சீ.தமிழ்க் கலவன் பாடசாலையின் வரு டாந்த இல்ல மெய் வன்மைப் போட்டி நாளை புதன் கிழமை சக்திவேல் விளையாட்டுக் கழக மைதா னத்தில் நடைபெற வுள்ளது.
அதிபர் க.பாஸ்கரன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் பிரதம விருந் தினராக முன் னாள் உதவி அரச அதிபர் புத்திசிகாமணி சிறப்பு விருந்தின ராக மருதங்கேணி கோட்டக் கல்வி அலுவலர் க.பொன்னையா ஆகியோர் கலந்து கொள்வர்.

◆ ◆ ◆

ஆனைப்பந்தி மெதடிஸ்த மிஷன் வித்தியாலய இல்ல மெய்வன் மைப் போட்டி நாளை புதன் கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை அதிபர் யோ.ஜெக ஆனந்தம் தலைமையில் நடை பெறும்.
நிகழ்வில் பிரதம விருந்தினராக இ.ச. பே.நாகரெத்தினம், சிறப்பு விருந்தின ராக கன்னாதிட்டி மக்கள் வங்கி முகா மையாளர் க.ரமேஸ்நேசன் ஆகியோர் கலந்து கொள்வர். (ந)

# நாட்டின் அபிவிருத்திச் செயற்பாட்டில் வினைத்திறன்மிக்க பட்டதாரிகள்

## *அமைச்சர் ஜோன் செனவிரட்ன தகவல்*

யாழ்ப்பாணம், பெப்.11
நாட்டின் அபிவிருத்திக்கு பட்ட தாரிகள் ஊடாக வினைத் திறனான சேவை வழங்கப் படுகின்றது.
கடந்த ஐந்து ஆண்டுகளில் மட்டும் 67,867 பட்டதாரிகள் மூன்றாண்டு, நான்காண்டு கற்கை நெறிகளைப் பூர்த்தி செய்து வெளியேறியுள்ளனர்.
இவ்வாறு வெளியேறியவர் களில் வினைத்திறனான பட்டதாரிகள் 50 ஆயிரத்து 820 பேர் நாடு தழுவிய ரீதியில் அரச திணைக்களங் கள், அமைச்சுக்களில் நியமிக்கப்பட்டு வேலையில்லா பிரச்சினைக்குத் தீர்வு காணப் பட்டுள்ளது என்று அரச நிர்வாக உள் நாட்டலுவல்கள் அமைச்சர் ஜோன் செனவி ரட்ன வெளியிட்டுள்ள அறிக் கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
இவ்வாறு நிரந்தர நியமனத்தில் உள் வாங்கப்பட்டுள்ள பட்டதாரிகளுக்கு பொருத்தமான பதவிப் பெயருடன் அடிப்படைச் சம்பளமாக 15, 215 ரூபா வழங்கப்பட்டு வருகின் றது. 2007 ஆம் ஆண்டு 11, 558 பேரும், 2008ஆம் ஆண்டு 12,926 பேரும், 2009 ஆம் ஆண்டு 13, 655 பேரும், 2010 ஆம் ஆண்டில் 13, 042 பேரும், 2011ஆம் ஆண்டில் 16, 686 பேருமாக மொத்தம் 67, 867 பேர் கடந்த 5 ஆண்டுகளில் பட்டதாரி களாக வெளியேறியுள்ளனர்.
ஏனைய முகாமைத்துவ உதவியாளர் சேவைகளை விட பட்டதாரிகளின் முன்னுரிமை பிரகாரமான சேவைகளைப் பெறுவதன் ஊடாக வேலைகள் துரித முன்னேற்ற மடைகின்றன.
இதேபோல 1999இல் இருந்த அரசின் மூலம் 30 ஆயிரம் பட்டதாரிகளும், 2005 இல் 50 ஆயிரம் பட்டதாரிகளும் உள்வாங்கப்பட்டு நிரந்தர நியமனங் கள் வழங்கப் பட்டன.
இவ்வாறான பட்டதாரிகள் அடிப்படைச் சம்பளமாக 15,215 உட்பட மாதாந்தம் 25 ஆயிரத்து 965 ரூபாவை மொத்த மாகப் பெறுகின்றனர்.
நாட்டின் அபிவிருத்திக்கு பட் டதாரிகள் ஊடாக முழு வினைத்திறனான சேவை இடம்பெறுகின்றது என அந்த அறிக் கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது. (ந-50)

**காணி விற்பனைக்கு**

நாவலர் றோட், கைலாசபிள்ளையார் கோயிலுக்கு அண்மையில் இரண்டு பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு:077 576 4052
மாலை 6 மணிக்குப் பின்பு தொடர்பு கொள்ளவும்.
(44547)(3.6.4)

**மணமகன் தேவை**

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1981 இல் பிறந்த 7 இல் சூரியன் செவ்வாய் தி.பா-57, 5 அடி 5" உயரமுடைய மணமகளுக்கு தகுந்த மணமகன் தேவை. (44549)(3.6.4)
தொடர்பு:077 622 8581

**பருத்தித்துறை அருள்மிகு கோட்டுவாசல் ஸ்ரீ சண்டிகா பரமேஸ்வரி தேவஸ்தானம் மஹாகும்பாபிஷேகம்-12.02.2014**

**நாளை(12.02.2014) புதன்கிழமை காலை 6.34 மணிமுதல் 7.30 மணி** வரையிலான சுபமுகூர்த்தத்தில் நடைபெறத் திருவருள் கூடியுள்ளது.
**எண்ணெய்க் காப்பு இன்று (11.02.2014) செவ்வாய்க் கிழமை காலை 8.00 மணிமுதல் மாலை 5.00 மணி வரை.**
பக்த அடியார்கள் அனைவரும் வந்து அம்பாளின் அருளைப் பெற்றுஏகுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தர்மகர்த்தா
ஏ.சந்திரமூர்த்தி. (சி/12005)(3.6.4)

நிர்வாகிகள்
வி.இராமச்சந்திரன், சி.தீபாணந்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருமலை மாவட்டத்தில் கல்வியியற் கல்லூரி

திருகோணமலை,பெப்.11

திருகோணமலையில் தேசிய கல்வியியற்கல்லூரி அமைக்கப்படவுள்ளது.

இதற்கான நடவடிக்கையை கல்வி அமைச்சர் பந்துல குணவர்தன எடுத்துள்ளார்.

திருகோணமலை மாவட்டத்தில் கணிதம், ஆங்கிலம், விஞ் ஞானம் மற்றும் தகவல் தொழில் நுட்பம் ஆகிய பாடங்களுக்கான ஆசிரியர்கள் பற்றாக்குறை மிக நீண்ட காலமாக நிலவி வருகின்றது.

இந்தக் குறைப்பாட்டைப் போக்குவதற்கு திருகோணமலை மாவட்டத்தில் தேசிய கல்வியியற் கல்லூரி ஒன்று அமைக்கப்படவேண்டும் என்று கிழக்கு முதலமைச்சர் நஜீப் ஏ. மஜீத், கல்வி அமைச்சர் பந்துல குணவர்தனவிடம் வேண்டுகோள் விடுத்திருந்தார்.

அதனையடுத்து கல்வி அமைச்சர் இதற்கான நடவடிக்கைகளை எடுத்துள்ளார்.

முதல்வரின் வேண்டுதலையடுத்து தேசிய கல்வியியற் கல்லூரி அமைக்கப்பட வேண்டிய இடத்தையும் கல்வி அமைச்சர் அவருடன் சென்று பார்வையிட்டார். (ச)

# பிரதமர் பதவியில் மாற்றம் இல்லை

### அரச வட்டாரங்கள் தகவல்

கொழும்பு,பெப்.11

அடுத்த ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படும்வரை பிரதமர் பதவியில் எந்தவொரு மாற்றத்தையும் மேற்கொள்ளாதிருக்க ஜனாதிபதி தீர்மானித்துள்ளார்.

**ஜனாதிபதித் தேர்தல் இடம்பெறும் வரை பிரதமர் பதவியில் எந்த வொரு மாற்றமும் இடம்பெறுவதற்குச் சாத்தியம் இல்லை.**

பிரதமர் பதவியிலிருந்து பிரதமர் தி.மு.ஜயரத்ன நீக்கப்பட வேண்டும் என்று பல அமைப்புக்கள் கருத்துக்களை வெளிப்படுத்தியுள்ள போதிலும், பிரதமர் பதவியில் மீளாய்வொன்று மேற்கொள்ளப்படக் கூடாது என்றும் கருத்துக்கள் வெளியிடப்பட்டுள்ளன.

2015 ஆம் ஆண்டில் ஜனாதிபதித் தேர்தல் இடம்பெறும் வரை பிரதமர் பதவியில் எந்தவொரு மாற்றமும் இடம்பெறுவதற்குச் சாத்தியம் இல்லை என்று அரசின் நம்பிக்கையான தகவல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (ச-22)

## பெண்களுக்கு விழிப்புணர்வு

மூதூர் பிரதேச இந்துகுருமார் சங்கத்தின் ஏற்பாட்டில் கரித்தாஸ் இலங்கை செடெக் மகளிர் அபிவிருத்தி பிரிவின் அனுசரணையுடன் மூதூர் தெற்கு பாரதிபுரம் பாரதி முன்பள்ளி பாடசாலையில் பெண்களுக்கான விழிப்புணர்வுக் கருத்தரங்கு மூதூர் பிரதேச இந்து குருமார் சங்கத்தின் தலைவர் இ.பாஸ்கரன் குருக்கள் தலைமையில் நடைபெற்றது.

பெண்களுக்கான இந்தக் கருத்தரங்கை திருகோணமலை கரித்தாஸ் மகளிர் அபிவிருத்திப் பிரிவின் உத்தியோகத்தர் செல்வி சூரியா நடத்தினார். (ச-40)


**க.பொ.த (சாதாரணம்/உயர்தரம்) சித்தியடையாத சகலருக்கும்**

**தமது பிரதேச கணினிவள நிலையத்தின் ஊடாக NVQ கற்கை நெறியினை கற்பதன் மூலம் கணினித்துறையில் பட்டம் ஒன்றைப் பெற்றுக் கொள்வது வரையிலான வழி இதோ...**

| NVQ | Skill | Level | Duration | Institute |
|---|---|---|---|---|
| NVQ Level 7 | Planning & Designing Level | Degree | Third Year | University of Vocational Technology (UNIVOTEC) |
| NVQ Level 6 | Management Level Skill | Degree | Second Year | University of Vocational Technology (UNIVOTEC) |
| NVQ Level 5 | Supervision Level Skill | Degree | First Year | University of Vocational Technology (UNIVOTEC) |
| NVQ Level 4 (Opportunity for Entry 3) | Working Independently | Diploma | Second Year | Technical Colleges (COTS) |
| NVQ Level 3 (Opportunity for Entry 2) | Working with minimum Supervision | Diploma | First Year | Technical Colleges (COTS) |
| NVQ Level 2 (Opportunity for Entry 1) | Working with Supervision | Certificate | From 3 Months to 1 Year | School, Zonal and Provincial Computer Resource Centers |
| NVQ Level 1 | Entry Level Skill | Certificate | From 3 Months to 1 Year | School, Zonal and Provincial Computer Resource Centers |

| NVQ Level | Course | | |
|---|---|---|---|
| NVQ Level 2 | Computer Application Assistant | | |
| NVQ Level 3 | Computer Application Assistant | | |
| NVQ Level 4 | 1. ICT Technician | 2. Graphic Designer | 3. Hardware Technician |
| NVQ Level 5 | National Diploma in Information & Communication Technology | | |
| NVQ Level 6 | National Diploma in Information & Communication Technology | | |
| NVQ Level 7 | 1. Bachelor of Technology in ICT (Multimedia & Web Technology) | 2. Bachelor of Technology in ICT (Network Technology) | 3. Bachelor of Technology in ICT (Software Technology) |

**மேற்குறிப்பிட்ட பயிற்சி நெறிகளில்**

Level 2 : Computer Applications Assistant
Level 3 : Computer Applications Assistant
Level 4 : ICT Technician
Graphics Designer
Computer Hardware Technician

**ஆகியவை கீழ்குறிப்பிட்ட மாகாண, வலயக் கணினி வள நிலையங்களில் நடத்தப்படுகின்றன. (விண்ணப்பங்களை கீழ்வரும் நிலையங்களுடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம்)**

| நிலைய இல. | நிலையம் | முகவரி | தொலைபேசி இல. |
|---|---|---|---|
| 01 | மாகாண தகவல் தொடர்பாடல் கற்கை மத்திய நிலையம் (PICTEC) | மருக்காரம்பளை, வவுனியா. | அலுவலகம்:<br>முகாமையாளர்: 077 758 9797 |
| 02 | வவுனியா தெற்கு வலயக் கணினி வளநிலையம் (CRC) | வவுனியா த.ம.ம.வி, கண்டி வீதி, வவுனியா. | அலுவலகம்: 024 222 6266<br>முகாமையாளர்: 077 739 4022 |
| 03 | வவுனியா வடக்கு வலயக் கணினி வள நிலையம் (CRC) | வ/புதுக்குளம் ம.வி., சாஸ்திரிகூழாங்குளம், வவுனியா. | அலுவலகம்: 024 205 1921<br>முகாமையாளர்: 077 492 0136 |
| 04 | வடமராட்சி வலயக் கணினி வள நிலையம் (CRC) | யா/புலோலி மெ.த.க. பாடசாலை, புலோலி. | அலுவலகம்: 021 226 3087<br>முகாமையாளர்: 077 358 0755 |
| 05 | தீவக வலயக் கணினி வள நிலையம் (CRC) | வேலணை, யா/ வேலணை சரஸ்வதி வித்தியாலயம். | அலுவலகம்:<br>முகாமையாளர்: 077 601 5640 |
| 06 | மன்னார் வலயக் கணினி வள நிலையம் (CRC) | கணினிவள நிலைய வீதி, மன்னார். | அலுவலகம்: 023 323 1607<br>முகாமையாளர்: 071 574 0957 |
| 07 | யாழ்ப்பாணம் வலயக் கணினி வள நிலையம் (CRC) | யாழ்ப்பாணம் வலய கல்வி அலுவலகம், நல்லூர். | அலுவலகம்:<br>முகாமையாளர்: 021 222 1449 |
| 08 | கிளிநொச்சி வலயக் கணினி வள நிலையம் (CRC) | கிளிநொச்சி மத்திய கல்லூரி, கிளிநொச்சி. | அலுவலகம்:<br>முகாமையாளர்: 077 911 5152 |

**விண்ணப்பங்களை மேற்குறிப்பிட்ட நிலையங்களில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம். விண்ணப்ப முடிவு திகதி : 28.02.2014**

(C/12009)(10.6)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னாரில் தொடரும் இழுபறி நிலை

## அரச, தனியார் பஸ் சேவைகளுக்கு இடையில்


முரண்பாடு ஏற்பட்ட வேளையில்...

மன்னார், பெப்.11
மன்னாரில் அரச மற்றும் தனியார் போக்குவரத்துத் துறையினருக்கு இடையிலான இழுபறி நிலை தொடர்வதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மன்னார் நகரிலிருந்து உள்ளூர் மற்றும் வெளியூர் போக்குவரத்தில் அரசமற்றும் தனியார் பஸ்கள் சேவையில் ஈடுபட்டு வரு கின்றன. இந்த நிலையில் இரு தரப்பினர் களுக்கு மிடையில் திடீர் திடீரென முறுகல் நிலையும் ஏற்படு கின்றது.

அவ்வப்போது இவர்களுக்கிடையிலான முறுகல் நிலை, கைகலப்பு, பொலிஸ் முறைப்பாடு, விசாரணை என்று விரிவடைந்து சென்று போக்கு வரத்து அமைச்சு வரைக்கும் செல் வதாகவும் தெரிவிக்கப்படு கின்றது.

அண்மைக் காலமாக வட மாகாணத்தில் போக்குவரத்துச் சேவைகளில் ஈடுபட்டு வரும் தனியார் பஸ் உரிமையாளர்கள் தமக்குள்ளும், இலங்கைபோக்கு வரத்துச் சபையுடனும் மோதிக் கொள்கின்ற சம்ப வங்கள் இடம்பெற்று வரு கின்றன.

இந்த நிலையில் யாழ்ப்பாண மாவட்டத்தில் அரச மற்றும் தனியார் பஸ்கள் ஒன்றி ணைந்த நேரசூசி அடிப்படையில் சேவை யில் ஈடுபடுவதற்கு இணக்கம் தெரிவித்திருக்கின்றன.

இது இவ்வாறிருக்க அரச மற்றும் தனியார் பஸ்கள் தமக்கு வழங்கப்பட்டிருக்கும் நேர அட்டவணையைச் சரிவரப் பின்பற்றுவார்களாயின் தேவையற்ற பிரச்சின்னகள் ஏற்படாது என வடமாகாண போக்குவ ரத்து அமைச்சர் பா.டெனீஸ் வரன் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

(க-56)

---

# 10 ம் ஆண்டு நினைவஞ்சலி

**திருமதி . விசாலாட்சி (மகேஸ்வரி) சரவணபவன்**
(ஓய்வு பெற்ற ஆசிரியர்)

மண்ணில் 28. ★ 03. ★ 1936



விண்ணில் 03 ★ 02. ★ 2004

*நேற்று நடந்த பிரமை; ஆண்டு பத்து ஆனதம்மா!*
*மறக்கக் கூட முடியவில்லை; சிரித்த நின்முகம்*
*அன்பான மனம் கனிவான பேச்சு; இயல்பான பாசம் எதுவும்*
*மறக்கக் கூடவில்லை; பிறப்பு என்றால் இறப்பு நிஜம்*
*நின் ஆத்மா சாந்திக்காய் ; இறைவனை திருத்தாள் பணிந்து*
*இறைஞ்சுகின்றோம் நாம்; ஓம் சாந்தி; சாந்தி, சாந்தி !*

நாரந்தனை தெற்கு;
ஊர்காவற்றுறை.

கணவர்; பிள்ளைகள்
மருமக்கள், பேரப்பிள்ளைகள்

---

# நான்காம் ஆண்டு நினைவலைகள்



உள்ளம் மகிழ
07.08.1945
உள்ளம் நெகிழ
27.01.2010
திதி: 11.02.2014

**திருமதி சுபத்திராதேவி விவேகானந்தன்**
(சங்கீத வித்துவான், சென்னைப் பல்கலைக்கழகம், - ஓய்வுபெற்ற சங்கீத ஆசிரியர்)

விருட்சமாக இருந்து எம்மை வளர்த்தீர்
விழுதுகளாக நாங்கள் உங்களைத் தாங்கமுன்
மறைந்து சென்றீர்களே!
உங்கள் ஆத்மா அரன் அடி சேர வேண்டுகின்றோம்.

நினைவுகளுடன்:
கணவர் தி.விவேகானந்தன்
(ஓய்வுநிலை உள்ளூராட்சி எழுதுனர்)
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

அழகொல்லை,
அளவெட்டி மத்தி,
அளவெட்டி, யாழ்ப்பாணம்.

(C)12607(2.6.3)

---

# மாடுகளின் கால்களை கட்டி வாகனத்தில் ஏற்றிச் சென்ற மூவருக்கு மறியல்

மாடுகளின் கால்களைக் கட்டி சித்திர்வதை செய்து வாகனத்தில் ஏற்றிச் சென்ற மூவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தர விடப்பட்டது. கடந்த சனிக்கிழமை நாவற்குழி - கேரதீவு வீதியில் ரோந்து சென்ற பொலிஸார் அந்த வழியே வந்த வாகனத்தை மறித்து சோதனையிட்ட போது கால்கள் கட்டிய நிலையில் மாடுகளைக்கொண்டுசென்றதைக்கண்டுபிடித்தனர். கட்டிய நிலையில் காணப்பட்ட மாடுகளை மீட்டதுடன் மூவரையும் கைது செய்து சாவகச்சேரிபொலிஸ்நிலையத்துக்குக்கொண்டுசென்றனர். மிருகங்களை சித்திரவதைப்படுத்தும் நோக்கில் வாகனத்தில் ஏற்றிச் சென்றாக பொலிஸார் குறித்த மூவரின் மீது வழக்குத் தாக்கல் செய்து பதில் நீதிவான் செ.கணபதிப்பிள்ளை முன்னிலையில் நேற்று முற்படுத்தினர். அவர்கள் மூவரையும் எதிர்வரும் 21 ஆம் திகதி வரை விளக்கமறியலில்வைக் குமாறு உத்தரவிட்டார். (வ-9)

---

# மரண அறிவித்தல்கள்

## Dr. இராசரத்தினம் ஜெகதீஸ்வரி



பருத்தித்துறை, வியாபாரி மூலையைச் சேர்ந்த இராசரத்தினம் ஜெகதீஸ்வரி 10.02.2014 திங்கட்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவக்கொழுந்து (யாழ்ப்பாணன்)-நவமணி தம்பதியரின் சிரேஷ்ட புதல்வியும், காலஞ்சென்ற Dr. நடராசா இராசரத்தினத்தின் அன்பு மனைவியும், ஆனந்தகௌரி, சாந்தகௌரி (ஆசிரியர், பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை), வசந்தகௌரி ஆகியோரின் அன்புத் தாயாரும், நந்தபாலா, ஜெகதீசன், இராதா கிருஷ்ணன் (அஞ்சல் அலுவலகம், பருத்தித்துறை) ஆகியோரின் மாமியா ரும், வைஷ்ணவி (பல்கலைக்கழகம் ஒலுவில்), தனஞ்சயன், கீர்த்தனா, ஸ்ரீராம், கோகிலவதனா, காலஞ்சென்ற உமாகாந்தன் மற்றும் கோகிலன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.02.2014) செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் சுப்பர் மடம் இந்துமயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வியாபாரி மூலை,
பருத்தித்துறை. (33358)(7.6.3)

தகவல் :
குடும்பத்தினர்.
077 869 5610

---

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



திருமதி சிறீமதி
சம்பூரண-
யோகாம்பிகைதேவி (பவளம்)
சிவலிங்கம்

மலர்வு
20★01★1942

உதிர்வு
13★01★2014

கடந்த 13.01.2014 சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவியின் அந்தியேட்டிக்கிரியைகள் நாளை (12.02.2014) புதன்கிழமை அதிகாலை 5.00 மணியளவில் ஊறணிமடத்தில் நடைபெறும். தாங்களும் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

அன்னாரின் மறைவின் போது எம்முடன் இருந்து எமது துயரில் பங்கு கொண்டு சகல வழிகளிலும் எம்மை ஆற்றுப்படுத்திய அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அரசம்புலம், மானாங்கானை,
வல்வெட்டித்துறை. (44582)(3.6.4)

குடும்பத்தினர்.

---

# பாடசாலை செல்லாத கிராமப்புற மாணவர்கள்

கிளிநொச்சி, பெப்.11
கிளிநொச்சி வலயத்திலுள்ள பாடசாலைகளில் கல்வி கற் கும் கிராமப்புற மாணவர்கள் சிலர் பாடசாலைக்குச் செல்லா மல் வேறு தொழில்களில் ஈடுபட்டு வருவதைக் காண முடிகின்றது.

குடும்ப வறுமை காரணமாக குளங்கள், வாய்க்கால்களில் தூண்டில் மூலம் மீன்பிடிக்கும் தொழிலில் சில மாணவர்கள் ஈடுபட்டு வருகின்றனர்.


பண வசதி படைத்த மாணவர்கள் போட்டிகளுக்கென புறா வளர்க்கும் செயற்பாடுகளில் ஈடுபடுகின்றனர்.

நகரப்புற மாணவர்கள் இணை யத்தள நிலை யங்களில் [illegible] தெரி விக்கப்படுகின்றது.

(க-18)

---

## ஆறுமுகம் பாலசிங்கம் (பாலு)



மண்கும்பான் 4ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட ஆறுமுகம் பாலசிங்கம் நேற்று (10.02.2014) திங்கட்கிழமை காலை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம்-தங்கம்மா தம்பதியரின் மகனும், காலஞ்சென்றவர்களான கந்தையா- அபிராமிப்பிள்ளை தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற தனலட்சுமியின் கணவரும், வள்ளியம்மை, காலஞ்சென்ற பொன்னுத்துரை மற்றும் கணபதிப்பிள்ளை, தளையசிங்கம் (யாழ்.திருநெல்வேலி மாக்கற், இந்தியா), காலஞ்சென்றவர்களான செல்வமணி, அன்னம் மற்றும் தில்லையம்பலம், நாகேஸ்வரி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.02.2014) செவ்வாய்க் கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரின் மருமகனாகிய வைத்திலிங்கம் சந்திரகுமாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோம்பயன் மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சபாபதி வீதி,
கொக்குவில்,
யாழ்ப்பாணம்.
077 248 9134

(44583)(7.6.3)

தகவல் :
வை.சந்திரகுமார்
(மருமகன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீ பரவியதை அடுத்து 15 ஏக்கர் நிலம் நாசம்


கொட்டகலையில் பரவியது தீ

கொழும்பு,பெப்.11

திம்புள்ள, பத்தனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கொட்டகலை பகுதியில் ஞாயிற்றுக்கிழமை தீ பரவியதால் 15 ஏக்கர் நிலப்பரப்பிலிருந்த மரங்கள் முற்றாக எரிந்து நாசமாகியுள்ளன என்று திம்புள்ள பத்தனை பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தப் பகுதிக்கு எவராவது தீ வைத்திருக்கலாம் என்றும் அவர்கள் சந்தேகம் தெரிவித்தனர்.

இவ்வாறு காடுகளுக்கு தீ வைப்பவர்கள் தொடர்பில் தகவல் கிடைத்தால் உடனடியாக அருகிலுள்ள பொலிஸ் நிலையத்தில் தகவல் வழங்குமாறு நுவரெலியா மாவட்டச் செயலர் டி.பி.ஜி. குமாரசிரி வேண்டுகோள் விடுத்துள்ளார். (ச)

## லூர்து அன்னை கெபித் திருவிழா

கொழும்புத்துறை, பெப்.11

கொழும்புத்துறை புனித செபமாலை அன்னை ஆலயவளாகத்தில் அமைந்துள்ள லூர்து அன்னை கெபித் திருவிழா இன்று செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளது.

இன்று மாலை 5 மணிக்கு திருச் செபமாலையுடன் ஆரம்பமாகி திருவிழாத் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும். (ஒ-135)

# பாவனைக்கு உதவாத நெத்தலிக் கருவாடு

## *புறக்கோட்டையில் சிக்கியது*

மனிதப் பாவைக்கு உதவாத 20 ஆயிரம் கிலோ நிறையுடைய நெத்தலிக் கருவாட்டை நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபையின் அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர்.

கைப்பற்றப்பட்டுள்ள மொத்த நெத்தலிக் கருவாட்டின் பெறுமதி சுமார் 50 லட்சம் ரூபா வரையாகும் என்று அதிகார சபையின் தலைவர் ரூமி மர்சூக் தெரிவித்தார்.

புறக்கோட்டை, இரண்டாம் குறுக்குத் தெருவிலுள்ள களஞ்சியசாலையொன்றை நேற்று முன்தினம் திடீர் முற்றுகை யிட்டு சோதனைக்குட்படுத்திய போதே பழுதடைந்த பெருந்தொகை நெத்தலிக் கருவாடுகள் விற்பனைக்காக தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்த உண்மை அம்பலத்துக்கு வந்துள்ளது. நுகர்வோர் அதிகார சபைக்குக் கிடைத்த இரகசியத் தகவலைத் தொடர்ந்தே இந்தத் திடீர் சுற்றி வளைப்பு முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச)


**TRADE FINANCE & INVESTMENTS PLC**

Since 1978
A Finance Company Licensed by the
Monetary Board of the Central Bank of Srilanka
Under the finance Business Act No. 42 of 2011

விற்பனைக்குண்டு

**மோட்டார் சைக்கிள்கள்**

1. PASSION PRO - NPXO, NPXM-XXXX
2. APACHE - 150 - NPXR, NPBAB, NPBAE - XXXX
3. APACHE - 180 - NP XX - XXXX
4. STREAK - NPXR - XXXX
5. WEGO - NPBAE - XXXX
6. SPLENDER NXG - NPXS - XXXX

**உழவு இயந்திரங்கள் (MASSEY FERGUSAN)**

1. 49 - xxxx
2. 270 - xxxx
3. 49 - xxxx (MAHENDRA)

லொறி - 42 - XXXX

தொடர்புகளுக்கு: மேனகாந் - 0773644409

**TRADE FINANCE & INVESTMENTS PLC**
74 கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
021 221 9997, 021 222 1898

**மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு**
NP TP XXXX DISCOVERY 125
(பழைய MODEL)
077 6110625

**வேலை ஆள்கள் தேவை**
எமது ஸ்தாபனத்திற்கு துப்பரவு வேலை செய்வதற்கு பெண் பிள்ளைகள் தேவை. நாள் ஒன்றுக்கு ரூபா 300/= தொடக்கம் 375/=வரை வழங்கப்படும். காலை 8.00 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை. தென்மராட்சியில் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.
தொடர்பு: 11A ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
T.P. 021 222 3857

**முதலாம் ஆண்டு திருமணவாழ்த்து**

இன்று (11.02.2014) செவ்வாய்க்கிழமை
திரு. திருமதி விபுசன் தீபா தம்பதிகள்
**விபுசன் - தீபா**



இணைபிரியா வாழ்வின் முதலாவது திருமண
அகவையை கோலாகலமாகக் கொண்டாடும்
இவர்கள் இல்லற வாழ்வில் இனிதே இணைந்து நல்லற
மாற்றி நன்றே வாழவும் சான்றோர் போற்றவும்
மூத்தோர் வாழ்வுத்தவும் வாழ்வியற் சிறப்புக்கள்
பல பெற்று வாழ்நாளில் வாரி வழங்கிடவும் சேய்கள்
சிலவற்றுடன் சேர்ந்திங்கு காய்கள் கனிகளாகி காண்போர்
மகிழ்ந்திட பாரிபோல பண்புடன் பாங்காய் வாழ்ந்திடவும்
ஆலமரம் போல் வாழ்வாங்கு வாழ்க என
ஆங்காங்கே வாழ்ந்து வாழ்த்துபவர்கள்

யோகலிங்கம் (அப்பா)
நீர்வேலி வடக்கு, நீர்வேலி. இந்துமதி (அம்மா). சாளினி (அண்ணி)

சகோதரர்கள்:
ஜெயநிதி. சாங்கநிதி.
சிவரூபன். சுபகர்.
நிஜேந்தன். காசினி. தீபன்


# மரண அறிவித்தல்



## திருமதி சரஸ்வதிப்பிள்ளை (சரஸ்வதி) கோபாலபிள்ளை

வெள்ளாம் போக்கட்டி கொடிகாமத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் தற்போது கனடாவில் வசித்தவருமான திருமதி சரஸ்வதிப்பிள்ளை கோபாலபிள்ளை அவரது பிறப்பிடமான வெள்ளாம் போக்கட்டியில் நேற்றுமுன்தினம் (09.02.2014) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கோபாலபிள்ளையின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான கேசர்-பொன் னம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான முருகேசு-பொன்னாச்சி தம்பதியரின் அன்பு மருமகளும், பரமேஸ்வரி, தியாகேஸ்வரி (கனடா), குணேஸ்வரி (கனடா), கணேசமூர்த்தி (கனடா) ஆகி யோரின் தாயும், திருலோக நாதன் , முத்தையா (கனடா), செல்வராசா (கனடா), நந்தினி (கனடா), கந்தையா (ஓய்வு நிலை அதிபர்), சிவபாலு, மகேசு ஆகியோரின் மாமியும், காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை, இலட்சுமி மற்றும் கனகசபை, கமலாதேவி, மனோன்மணி ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்றவர்களான யோகம்மா, வேலுப்பிள்ளை மற்றும் நாகேந்திரராணி, நாகராசா, சாம்பசிவம் நாகம்மா, கார்த்திகேசு ஆகியோரின் மைத்துனியும், பகீரதன் (கனடா), பரணிதரன் , மோகனதாஸ் (கனடா), நியூசன் (கனடா), கார்த்திகா ( கனடா), கீர்த்திகன் (கனடா), கபிலன் (கனடா), மாதங்கி (கனடா) ஆகியோரின் பேர்த்தியும், கமலாதேவி, அன்னபூரணம், அகிலேஸ்வரி (கனடா) ஆகியோரின் உடன் பிறவாச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (12.02.2014) புதன்கிழமை மதியம் 12.00 மணியளவில் நடைபெற்று தகனக்கிரியைக்காக கச்சாய் எறியால்பிட்டி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வெள்ளாம் போக்கட்டி,
கொடிகாமம்.

தகவல்:
[illegible]மூர்த்தி - (மகன்)- 077 4481997 (கனடா)
திரு.திருமதி செல்வராசா குணேஸ்வரி (கனடா) - 0014167525721

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னார் மனிதப் புதைகுழி தொடர்பில் சர்வதேச விசாரணை கோரி போராட்டம்

மன்னார், பெப் 11

மன்னார் திருக்கேதீஸ்வரம் மனிதப் புதைகுழி தொடர்பில் சர்வதேச விசாரணை ஆரம்பிக்க வேண்டும் என்ற கோரிக்கை உட்பட மன்னார் மாவட்ட மக்கள் எதிர் நோக்கும் பல்வேறு பிரச்சினைகளுக்கு நீதி கோரி எதிர்வரும் மார்ச் மாதம் 12 ஆம் திகதி மன்னாரில் மாபெரும் கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்று மேற்கொள்ளப்படவுள்ளதாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

மன்னார் மாவட்ட சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகளுக்கும் தமிழ் தேசியக்கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையில் நேற்றுத் திங்கட்கிழமை மாலை 3.30 மணியளவில் மன்னார் ஆகாஸ் விடுதியில் இடம்பெற்ற விசேட சந்திப்பின் போதே குறித்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாகச் செல்வம் அடைக்கலநாதன் மேலும் கூறினார்.

இந்தச் சந்திப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான எஸ்.வினோநோகராதலிங் கம், சிவசக்தி ஆனந்தன், மன்னார் பிரஜைகள் குழுவின தலைவர் அருட்தந்தை இம்மனுவேல் செபமாலை, மன்னார் மறை மாவட்ட குருமுதல்வர் அன்ரனி விக்டர் சோசை, மன்னார் நகர சபைத் தலைவர் எஸ். ஞானப் பிரகாசம், நானாட்டான் பிரதேச சபையின் தலைவர் அன்புராஜ் லெம்பர்ட் உட்பட சிவில் அமைப்புக்களின் பிரதி நிதிகள் என நூற்றுக் கணக்கானவர்கள் கலந்து கொண்டனர்.

இதன் போது மன்னார் திருக் கேதீஸ்வரம் மனிதப் புதைகுழி தொடர்பில் சர்வ தேச விசாரணை ஆரம்பிக்கவேண்டும், இந்திய வீட்டுத் திட்டத்தில் தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்டுள்ள அநீதி, மன்னாரில் மேற்கொள்ளப்பட்டுவரும் சட்டவிரோத மண் அகழ்வு தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

இந்தப் பிரச்சினைகள் தொடர்பில் அனைவரும் ஒன்றிணைந்து எதிர்வரும் மார்ச் மாதம் 12 ஆம் திகதி மன்னாரில் மாபெரும் கவனவீர்ப்புப் போராட்டத்தை மேற்கொள்வது என முடிவெடுக்கப்பட்டுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் மேலும்தெரிவித்தார். (த-56)

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### வாக்கு

ளிக்க வேண்டும்" என்றும் தெரிவித்தனர்.

அத்தோடு, சர்வதேசத்தினர் உள்நாட்டு விடயத்தில் மூக்கை நுழைப்பதற்கு பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியே வழிவகுத்தது என்றும் அமைச்சர்கள் இதன் போது சுட்டிக் காட்டினர்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தேர்தல் நடவடிக்கைகள் குறித்து விளக்கமளிக்கும் முதலாவது மாநாடு கொழும்பில் நேற்று நடைபெற்றபோதே அமைச்சர்கள் மேற்கண்டவாறு கருத்து வெளியிட்டனர்.

அரசின் பங்காளிக் கட்சியான ஜாதிக ஹெல உறுமயவின் நாடாளுமன்ற உறுப்பினரும் அமைச்சருமான சம்பிக்க ரணவக்க தெரிவிக்கையில்,

இந்த நாடு தற்போது பாரிய அழுத்தங்களுக்கு முகங் கொடுத்து வருகிறது. சீனா, ஜப்பான், பிலிப்பைன்ஸ் போன்ற நாடுகளை சீர்குலைத்ததைப் போல அமெரிக்கா தற்போது இலங்கையையும் சீர்குலைக்க முயற்சிக் கிறது.

உக்ரைனில் நடைபெற்று வரும் பிரச்சினைகளுக்கும் அமெரிக்காவே காரணம். இந்தப் பிரச்சினைகளுக்குப் பின்னால் அமெரிக்காவே இருக்கிறது. அதே செயற்பாட்டையே தற்போது இலங்கையிலும் அமெரிக்கா கொண்டு வரப்பார்க்கிறது. இதற்கு இலங்கைய ராகிய நாம் ஒரு போதும் இடமளிக்கக் கூடாது. எஹலியபொல என்பவன் அரசனுடனேயே இருந்து கொண்டு அரசுக்கு எதிராக செயற்பட்டு ஆட்சியைப் பிடிக்க நினைத்தான். ஆனால், இறுதியில் அவனால் ஆட்சியைப் பிடிக்க முடியாது போனதுடன் அநியாயமாக இறந்தும் விட்டான். இந்த எஹலியபொலயின் சிந்தனையுடனேயே தற்போது எதிர்க் கட்சிகளும் செயற்படுகின்றன. ஆனால், அவர்கள் உள்நாட்டுக்குள் பிரிவினையை ஏற்படுத்த நாம் இடமளிக்கப் போவதில்லை.

நாம் பெற்ற சமாதானத்தை தக்க வைத்துக்கொள்ள வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. ஆகவே நாட்டு மக்கள் அனைவரும் இந்தத் தேர்தலையே சர்வதேசத்துக்கு கொடுக்கும் பதிலடியாக பயன்படுத்த வேண்டும்" என்று தெரிவித்தார்.

அதேவேளை கருத்து வெளியிட்ட அமைச்சர் சுசில் பிரேமஜயந்த,

நாட்டிலுள்ள சமாதானத்தை குழப் பியடிக்கச் சர்வதேசம் முயற்சி செய்து வருகிறது. இனங்களுக்கிடையே காணப்படும் ஒற்றுமையை இல்லாதொழிப்பதே சர்வதேசத்தினரின் நோக்கமாகும். இதற்கு நாம் இடமளிக்கக் கூடாது. இவர்களது செயற்பாடுகள் அனைத்தும் முறியடிக்கப்பட வேண்டும்.

இல்லையேல், நாட்டுக் குள் புகுந்து அவர்களது ஆதிக்கத்தை நிலைநிறுத்தி விடுவார்கள். சர்வதேசம் இலங்கைக்கு எதிராகப் பிரேரணைகள் கொண்டு வருவதற்கு அரசே காரணம் என எதிர்க்கட்சிகள் தெரிவிக்கின்றன. ஆனால், இவ்வளவு பிரச்சினைகள் வர ஐக்கிய தேசியக் கட்சியே காரணம் என எம்மால் உறுதியாகக் கூற முடியும். 1983 ஆம் ஆண்டு நாட்டில் ஏற்பட்ட கலவரத்தில் தான் அதிகளவிலான தமிழர்கள் கொல்லப்பட்டனர். அப்போது இந்த ஐக்கிய தேசியக் கட்சியே ஆட்சியிலிருந்தது.

தற்போது அரசுக்கு எதிராக குற்றம் சுமத்திவரும் ஐ.தே.கவின் தலைவர் தான் அப்போது அமைச்சராக இருந்தார். இவர்களின் செயற்பாட்டாலேயே அதிகளவான தமிழர்கள் நாட்டை விட்டு வெளியேறினர். இப்படி பல குற்றங்களை செய்து விட்டு தற்போது ஆட்சிக்கு வரவேண்டும் என்ற ஒரே காரணத்துக்காக ஐக்கிய நாடுகள் சபையை நாட்டுக்கு எதிராக ஐ.தே.க. தூண்டி விட்டுள்ளது. இதனாலேயே நாட்டுக்கு எதிராகப் பிரேரணைகள் வருகின்றன. ஆனால், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆட்சியிலிருக்கும் வரை நிச்சயமாக ஐ.தே. கவினால் ஆட்சியமைக்க முடியாது. அதுமட்டுல்லாது, கொழும்பிலும் ஐ.தே.க தற்போது பலமிழந்துள் ளமையை காணக் கூடியதாகவே உள்ளது" என்றார்.

அத்தோடு, ஜெனிவாப் பிரேரணைக்கு எதிராக தக்க பதிலடி ஒன்றைக் கொடுக்க வேண்டுமெனில் அனைவரும் வெற்றிலைக்கே வாக்களிக்க வேண்டும் என்றும் சுசில் சுட்டிக்காட்டினார்.

அதேவேளை அமைச்சர் டலஸ் அழகப்பெருமவும் ஜெனிவாப் பிரேர ணையிலிருந்து நாட்டைக் காப்பாற்றிச் சர்வதேசத்திற்கு பதிலடிக் கொடுக்க வேண்டுமெனில் அனைவரும் வெற்றிலைக்கே வாக்களிக்க வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார். (த-சி)

### தேர்தல்

னதும் சுதந்திரமானதுமான தேர்தலுக் கான மக்கள் இயக்கம் (கபே) சுட்டிக் காட்டியுள்ளது.

அதேவேளை, மேல்மாகாண சபைத் தேர்தலில் கொழும்பு மாவட்டத்தில் இரட்டைக் கொடி சின்னத்தில் சுயேச்சைக் குழு 01 இல் களமிறங்கியுள்ள நவோதய மக்கள் முன்னணியின் அவிசாவளை பகுதி வேட்பாளர் வி.ரவீந்திரகுமார் மீது இனந்தெரியாத குழு ஒன்று தாக்குதல் நடத்தியுள்ளது. நேற்றுமுன்தினம் நள்ளிரவு இடம்பெற்ற இச்சம்பவத்தில் வேட்பாளரின் மண்டை உடைந்துள்ளது. இது தொடர்பில் அவிசாவளைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது என முன்னணியின் தலைவர் எஸ்.கே.கிருஷ்ணா நேற்று தெரிவித்தார்.

இதற்கிடையில், அரச சேவையாளர்களைப் பரப்புரைகளில் ஈடுபடுத்தல், பொது சொத்துகளைப் பயன்படுத்தல், நியமனம் வழங்குதல், இடமாற்றம் வழங்குதல், சொத்துகளுக்கு சேதம் விளைவித்தல், தாக்குதல், அச்சுறுத்தல் என மேல்மாகாணத்தில் மட்டும் இதுவரையில் 83 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன என்றும் கபே அமைப்பின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

வேட்புமனு தாக்கல் முடிவடைந்த திகதியிலிருந்து நேற்று மாலை வரை தென்மாகாணத்தில் தேர்தல் சட்டதிட்டங்களை மீறும் வகையில் 34 சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன என்றும் அதில் கூறப்பட்டுள்ளது.

இதில் குறிப்பாக மேல்மாகாணத்தில் கொழும்பு மாவட்டத்திலும் தென் மாகாணத்தில் மாத்தறை மாவட்டத் திலுமே அதிக சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

(த-சி)

### பெண்ணை

நீதிவான் ஆர்.எஸ்.மகேந்திரராஜா முன்னிலையில் இந்த வழக்குத் தீர்ப்புக்காக நேற்று எடுத்துக்கொள்ளப்பட்டது.

சில வருடங்களுக்கு முன்னர் பெண் ஒருவருக்கு மண்ணெண்ணெய் ஊற்றி எரித்துக் கொலை செய்ய முற்பட்ட குற்றச்சாட்டில் நாரந்தனை ஊர்காவற்றுறையைச் சேர்ந்த ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட அவர் தான் [illegible] வழக்கு விசாரணை நடைபெற்று வந்தது. விசாரணை முடிவில் அவர் குற்றவாளியென நீதிமன்றினால் இனங் காணப்பட்டார்.

இதனையடுத்து அவருக்கு 6 மாதகாலச் சிறைத்தண்டனை விதித்து அதனை 5 வருடங்களுக்கு ஒத்திவைத்தார் நீதிவான். அத்துடன் ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதித்ததோடு அதனைச் செலுத்தத் தவறின் 2 வார காலச் சிறைத் தண்டனை அனுபவிக்கவேண்டும் என்றும், பாதிக்கப்பட்டவருக்கு 20 ஆயிரம் ரூபாவை நஷ்டஈடாக வழங்கவேண்டும் என்றும் அதனை வழங்கத் தவறின் 6 மாதகாலச் சிறைத்தண்டனை அனுபவிக்கவேண்டும் என்றும் நீதிவான் உத்தரவிட்டார். (த-4)

### இந்தியப்

வர்களும் பரஸ்பரம் விடுதலை செய்யப்பட்டனர்.

இருப்பினும், பேச்சுகள் முடிவடைந்த நிலையிலும், இருநாட்டு மீனவர்களும் தொடர்ந்தும் கைதுசெய்யப்படும் சம்பவங்கள் இடம்பெறுகின்றன. இந்த நிலையில் இந்தியப் பாதுகாப்பு அமைச்சருக்கும் - இலங்கைக் கடற்படைத் தளபதிக்கும் இடையில் இடம்பெற்ற சந்திப்பில் இது விடயம் தொடர்பில் பேச்சுகள் இடம்பெற்றன என்றும் தெரியவருகின்றது. (த-சி)

### தனியார்

தேச செயலளார்கள் மற்றும் இராணுவ அதிகாரிகள், கடற்படை அதிகாரிகள், விமானப் படை அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

வடக்கில் இராணுவத்தினர் வசமிருந்த 18 ஆயிரத்து 587 ஏக்கர், கடற்படையினர் வசமிருந்த 708 ஏக்கர், விமானப் படையினர் வசமிருந்த 716 ஏக்கர் காணிகள் மக்களிடம் திருப்பிக்கொடுக்கப்பட்டுள்ளன.

நேற்றைய கலந்துரையாடலில் யாழ்.மாவட்டத்தில் காணி சுவீகரிப்புக்காக இராணுவத்தினர் கோரியுள்ள தனியார் காணிகளின் விபரங்களும் பிரதேச செயலாளர்களால் சமர்ப்பிக்கப்பட்டன. குறித்த காணிகளின் சுவீகரிப்புக்குரிய நடவடிக்கைகள் முன்னெடுப்பதில் சில தடங்கல்கள் இருப்பதாகப் பாதுகாப்புத் தரப்பினரால் சுட்டிக்காட்டப்பட்டது.

இதன்போது கருத்துத் தெரிவித்த காணி அமைச்சர், பாதுகாப்பு அமைச்சு இனிமேல் தனியார் காணிகளைச் சுவீகரிக்கப்போவதில்லை என்று தெரிவித்துள்ளது. எனவே தனியார் காணிகளை இராணுவத்தினருக்கு வழங்க வேண்டியதில்லை.

ஏற்கனவே சுவீகரிக்கப்பட்ட காணிகளுக்கு எதிர்வரும் மார்ச் மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் நஷ்டஈடு வழங்கப்படும். யாழ்.மாவட்டத்தில் சுவீகரிப்பு நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்ட காணித் துண்டுகளில் 10 காணித் துண்டுகளுக்குரிய நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டுள்ளன-என்றார். (த-5)

### பிரதேச

இராணுவ பிரிகேடியர் ஒருவர்.

யாழ்.மாவட்டச் செயலகத்தில் காணி அமைச்சர் தலைமையில் இடம்பெற்ற கலந்துரையாடலிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

காணி சுவீகரிப்பு நடவடிக்கைகளுக்காக நாம் பிரதேச செயலகங்களுக்கு அடிக்கடி செல்கின்றோம். அங்குள்ள ஊழியர்களும் எம்மை மதிக்கின்றார்கள் இல்லை. அத்துடன் பிரதேச செயலாளர்கள், அரச அதிகாரிகளும் காணி சுவீகரிப்பு விடயங்களில் எங்களுடன் ஒத்துழைப்பதில்லை.

நாங்களும் அரச அதிகாரிகள், நீங்களும் அரச அதிகாரி கள். எங்களுடன் ஒத்துழையுங்கள் என்று பிரிகேடியர் ஒருவர், அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோன் முன்னிலையில் தெரிவித்தார்.

இது தொடர்பில் அமைச்சர் எந்தக் கருத்தும் தெரிவிக்கவில்லை.

(த-5)

### யாழில்

யாழ்.மாவட்டச் செயலகத்தில் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலிலேயே அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த காலப் போரினால் காணி ஆவணங்களைத் தொலைத்தவர்களுக்கு அவற்றை மீண்டும் வழங்கும் செயற்பாடு கடந்த வருடம் முதல் வடக்கில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இதனடிப்படையில் 10 ஆயிரம் பேருக்கு காணி ஆவணங்கள் வழங்கப்பட்டுள்ளன. இந்த ஆண்டு 25 ஆயிரம் பேருக்கு வழங்க எதிர்பார்த்துள்ளோம்.

மாகாணத்தின் காணிப் பிரச்சினைகள் தொடர்பில் வடக்கு ஆளுநருடனும், மாவட்டத்தின் பிரச்சினை தொடர்பில் அரச அதிபருடனும் கலந்துரையாடி நடவடிக்கைகள் மேற்கொள்ளுங்கள்-என்றார்.

ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள காணிப் பிரச்சினைகள் தொடர்பில் காணி அமைச்சர் கூட்டத்தில் கேட்டறிந்தார். யாழ்.மாவட்டத்தில் 70 சதவீதமான காணிப் பிரச்சினைகள் காணிகள் இல்லாமையே என்பதை பிரதேச செயலர்கள் சுட்டிக்காட்டினர்.

இதன்போது பதிலளித்த அமைச்சர், காணியற்ற மக்களுக்குக் காணிகளைப் பகிர்ந்து கொடுக்குமாறும், அதற்குரிய நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறும் தெரிவித்தார். அத்துடன் அரச காணிகள் இல்லாதவிடத்து தனியார் காணிகளை சுவீகரித்துக் காணிகளைப் பகிரந்தளிக்க முடியும் என்றால் அதற்குரிய நடவடிக்கைகளையும் ஆராயுமாறு அமைச்சர் தெரிவித்தார்.

மருதங்கேணி பிரதேச செயலாளர் பிரிவில் அரச காணியிருப்பதால், அந்தக் காணியை முதலில் அந்தப் பகுதியிலுள்ள காணியற்ற மக்களுக்கு வழங்குமாறும் அமைச்சர் குறிப்பிட்டார்.

**நில அளவை திணைக்களம் திறப்பு**

யாழ்.மாவட்டத்தில் 25 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்ட நில அளவைத் திணைக்களம் பழைய பூங்காவில் நேற்றுக் காலை அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோனினால் திறந்து வைக்கப்பட்டது.

(த-5)

### 58

இதன்போது மேலும் மூன்று மனித எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டன.

இதனையடுத்து அங்கு மீட்கபட்ட எலும்புக்கூடுகளின் எண்ணிக்கை 58 ஆக உயர்ந்துள்ளது.

கடந்த டிசெம்பர் மாதம் 20 ஆம் திகதி திருக்கேதீஸ்வரம் ஆலய பகுதியிலிருந்து மாந்தைப் பகுதிக்கு குடிதண்ணீர் வழங்க நிலத்தடிக் குழாய்கள் பொருத்தும் வேலைகள் முன்னெடுக்கப்பட்டபோது குறித்த மனிதப் புதைகுழி கண்டுபிடிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து மன்னார் நீதிவான் முன்னிலையில் அங்கு தோண்டும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இதுவரை 58 மனித எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டுள்ளன. இவற்றில் 28 மனித எலும்புக்கூடுகள் வெளியே எடுக்கப்பட்டுப் பெட்டியில் அடைக்கப்பட்டு மன்னார் பொது வைத்தியசாலையின் பிரத்தியேக அறையில் பாதுகாப்பான முறையில் வைக்கப்பட்டன.

புதைகுழியைத் தோண்டும் நடவடிக்கை இன்று தொடர்ந்து இடம்பெறும். (த-56)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சென்.பீற்றர்ஸ், கல்வளை அணிகள் இரண்டாம் சுற்றில் மோதத் தகுதி

வலி.வடக்கு,பெப். 11

தலைவர் வெற்றிக் கிண்ணத்துக்காக இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தின் ஆதரவுடன் வலிகாமம் உதைபந்தாட்ட லீக் நடத்தும் விலகல் முறையிலான உதைபந்தாட்டப் போட்டியில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஆட்டங்களில் நவாலி சென்.பீற்றர்ஸ் விளையாட்டுக்கழகமும், சண்டிலிப்பாய் கல்வளை விநாயகர் விளையாட்டுக் கழகமும் வெற்றி பெற்று இரண்டாம் சுற்றில் விளையாடத் தகுதி பெற்றுள்ளன.

இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி மைதானத்தில் போட்டிகள் நடைபெற்றன.



வட்டுக்கோட்டை விளையாட்டுக் கழகத்துக்கும் நவாலி சென்.பீற்றர்ஸ் விளையாட்டுக் கழகத்துக்கும் இடையே நடைபெற்ற போட்டியில் முதல்பாதி ஆட்டத்தில் வட்டுக்கோட்டை விளையாட்டுக் கழக வீரன் சுரேந்திரன் ஒரு கோலைப் பெற்றுக்கொடுத்தார். இந்த நிலையில் முதல் பாதி ஆட்டம் முடிவடைந்தது.

இரண்டாம் பாதி ஆட்டத்தில் இரு அணிகளும் கடுமையாக மோதிக்கொண்டன.

சென்.பீற்றர்ஸ் விளையாட்டுக் கழக வீரன் பொபித் இரண்டு கோல்களைப் போட்டு தனது அணியை முன்னிலைப்படுத்தினார்.

ஆட்ட நிறைவில் நவாலி சென்.பீற்றர்ஸ் விளையாட்டுக் கழகம் 2:1என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

மற்றுமொரு ஆட்டத்தில்

**போட்டி சம நிலையில் காணப் பட்டவேளை முதல் பாதி ஆட்டம் முடிவடைந்தது.**

அராலி தெற்கு மாவத்தை விளையாட்டுக் கழகமும் சண்டிலிப்பாய் கல்வளை விநாயகர் விளையாட்டுக் கழகமும் மோதிக்கொண்டன.

முதல் பாதி ஆட்டத்தில் மாவத்தை விளையாட்டுக் கழக வீரன் ருசாந்தன் ஒரு கோலைப் போட்டார். பதிலுக்குக் கல்வளை விநாயகர் வி.க. வீரன் மயூரன் ஒரு கோலைப் போட்டார்.

போட்டி சமநிலையில் காணப்பட்ட நிலையில் முதல் பாதி ஆட்டம் முடிவடைந்தது.

இரண்டாம் பாதி ஆட்டத்தில் கல்வளை வீரன் மயூரன் மீண்டும் ஒரு கோலைப் போட்டார்.

ஆட்ட நிறைவில் கல்வளை விநாயகர் விளையாட்டுக் கழகம் 2:1என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (த-86)

## ஹொக்கிச் சங்கத்தில் 3 பாடசாலைகள்

வலி.வடக்கு,பெப். 11

யாழ்.மாவட்டப் பாடசாலைகள் ஹொக்கிச் சங்கத்தில் மூன்றுபுதிய பாடசாலை அணிகள் இணைந்து கொண்டுள்ளதுடன் இலங்கைப் பாடசாலைகள் ஹொக்கிச் சங்கத்திலும் இனைக்கப்பட்டுள்ளதாகச் செயலாளர் பா.தர்மகுமாரன் தெரிவித்துள்ளார்.

தீவக கல்வி வலயத்துக்கு உட்பட்ட ஸ்ரீ நயினாதீவு கணேசா மகாவித்தியாலயம், வலிகாமம் கல்வி வலயத்துக்கு உட்பட்ட மானிப்பாய் சர்வதேசப் பாடசாலை மற்றும் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி ஆகியனவே இணைந்து கொண்ட பாடசாலைகளாகும். (த-86)

## இன்றைய ஆட்டங்கள்

வலி.வடக்கு,பெப்.11

இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனத்தின் ஏற்பாட்டில் வலிகாமம் உதைபந்தாட்ட லீக் தலைவர் வெற்றிக் கிண்ணத்துக்காக நடத்தும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ள ஆட்டங்களில் மோதவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:-

அராலி பாரதி விளையாட்டுக் கழகம் எதிர் துணைவி சென் நியூஸ்ரார் விளையாட்டுக் கழகம்.


அராலி அண்ணா விளையாட்டுக் கழகம் எதிர் அராலி ஜேம்ஸ் விளையாட்டுக்கழகம். (த-86)

## ஊர்காவற்றுறை பிரதேச செயலக போட்டிகள்

யாழ்ப்பாணம்,பெப் .11

ஊர்காவற்றுறை பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான ஆண், பெண் இருபாலாருக்குமான கிரிக்கெட், எல்லே போட்டிகள் எதிர்வரும் சனி, ஞாயிறு தினங்களில் இடம்பெறவுள்ளன.

இதில் ஆண், பெண் இருபாலாருக்குமான கிரிக்கெட் போட்டி சனிக்கிழமையும், ஆண், பெண் இருபாலாருக்குமான எல்லே போட்டி ஞாயிற்றுக்கிழமையும் ஊர்காவற்றுறை பொது மைதானத்தில் இடம்பெறும். (த-23)



யாழ்ப்பாணம் புனித பத்திரிசியார் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி அண்மையில் நடைபெற்றது. இதில் 19 வயது ஆண்களுக்கான 100 மீற்றர் தடை தாண்டல் போட்டியில் வீரர்கள்.... (த-20-21)

## முரசுமோட்டை முரசொலி அசத்தல் வெற்றி

யாழ்ப்பாணம்,பெப் .11

கண்டாவளைப் பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான பெண்களுக்கான வலைப்பந்தாட்டப் போட்டியின் இறுதியாட்டத்தில் முரசு மோட்டை முரசொலி விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்றுச் சம்பியனானது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை பரந்தன் இளைஞர் வட்ட விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் முரசு மோட்டை முரசொலி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து பிரமந்தனாறு புதிய சூரியன் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.

இதில் முரசுமோட்டை முரசொலி விளையாட்டுக்கழக அணி 9:8 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்றுச் சம்பியனானது. (த-23)

# வென்றது கே.சி.சி.சி.

வலி.வடக்கு. பெப்.11

கொக்குவில் வளர்மதி சனசமூக நிலையம் அழைக்கப்பட்ட கழகங்களுக்கு இடையே 31 ஆவது ஆண்டாக நடத்தும் அமரர்களான விக்ரம், இராஜன், கங்கு ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான 30 பந்துப் பரிமாற்றம் கொண்ட கிரிக்கெட்போட்டியின் ஆட்டம் ஒன்றில் கொக்குவில் கே.சி.சி.சி. விளையாட்டுக்கழகம் 51 ஓட்டங்களினால் வெற்றி பெற்றது.

கொக்குவில் இந்துக் கல்லாரி மைதானத்தில் நடை பெற்ற ஆட்டத்தில் கொக்குவில் கே.சி.சி.சி. விளையாட்டுக்கழகமும் யாழ்ப்பாணம் ஜொலி ஸ்ரார் விளையாட்டுக் கழகமும் மோதிக்கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய கொக்குவில் கே. சி.சி.சி. விளையாட்டுக்கழகம் 28 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 09 இலக்குகளை இழந்து 219 ஓட்டங்களைப் பெற்றது.

உமாகாந் 75 ஓட்டங்களையும், ஆதித்தன் 41 ஓட்டங்களையும், இராகுலன் 24 ஓட்டங்களையும், ஜனுதாஸ் 20 ஓட்டங்களையும் பெற்றதுடன் உதிரிகளாக 29 ஓட்டங்களும் பெறப்பட்டன.

ஜொலி ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தைச் சோந்த பிரசன்னா 03 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 18 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளையும், சைலேஸ்வரன், வாமணன், மதுசன் தலா 6 பந்துப் பரி மாற்றங்கள் பந்து வீசி முறையே 34, 41, 62 ஓட்டங்களைக் கொடுத்து தலா 2 இலக்குகளையும் கைப்பற்றினார்கள்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகம் 25 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் அனைத்து இலக்குகளையும் இழந்து 168 ஓட்டங்களைப் பெற்றது.

மணிவண்ணன் 42 ஓட்டங்களையும், பிரசன்னா 33 ஓட்டங்களையும், சந்திரகுமார் 23 ஓட்டங்களையும், சஜீபன் 17 ஓட்டங்களையும் பெற்றனர்.

கொக்குவில் கே.சி.சி.சி. விளை யாட்டுக் கழகத்தைச் சோந்த ஜெயரூபன் 06 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 36 ஓட்டங்களுக்கு 5 இலக்குகளையும், பவி ஜெனுதாஸ் தலா 6 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி முறையே 40, 45 ஓட்டங்களைக் கொடுத்து தலா 2 இலக்குகளையும், பிரதீசன் 23 ஓட்டங்களுக்கு ஓர் இலக்கையும் கைப்பற்றினார்கள். (த-86)

# நெடுந்தீவு சென்.ஜோன்ஸ் மகளிர் அணி சம்பியன்

யாழ்ப்பாணம், பெப்.11

நெடுந்தீவு பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே நடத்தப்பட்ட பெண்களுக்கான வலைப்பந்தாட்டச் சுற்றுத் தொடரின் இறுதியாட்டத்தில் நெடுந்தீவு சென்.ஜோன்ஸ் விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்றுச் சம்பியனாகத் தெரிவாகியது.

கடந்த வாரம் நெடுந்தீவு சிக்கிரியாம்பள்ள மைதானத்தில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் நெடுந்தீவு சென்.ஜோன்ஸ் வி.க. அணியை எதிர்த்து நெடுந்தீவு சென். அன்ரனிஸ் வி.க. அணி மோதியது.

அதில் நெடுந்தீவு சென். ஜோன்ஸ் விளையாட்டுக் கழக அணி 12:05 என்ற புள் ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றுச் சம்பியனானது. (ற-23)

# உழவர் ஒன்றிய வி.க. சம்பியனாகத் தெரிவு

யாழ்ப்பாணம், பெப்.11

கரைச்சிப் பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான மகளிர் உதைபந்தாட்டச் சுற்றுத் தொடரின் ஆட்டங்கள் உருத்திரபுரம் உழவர் ஒன்றிய விளையாட்டுக் கழக மைதானத்தில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது.

இறுதியாட்டத்தில் உருத்திரபுரம் உழவர் ஒன்றிய விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து மகாதேவா விளையாட்டுக் கழக அணி மோதியது.



இதில் உருத்திரபுரம் உழவர் ஒன்றிய விளையாட்டுக் கழக அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ற-23)

# ஆண்கள் கரப்பந்தாட்டம் அரியாலை ஐக்கியம் வெற்றி

நல்லூர் பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கு இடையிலான ஆண்களுக்கான கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டத்தில் அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்றுச் சம்பியன் ஆனது.

கடந்த வாரம் முத்துத்தம்பி கரப்பந்தாட்ட மைதானத்தில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் அரியாலை ஐக்கிய விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து மணியந் தோட் டம் ஐக்கிய விளையாட் டுக்கழக அணி மோதிக் கொண்டது.



3 செற்களைக் கொண்ட இறுதியாட்டத்தில் அரியாலை ஐக்கிய விளையாட்டுக்கழக அணி 25:14, 25:19 என்ற புள்ளி அடிப்படையில் வென்று சம்பியன் ஆனது. (த-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நோர்வேக்கு நான்கு பதக்கங்கள்



ரஷ்யாவில் நடைபெற்று வரும் பனிக்கால ஒலிம்பிக் போட்டிகளில் நோர்வே நான்கு பதக்கங்களை வென்று பதக்கப்பட்டியலில் முன்னிலையில் உள்ளது.
இரண்டு தங்கம் மற்றும் ஒவ்வொரு வெள்ளி மற்றும் வெண்கலப் பதக்கங்களை நோர்வே பெற்றிருக்கிறது.
கனடா மற்றும் நெதர்லாந்து ஆகிய நாடுகள் ஒவ்வொரு தங்கப் பதக்கங்களுடன் தலா மூன்று பதக்கங்களை வென்றுள்ளன. அமெரிக்கா ஒரு தங்கப் பதக்கத்தை மாத்திரம் வென்றுள்ளது. (த)


## 2014 ஐ.பி.எல் தென்னாபிரிக்காவில்?




2014 ஆம் ஆண்டு ஐ.பி.எல் தொடர் தென்னாபிரிக்காவில் நடைபெற அதிக வாய்ப்புக்கள் உள்ளன. பங்களாதேஷ், ஐக்கிய அரபு ராச்சியம் மற்றும் தென்னாபிரிக்கா ஆகிய நாடுகளில் நடத்தலாம் என இறுதி முடிவு எடுக்கப்பட்டுள்ளது.
2014 ஐ.பி.எல் ஏலம் நிறைவடைந்ததும் எங்கு நடத்துவது என முடிவு எடுக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.
இந்தியாவின் தேர்தல்கள் ஏப்ரல் மாதமளவில் நடைபெற உள்ளமையே இந்த மாற்றத்திற்கு காரணமாகும். 2009ஆம் ஆண்டு போட்டிகள் தென்னாபிரிக்காவில் நடத்தப்பட்டன.
தேர்தல்களின் அடிப்படையில் பாதிப் போட்டிகளை இந்தியாவிலும் பாதிப்போட்டிகளை வெளி நாடுகளிலும் நடத்துவது என்ற திட்டம் உள்ளதாக இந்தியக் கிரிக்கெட் சபை உத்தியோகத்தர்கள் தெரிவித்துள்ளனர்.
ஏப்ரல் மாதத்தில் தேர்தல் இடம்பெறின் முதற் கட்டப் போட்டிகளை வெளிநாடுகளிலும் இறுதிக்கட்டப் போட்டிகளை இந்தியாவிலும் நடத்த முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மே மாதத்தில் தேர்தல் இடம்பெறின் முதற்கட்டப் போட்டிகள் இந்தியாவிலும், இறுதிக்கட்டப் போட்டிகள் வெளிநாட்டிலும் நடை பெறும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.
வெளிநாட்டுப் போட்டிகள் அதிகமாக தென்னாபிரிக்காவில் நடைபெறவே வாய்ப்புக்கள் அதிகமாக உள்ளன. நேரப் பிரச்சினையை தவிர அங்கே போட்டிகள் நடைபெற வேறு தடைகள் இல்லை. பங்களாதேஷைப் பொறுத்தமட்டில் ஐந்து மற்றும் ஏழு நட்சத்திர விடுதிகள் போதியளவு இல்லை என்பதுடன் தொடர்ச்சியாகப் போட்டிகள் நடைபெறுவதனால் ஆடுகளம் போட்டிகளை நடத்தக் கூடியளவில் இருக்காது எனக் கருதப்படுகின்றது.
ஐக்கிய அரபு இராச்சியத்தைப் பொறுத்தளவில் வசதிகள் உள்ள போதும் அந்த நாட்டின் சட்டத்தின் அடிப்படையில் அனுமதிகளைப் பெறுவதில் சிக்கல்கள் இருக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. எனவே இவற்றின் அடிப்படையில் தென்னாபிரிக்காவில் போட்டிகள் நடைபெற அதிக வாய்ப்புக்கள் உள்ளன. ஆரம்பத்தில் இலங்கையில் இந்தப் போட்டிகள் நடைபெறலாம் என்ற எதிர்பார்ப்புக்கள் இருந்த போதும் இப்போது அதற்கு வாய்ப்பு இல்லாது போயுள்ளது. (த)

## கோல் அடித்த மகிழ்ச்சியில் உயிரிழந்த இங்கிலாந்து வீரர்

இங்கிலாந்தில் உதைப்பந்தாட்ட வீரர் ஒருவர் மைதானத்தில் கோல் போட்ட மகிழ்ச்சியில் ஆரவாரம் செய்த போது திடீரென ஏற்பட்ட நெஞ்சுவலியால் மைதானத்திலேயே உயிரிழந்த சோக சம்பவத்தால் அந்தப் பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.
இங்கிலாந்தில் உள்ள மன்செஸ்டர் என்ற இடத்தில் உள்ள ஓர் உதைப்பந்தாட்ட மைதானத்தில் மத்தியூ பேர்கஸ் என்ற 20 வயது இளைஞர் உள்ளூர் போட்டி ஒன்றில் தனது நண்பர்களுடன் விளையாடிக்கொண்டிருந்தார். இதன்போது அவரது நண்பர்கள் கடத்திய பந்தை மிக லாவகமாக விளையாடி கோல் போட்டார். கோல் போட்ட மகிழ்ச்சியில் துள்ளிகுதித்த மத்தியூவுக்கு திடீரென நெஞ்சு வலி ஏற்பட்டது. அதனால் மைதானத்திலேயே நினைவிழந்தார்.





மத்தியூ பேர்கஸின் நண்பர்கள் அவரை உடனடியாக வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்றனர். வைத்தியசாலையில் அவரைப் பரிசோதித்த பின் அவர் ஏற்கனவே இறந்துவிட்டதாகத் தெரிவித்தனர். பின்னர்தான் அவர் மைதானத்திலேயே இறந்துவிட்டமை தெரிய வந்தது. மத்தியூ பேர்கஸ் மரணமடைந்த செய்தியைக் கேட்டதும் அவரது தாய் சாரா, பாட்டி ஹல்டா கிரகரி மற்றும் அவரது சகோதரி எமி ஆகியோர் கதறி அழுதனர். சரியாக ஏழு வருடங்களுக்கு முன் இதே நாளில்தான் மத்தியூ பேர்கஸின் தந்தையும் நெஞ்சு வலியால் மரணம் அடைந்ததாக அவரது தாய் செய்தியாளர்களிடம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (த)

## இந்திய கிரிக்கெட் மகிழ்ச்சியில்....




சர்வதேச கிரிக்கெட் சபையின் புதிய அதிகார யாப்பு நிறைவேற்றப்பட்டமையை இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை வரவேற்றுள்ளது.
சிங்கப்பூரில் இடம்பெற்ற வாக்கெடுப்பின்போது இந்தப் புதிய யாப்புக்கு எட்டு வாக்குகள் கிடைத்த நிலையில் நிறைவேற்றப்பட்டிருந்தது. இதில் இலங்கையும் பாகிஸ்தானும் கலந்து கொள்ளவில்லை.
எனினும் இந்த யாப்பு நிறைவேற்றப்பட்டுள்ள நிலையில், தொடர்ந்து சர்வதேச கிரிக்கெட் போட்டிகளை வலுப்படுத்தும் வகையில் செயற்படவிருப்பதாக இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை தெரிவித்துள்ளது. (த)

## அக்ரமுக்கு அபராதம்



பாகிஸ்தான் முன்னாள் கிரிக்கெட் வீரர் வசிம் அக்ரமுக்கு போக்குவரத்து விதிமுறையை மீறிய குற்றச்சாட்டில் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.
வசிம் அக்ரம் தனது காரில் 78 கி.மீ. வேகத்தில் சென்றுள்ளார். அதனை அடுத்து அப்பகுதியில் பணியில் இருந்த போக்குவரத்துக் கண்காணிப்பாளர் ஒருவர் அக்ரமின் காரைத் தடுத்து நிறுத்தி, குறிப்பிட்ட சாலையில் 60 கி.மீ. வேகத்தில் மட்டுமே காரை ஓட்ட வேண்டும். நீங்கள் அதை மீறியதால் அபராதம் கட்ட வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.
இதையடுத்து வசிம் அக்ரம் அவரிடம் வாக்குவாதம் எதுவும் செய்யாமல் அபராதத் தொகையை செலுத்தி விட்டு சென்றுள்ளார். (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோல்வியிலும் டோனி சாதனை



அணித்தலைவர் டோனியுடன் வீரர்கள்

வெளிநாட்டு மைதானத்தில் இந்தியக் கிரிக்கெட் அணியின் தோல்வி தொடர்கிறது. நியூசிலாந்தில் சுற்றுப் பயணம் செய்து விளையாடிவரும் டோனி தலைமையிலான இந்திய அணி 5 போட்டி கொண்ட ஒரு நாள் தொடரை 0:4 என்ற கணக்கில் இழந்தது.

2 டெஸ்ட் போட்டித் தொடரில் ஆக்லாந்தில் நடந்த முதல் டெஸ்டில் இந்திய அணி 40 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோற்றது. கடந்த 2 ஆண்டுகளில் இந்திய அணி வெளிநாட்டு மண்ணில் டெஸ்டில் சந்திக்கும் 10ஆவது தோல்வியாகும்.

இந்திய அணி கடைசியாக 2011ஆம் ஆண்டு ஜூன் மாதம் மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான கிங்ஸ் டன் டெஸ்டில் 63 ஓட்டங்களால் வெற்றி பெற்றது. அதன் பிறகு இந்திய அணி வெளிநாட்டு மைதானத்தில் இதுவரை வெற்றி பெற வில்லை. 10 டெஸ்டில் தோற்றது. 3 டெஸ்டில் (மேற்கிந்தியத் தீவுகள் 2, தென்னாபிரிக்கா 1 சமநிலை செய்தது.

இங்கிலாந்துக்கு எதிராக 4 டெஸ்டிலும், ஆஸ்திரேலியாவுக்கு எதிராக 4 டெஸ்டிலும் தென்னாபிரிக்காவுக்கு எதிராக ஒரு டெஸ்டிலும், தற்போது நியூசிலாந்துக்கு எதிரான முதல் டெஸ்டிலும் தோற்றது.

இந்தப் 10 தோல்விகளும் டோனி தலைமையில் தான் கிடைத்தது. அதற்கு முன்பு அவரது தலைமையிலான அணி 2010 ஆம் ஆண்டு தென்னாபிரிக்காவுக்கு எதிரான செஞ்சூரியன் டெஸ்டில் இன்னிங்ஸ் மற்றும் 25 ஓட்டங்களில் தோற்றது.

டோனி அணித் தலைவராக இந்திய அணி வெளிநாட்டில் 11 டெஸ்டில் தோற்றுள்ளது. இது மோசமான நிகழ்வாகும். இதற்கு முன்பு கங்குலி, பட்டோடி, அசாருதீன் ஆகியோர் தலைமையில் வெளிநாட்டு மைதானத்தில் இந்திய அணி தலா 10 டெஸ்டில் தோற்று இருந்தது.

அதற்கு அடுத்தபடியாக பிஷன்சிங் பேடி தலைமையில் 8 டெஸ்டிலும், கவாஸ்கர், டெண்டுல்கர் தலைமையில் தலா 6 டெஸ்டிலும் வெளிநாட்டில் தோற்று இருந்தன. (த)

## ஐ.பி.எல் கிரிக்கெட் சூதாட்டம் விசாரணை அறிக்கை மன்றுக்கு

ஐ.பி.எல் கிரிக்கெட் போட்டிகளில் சூதாட்டம் நடந்ததாக எழுந்த முறைப்பாட்டை விசாரித்த நீதிபதி முட்கலின் விசாரணை அறிக்கை நேற்று உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது.

அறிக்கையில், இந்திய கிரிக்கெட் சங்கத்தின் தலைவர் சீனிவாசனின் மருமகனான மெய்யப்பன் மீது கூறப்பட்ட சூதாட்டக் குற்றச்சாட்டுகள் உண்மை என்று கூறப்பட்டுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஐ.பி.எல் கிரிக்கெட் சூதாட்டப் புகாரில் சிக்கியுள்ள சீனிவாசன், ஸ்ரீசாந்த், அங்கித் சவான், அஜித் சாண்டிலா ஆகியோர் மீதான குற்றச்சாட்டுகள் அனைத்தும் நிரூபிக்கப்பட்டுள்ளன என்று செய்தியாளர்களிடம் பேசிய நீதிபதி முகுல் முட்கல் தெரிவித்துள்ளார். (த)

## தர வரிசையில் பின்தங்கினர் இந்திய வீரர்கள்

International Cricket Council

சர்வதேச கிரிக்கெட் சபையின் (ஐ.சி.சி., ) சார்பில் டெஸ்ட் அரங்கில் சிறந்து விளங்கும் வீரர்களுக்கான தரவரிசைப் பட்டியல் வெளியானது.

இதில் சிறந்த துடுப்பாட்ட வீரர்களுக்கான பட்டியலில், தென்னாபிரிக்காவின் டிவில்லியர்ஸ்(912 புள்ளி) முதலிடத்திலும், இலங்கையின் சங்கக்கார(879) 2 ஆம் இடத்திலும், மேற்கிந்திய தீவுகள் அணியின் சந்தர்போல்(876) 3ஆம் இடத்திற்கு உள்ளனர்.

இந்திய வீரர் புஜாரா (832) 5 ஆவது இடத்தில் இருந்து 6 ஆவது இடத்துக்கு தள்ளப்பட்டார், விராட் கோஹ்லி(738) தனது 11ஆவது இடத்தை தக்கவைத்துக் கொண்டார்.

அணித்தலைவர் டோனி(592) 5 இடங்கள் பின்னுக்கு தள்ளப்பட்டு 33ஆவது இடம் பிடித்தார்.

சிறந்த டெஸ்ட் பந்துவீச்சாளர்களுக்கான தரவரிசையில் இந்திய வீரர் அஸ்வின்(752) ஒரு இடம் பின்தங்கி 8ஆவது இடம் பிடித்தார். மற்றொரு இந்தியப் பந்து வீச்சாளர் பிரக்ஜான் ஓஜா(734) இரண்டு இடங்கள் சரிந்து 11ஆவது இடத்துக்கு தள்ளப்பட்டார்.

முதல் இரு இடங்களையும் தென்னாபிரிக்க வீரர்களான பிலாண்டர், ஸ்ரெய்ன் ஆகியோர் பெற்றனர். மூன்றாமிடத்தில் ஆஸ்திரேலியாவின் ஹரிசும் உள்ளார்.

சிறந்த சகல துறை ஆட்டக்காரருக்கான பட்டியலில் இந்தியாவின் அஸ்வின்(381) முதலிடத்தை தக்கவைத்துக் கொண்டார். பங்களாதேஷ் வீரர் சாகிப் அல் ஹசன்(364), தென் ஆபிரிக்காவின் பிலாண்டர்(335) ஆகியோர் இப்பட்டியலில் அடுத்த இரண்டு இடங்களில் உள்ளனர். (த-400)

# சுருண்டது இந்திய இளம் அணி



இலக்குகளை வீழ்த்திய மகிழ்ச்சியில் இலங்கை அணி வீரர்கள்

**இலங்கை அணி சார்பாக சமரவிக்கிரம 89 ஓட்டங்களையும் டுமிந்து ஆட்டமிழக்காமல் 50 ஓட்டங்களையும் பெற்றனர்.**

சர்வதேச கிரிக்கெட் சபை சார்பில் இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை 19 வய துக்கு உட்பட்டோருக்கான 50பந்துப் பரிமாற்ற உலக கிண்ணக் கிரிக்கெட் தொடர் நடத்தப்படுகிறது. 2012 ஆம் ஆண்டு ஆஸ்திரேலியாவில் நடந்த தொடரில் உன்முக்த் சந்த் தலைமையிலான இந்திய அணி கிண்ணத்தை வென்று சாதித்தது. இத்தொடர் இந்த ஆண்டு ஐக்கிய அரபு எமிரேட்சில் எதிர்வரும் 14 ஆம் திகதி ஆரம்பமாகின்றது. இதில் நடப்பு சம்பியன் இந்திய அணி தனது முதல் போட்டியில் பாகிஸ்தானை எதிர்கொள்கிறது. இதற்குத் தயாராகும் விதமாக பயிற்சி போட்டிகள் நேற்று ஆரம்பமாகின. இதில் இந்தியா, இலங்கையை எதிர்கொண்டது. நாணயச்சுழற்சியில் வென்ற இந்திய அணித் தலைவர் விஜய் ஜோல், முதலில் துடுப்பாட்டத்தைத் தேர்வு செய்தார்.

இந்திய அணிக்கு பெயினஸ் (24), ஹெர்வட்கர் (29)இணை நல்ல ஆரம்பம் அளித்தது. தொடர்ந்து வந்த தலைவர் விஜய் ஜோல் (29), சஞ்சு சாம்சன் (10) நிலைக்கவில்லை. பின் வந்த ஸ்ரியாஸ் (31) ஓரளவு கைகொடுத்தார். கடைசி நேரத்தில் ஹூடா (39) மட்டும் கைகொடுக்கஇந்திய அணி 45.5 பந்துப் பரிமாற்றங்களில் 209 ஓட்டங்களுக்குள் சுருண்டது'. இலங்கை அணிக்கு பெர்ணான்டோ அதிகபட்சமாக 4 இலக்குகளைச் சாய்த்தார். சண் பெர்னாண்டோ 2 இலக்குகளையும் ராஜபக்ச ஒரு இலக்கினையும் வீழ்த்தினர். இதன் மூலம் இலங்கை அணிக்கு 201ஓட் டங்கள் வெற்றி இலக்காக இந்திய அணி நிர்ணயித்தது. தொடர்ந்து களமிறங்கிய இலங்கை அணி 48.5 பந்துப்பரிமாற்றங்களில் 5 இலக்குகளை மட்டும் இழந்து 212 ஓட்டங்களைப் பெற்று 5 இலக்குகளால் வெற்றி பெற்றது. இலங்கை அணி சார்பாக சமரவிக்கிரம 89 ஓட்டங்களையும் டுமிந்து ஆட்டமிழக்காமல் 50 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் யாதவ் 3 இலக்குகளையும் ஹூான் 2 இலக்குகளையும்கைப் பற்றினர்.

**பிரெஞ் மொழியை பிரெஞ் முறையில் கற்றுக்கொள்ளுங்கள்**

af பிரெஞ்சு மொழி கற்பிப்பதற்கு French அரசாங்கம் மற்றும் French Embassy ஆகியன அங்கிகரிக்கும் வடமாகாணத்திலுள்ள ஒரேயொரு சர்வதேச நிறுவனம் (Only Official Centre) Alliance Française de Jaffna (AF) மட்டுமே. திருமணம் மூலம் France செல்பவர்களுக்கும் France இல் French படிப்பதற்கு / தொழில் புரிவதற்கும் எமது Certificates மட்டுமே Embassy இல் அங்கிகரிக்கப்படுகிறன.

புதிய வகுப்புகள்; விரைவில்... **021 222 8093**

வடமாகாணத்தில் ஒரே முகவரி 61, Kachcheri-Nallur Road, Jaffna (கச்சேரியை அடுத்துள்ள சந்தியில் /Racca வீதியில் British Council அருகில்)

**கட்டார் நாட்டில் உடனடி வேலை வாய்ப்பு**

கட்டார் நாட்டிலுள்ள முன்னணி பல்கலைக்கழகத்தில் Office boy 10 பேர் உடன் தேவை.

தகைமை: ஆங்கிலம் ஓரளவு பேசக்கூடிய ஆற்றல். (ஆங்கிலம் பேச முடியாதவர் களுக்கு Skype Interview இற்கு ஏற்ற வகையில் Two days பயிற்சி அளிக்கப்படும்)

வயது: 18-35 கைவசம் வீசா உள்ளதால் ஒரு வாரத்தில் பயணமாகலாம். அதிஉயர் சம்பளம். தங்குமிடம், மருத்துவம் இலவசம்.

தொடர்புகளுக்கு: Lanka Voice 077 058 4658 (43153)(7.6.3)

**டுபாய் நாட்டில் உடனடி வேலை வாய்ப்பு**

டுபாய் நாட்டிலுள்ள முன்னணி Company ஒன்றில் Mechine Operator 10 பேர் (சவர்க்காரம் / சம்போ) Tap தயாரிக்கும் நிறுவனத்தில் 5 பேர், Aluminium Factory- 5பேர், Hotel waiter 3பேர் உடன் தேவை. அதிஉயர் சம்பளம், தங்குமிடம், மருத்துவம் இலவசம். எதிர்வரும் 13ஆம் திகதி டுபாய் நாட்டவர்களால் காலை 9.00-2.00 மணிவரை நேர்முகத்தேர்வு நடைபெறும். பதிவுகளுக்கு முந்துங்கள். (43152) (7.6.3)

தொடர்புகளுக்கு: LankaVoice 077 058 4658, 077 666 0250

**பதவி வெற்றிடம்**

1) உதவி முகாமையாளர் ஆண் / பெண் பட்டதாரிகள் மாத்திரம் 50 வயதுக்குட்பட்டவர்கள் 2 வருட வேலை ஒப்பந்தம்

2) அலுவலக உத்தியோகத்தர் (பெண்கள்) A/L சித்தி 50 வயதுக்குட்பட்டவர்கள் 2 வருட சேவை ஒப்பந்தம்

நேர்முகத்தேர்வு
12.02.2014 புதன்
பி.ப. 5.30 மணி

அனைவருக்கும் சனி, ஞாயிறு வேலைநாளாகும் வெள்ளிக்கிழமைகளில் ஒய்வு வழங்கப்படும் தினமும் பி.ப. 6 மணிக்கே பணி நிறைவடையும்

பொதுமுகாமையாளர்
திசைகாட்டி (பிறைவேற்) லிமிற்
175, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 11.02.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.